கல்கி



KALKI பிப்ரவரி 12, 1956 4 அணா



ராமுவுக்கு வீடு திரும்ப நடுக்கம்...
SUNLIGHT
ஸன்லைட் சோப்

ஸ்ரீ
கல்கி
மலர் 15 இதழ் [illegible]
மன்மத ஆண்டு தை 30
பிப்ரவரி 12, 1956

பொருளடக்கம்

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.



சிவாஜி ஜெமினி
கணேசன் · கணேசன்
சாவித்திரி
சாந்தகுமாரி...எம்.என்.ராஜம்
நாகய்யா...பிரண்ட ராமசாமி
சிவதாணு..நடராஜன்..பலராம்..
பி.எஸ்.ஞானம்...அங்கமுத்து
நடித்த
ராகினி பிலிம்ஸ்
பெண்ணின்
பெருமை
டைரக்ஷன்... பி.புல்லையா
வசனம், பாடல்கள்...தஞ்சை ராமய்யதாஸ்
தென்னாடெங்கும்
பெப்ரவரி 17
உ
வெளியீடு



மலர் 15
இதழ் 28

தமிழ்த்திரு நாடு தன்னைப் - பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — *பாரதியார்*

மன்மத ௵
தை மீ 30

இலங்கையின் அரசியல் மொழி

இலங்கை மக்கள் தங்களுடைய ஒன்பதாவது சுதந்திர தினத்தைச் சென்ற பெப்ருவரி நான்காம் தேதி யன்று விமரிசையாகக் கொண்டாடி யிருக்கிறார்கள். உலகின் பல பகுதிகளிலிருந்தும் இலங்கை மக்களுக்கு வாழ்த்துச் செய்திகள் வந்து குவிந்திருக்கின்றன. என்றாலும், மக்கள் அனைவரும் இந்த விழாவில் பூரணமாகக் கலந்து கொள்ளாத வகையில், தமிழர்கள் வாழும் பகுதிகளிலுள்ள பொது ஸ்தாபனங்களும் நகரசபை ஸ்தாபனங்களும் இந்த விழாவைப் பகிஷ்கரித்துள்ளன. இது சுதந்திர விழாவின் விமரிசையிலே ஒரு பெருங் குறையாக இருந்திருக்கிறது. இதற்குக் காரணம் இலங்கையிலே ஏற்பட்டுள்ள மொழிக் குழப்பந்தான்.

பழைய சரித்திரங்களைச் சந்தேகத்துக்கு இடமில்லாமல் தெளிவாகக் கண்டவர் யாருமில்லை. ஏதோ இப்பொழுது காணப்படும் குறிகளையும், சின்னங்களையும் வைத்துக் கொண்டு கற்பனா சக்தியினால் சரித்திரம் என்கிற ஒரு சிருஷ்டியைச் செய்து, அதன் மூலம் ஒருவரை ஒருவர் பாராட்டியோ அல்லது குற்றம் சொல்லியோ வருகிறோம். மிகவும் சந்தேகத்துக்கு இடமான விஷயங்களைப் பல தடவைகள் திரும்பத் திரும்பச் சொல்லியும், பிறர் சொல்லக் கேட்டும் வருவதினால் அவற்றையே கண்கண்ட உண்மையைப் போலக் கருதி உணர்ச்சி வேகங்களைப் பெருக்கிக்கொண்டு வருகிறோம். அமைதிக் குறைவை உண்டாக்கிக் கொள்கிறோம்.

ஒரு குழந்தைக்கு அதன் தாய் பேசக் கற்றுக் கொடுக்கிறாள். பள்ளிக்கூடத்திற்குப் போவதற்கு முன்பே இலக்கண மரபோடு தாய் பாஷையைப் பேசக் கற்றுக் கொண்டு விடுகிறது குழந்தை. பிறகு அதை யாரும் மாற்றுவதற்கில்லை. எந்த ஊர் சென்றாலும், பேசும் பாஷையாகத் தாய்மொழியே ஸ்திரமாக நிற்கிறது. பள்ளிக் கூடங்களில் எந்த பாஷையை எவ்வளவு கற்ற போதிலும் தாய் சொல்லித் தந்த மொழியே உடலோடு பிறந்த குரலாக மாறாமல் நிற்கிறது. மற்றதெல்லாம் கல்வி; தாய்மொழியோ சுபாவ மொழி. இது நாம் தினமும் சாதாரணமாகப் பார்க்கிற காரியம்.

முன் காலத்தி லெல்லாம் போக்குவரவு சாதனங்கள் குறைவு. இன்றோ உலகமெல்லாம் ஒரே நாடாக ஆகிப்போயிருக்கிறது. இன்று கிளம்பினால் நாளை இங்கிலாந்து போய்ச் சேருகிறோம். வியாபாரமும் வாழ்க்கை உறவாடல்களும் மிகவும் விரிந்து போயிருக்கின்றன. எந்த நாட்டிலும் வேறு பாஷையைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் பல தலைமுறையாக வாழ்ந்து வருகிறார்கள். தேசப் படத்தில் எந்தக் கோடு எப்படி இழுத்த போதிலும், மொழிக் கலப்பு இருந்தே தீரும்.

இலங்கையின் ஆதிவாசிகள் யார்? வங்கத்திலிருந்து சிங்களத்தார் வந்தார்களா அல்லது அவர்களே இலங்கையின் பூர்வகுடிகளா? தமிழர்கள் முந்தினார்களா அல்லது சிங்களத்தவர்கள் முந்தினார்களா? ஆதிவாசிகளை ஒழித்துக் கட்டியது யார்? — இப்படிப் பல சிக்கலான பிரச்னைகளை எடுத்துக் குழப்பிக் கொண்டிருக்க வேண்டிய தில்லை. இன்றுள்ள நிலைமையைப் பார்த்து அமைதிக்கு வேண்டிய வகையில் இலங்கை மக்களும் அரசாங்கமும் தாமதமின்றி ஒரு தீர்மானத்துக்கு வரவேண்டும். தமிழரும், சிம்மளத்தவரும், — இருவரும் சிங்களத் தீவின் பிரஜைகளாகச் சந்தேகத்துக்கு இடமின்றி அரசு புரியவேண்டும். நாட்டின் மக்கள் பேசும் இந்த இரண்டு மொழிகளுமே தேச பாஷைகள் என்று சாசனம் செய்ய வேண்டும். பெரும்பான்மையோரின் பாஷையைப் போலவே சிறுபான்மையோர் பாஷையும் கௌரவம் பெற்று, அனைவருக்கும் சுதந்திரப் பொறுப்புணர்ச்சி ஏகோபித்து உண்டாக வேண்டும். இதுவே சுதந்திர தினத்தை யொட்டி இலங்கை அரசியலிலே நாம் கோரும் ஆசை.

திருச்சியில் தமிழில் நிர்வாகம்

தமிழ் மொழியிலேயே அரசாங்க அலுவல்களை நடத்துவது என்ற முயற்சியைப் பரீட்சார்த்தமாகத் திருச்சி ஜில்லாவில் ஆரம்பித்தார்கள் அல்லவா! இப்பொழுது இந்தப் பரீட்சையை மேலும் ஒரு வருஷத்துக்கு நீடிப்பது என்று சென்னை அரசாங்கம் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள்.

சென்னை சர்க்காரின் இந்த உத்தரவை மனமாரப் பாராட்டுகிறோம். அதே சமயம் இந்த உத்தரவு செயல் முறையில் வெற்றிகரமாக நடப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளையும் சென்னை அரசாங்கம் செய்ய வேண்டும் என்று பெரிதும் விரும்புகிறோம்.

திருச்சி ஜில்லாவின் நிர்வாகம் தமிழ் மொழியில் நடக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டு, அதற்கான சோதனையைத் தொடங்கிய காலத்திலிருந்து இது வரை அந்த ஜில்லாவின் கலெக்டர்களாகவும், நிர்வாகத் தலைவர்களாகவும் யார் யாரை நியமித்தார்கள்! தமிழ் மொழியிலே நிர்வாகத்தை நடத்தக் கூடிய திறமை இருக்கிறதா என்று பார்த்து, இந்த அதிகாரிகளை அந்த ஜில்லாவுக்கு அனுப்பினார்களா என்பதை அரசாங்கம் சற்று ஆராய வேண்டும். "பரீட்சார்த்தம்" என்று சொல்லிக் கொண்டு ஒரு காரியத்தை ஆரம்பிக்கும் போது, இந்த விஷயத்தில் மிக மிகக் கவனிப்பு அவசியமாகும்.

பொறுப்பு வாய்ந்த நிர்வாகப் பதவிகளை மொழித் திறமை வாய்ந்த பண்டிதர்களிடமே ஒப்படைக்க வேண்டும் என்று நாம் சொல்வதாக எண்ணக் கூடாது. ஒரு ஜில்லாவின் நிர்வாகப் பொறுப்பையும், இலாகாக்களின் தலைமை அதிகாரத்தையும் வகிக்கக் கூடியவர்களுக்கு நிர்வாகத் திறமையும் செயல் ஆக்கமும் அத்தியாவசியம். ஆனால் அதே சமயம் தமிழ் மொழியிலே நிர்வாகப் பரீட்சையை நடத்துகிற ஜில்லாவிலே, தமிழே தெரியாத அதிகாரிகளை நியமிப்பதும், தமிழ் ஆர்வமோ தமிழ் மொழி நிர்வாகத்தில் அக்கறையோ இல்லாத உத்தியோகஸ்தர்களை அனுப்புவதும், பொருத்தமாகாது. பரீட்சார்த்தமாகச் செய்யப்படும் இந்த முக்கியமான காரியத்துக்கு நியாயமான ஆதரவு தந்ததாகாது.

இன்றுள்ள நிலைமையில் நமது அரசாங்க அதிகாரிகளில் தமிழ்ப் பயிற்சி வாய்ந்தவர்கள் மிக மிகக் குறைவு. இப்பொழுதுள்ள அதிகாரிகள் எல்லாம் தங்களுடைய ஆங்கிலப் புலமையின் அஸ்திவாரத்திலேயே நிற்பவர்கள். இந்த நிலையில் என்ன செய்வது!

தமிழ் அறிஞர்களின் ஒத்துழைப்பைப் பெற்று, மக்களுக்குப் புரிகிற எளிதான சொற்களை அவர்களோடு ஆராய்ந்து தேர்ந்தெடுத்து, அந்தச் சொற்களைச் சாமர்த்தியமாக நிர்வாகத்திலே கையாளுகிற திறமையுடையவர்களையே பொறுப்பான பீடங்களில் உட்கார்த்த வேண்டும். திருச்சி ஜில்லாவில் ஒரு காலத்தில் முனிசிபல் நிர்வாகம் நல்ல முறையில் தமிழ் மொழியிலே நடந்தது என்று சொல்லப்படுகிறது. தஞ்சை ஜில்லாவில் ஒருசமயம் நிர்வாக ஆண்டறிக்கை முழுதும் நல்ல தமிழில், எளிய தமிழில், மிக அழகாக எழுதப்பட்டு, அதைப் பலரும் பாராட்டினார்கள் என்று தெரிகிறது. இதெல்லாம் தமிழ் மொழியில் நிர்வாகத்தை நன்றாக நடத்த முடியும் என்பதற்கு அத்தாட்சிகள். நியமிக்கிற நிர்வாகத் தலைவர்களுக்குத் தமிழ்ப் புலமை இல்லாவிட்டாலும், தமிழ் அபிமானம் இருந்தால் போதும். கொஞ்சம் தமிழ் உணர்ச்சி இருந்தால் போதும். இல்லையென்றால் நிர்வாகத்தைக் குழப்பியடிப்பதோடு 'தமிழில் நிர்வாகப் பரீட்சை வெற்றிகரமாக இல்லை' என்று நமது மந்திரிமார்களே அறிவிக்கக் கூடிய நிலைமை தான் ஏற்படும்! ஏற்படவும் செய்தது!

இன்னும் ஒரு வருஷத்துக்குத் திருச்சியில் இந்தச் சோதனையை நீடிப்பது என்று தீர்மானித்தது பெரிதில்லை. நீடித்து வெற்றிகரமாக நடைபெறுவதற்கு வேண்டிய சூழ்நிலையை உண்டாக்க வேண்டும். ஒரு நிர்வாகச் சொல்லுக்குப் பல தமிழ்ச் சொற்களைக் கண்டு உபயோகித்து, இதில் எந்தச் சொல் மக்கள் மனத்தில் எளிதாகப் புகுந்து செல்கிறது என்பதையெல்லாம் அக்கறையோடு ஆராய்ந்து கண்டு பாஷையைக் கையாள வேண்டும். அவசியப்பட்டால் ஜில்லா நிர்வாக மொழிக்கு என்று ஒரு ஆலோசனைக் குழு நியமித்து, இந்தக் குழுவினரின் ஒத்துழைப்போடு கலெக்டர்கள் நிர்வாகச் சோதனையை நடத்தலாம்.


அந்தந்த ஜில்லாக்களில் அந்தந்த மொழியிலேயே நிர்வாகம் நடக்க வேண்டும் என்ற யோசனை நல்ல யோசனை. காரியாம்சத்தில் இது வெற்றியோடு நடைபெறுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை உடனடியாகச் செய்ய வேண்டும் என்று சென்னை அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

நம்புவதே வழி

பிரிட்டிஷ் பிரதம மந்திரி ஈடனுக்கும் அமெரிக்கஜனாதிபதி ஐஸன்ஹவருக்குமிடையே முக்கியமான பேச்சு வார்த்தைகள் நடப்பதற்குச் சில நாட்களுக்கு முன் ஒரு மகத்தான காரியம் நிகழ்ந்தது. ரஷ்யப் பிரதமரிடமிருந்து அமெரிக்க ஜனாதிபதிக்கு ஒரு கடிதம் வந்தது. அரசியல் முக்கியம் பெற்ற கடிதம் என்று பேசிக்கொள்ளப்பட்டது. பின்னர் விரைவிலேயே புல்கானின் எழுதிய கடிதமும் ஜனாதிபதியின் பதிலும் வெளியிடப் பட்டன!

ரஷ்யப் பிரதமர் உலக சமாதானத்தை முன்னிட்டு அமெரிக்க ஜனாதிபதியுடன் இருபது வருஷ உடன்படிக்கை செய்து கொள்ளத் தாம் விரும்புவதாகத் தெரிவித்தார். அமெரிக்க ஜனாதிபதி, இச் சமாதான உடன்படிக்கையிலுள்ள முக்கியமான அம்சங்கள் எல்லாம் ஐ. நா. சபையின் சட்ட திட்டங்களில் உள்ளன என்றும், மேலும் அமெரிக்கா தவிர மற்ற வல்லரசுகளும் இருப்பதால் அவற்றுடன் உடன்பாடு செய்து கொள்ளாமல்

தாமரை மலருமா?



அமிருதசரஸில் 61-வது காங்கிரஸ் மகாசபை இம்மாதம் 7-ம் தேதியிலிருந்து 13-ம் தேதி வரை நடைபெறுகிறது.

தன்னிடம் மட்டும் செய்து கொள்வதில் பயனில்லை என்றும், அத்துடன் சமாதானம் ஏற்பட வேண்டுமென்றால் வெறும் காகித உடன்படிக்கைகளில் கையெழுத்து இடுவதால் மட்டும் பயனில்லை, காரியங்களில் ஈடுபட வேண்டும் என்றும் பதிலளித்து விட்டார்.

பிரதம மந்திரி ஈடனோ, "பழைய உடன்படிக்கையைக் கிழித்தெறிந்து விட்ட ரஷ்யா இப் புது உடன்படிக்கையை எவ்வளவு தூரம் மதிக்கும் என்று நம்புவது!" என்ற தோரணையில் பதிலளித்து விட்டார்.

ஆனாலும் ஜனாதிபதியின் பதிலுக்கு மீண்டும் ரஷ்யப் பிரதமர் எழுதியிருக்கிறார். ஐ. நா. சபையின் சட்ட திட்டங்களில் தம்முடைய உடன்படிக்கையில் கூறப்பட்ட ஷரத்துகள் எல்லாம் இருப்பினும் இரு பெரு வல்லரசுகள், ஒன்றுக்கொன்று பகை என்று கருதப்படும் வல்லரசுகள், மீண்டும் கையெழுத்திட்டு உறுதி செய்து கொண்டால், அந்த ஷரத்துக்களை ஐ. நா. சபையில் அமுலுக்குக் கொண்டு வரப் பெரிதும் உதவியாக இருக்கும் என்றும் உலகில் யுத்த பயம் பெரிதும் குறையும் என்றும் எழுதியிருக்கிறார். அத்துடன் அமெரிக்கா மட்டுமின்றி பிரிட்டன், பிரான்ஸ் முதலிய நாடுகளுடனும் இத்தகைய உடன்படிக்கைகள் செய்து கொள்ளத் தயார் என்றும் தெரிவித்திருக்கிறார். மேலும் சமீபத்தில் உலக சமாதானத்தை நிலைநாட்ட கிரியாம்சத்தில் தன்னுடைய ராணுவத்தைக் குறைத்திருப்பதை எடுத்துக் காட்டியிருக்கிறார். பிறநாடுகளில் ரஷ்ய யுத்த தளங்கள் இருந்த நகரங்களை அந் நாடுகளுக்கே திருப்பித் தந்து விட்டதையும் எடுத்துக் கூறியிருக்கிறார்.

மொத்தத்தில் ரஷ்யப் பாரதமரின் கடிதங்களில் அமெரிக்காவுடன் எப்படியும் ஒத்துப் போய் இவ் இருபது வருஷ உடன்படிக்கை செய்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் தொனிப்பது நன்றாகத் தெரிகிறது.

அமெரிக்காவின் கடிதத்தில் சந்தேகமும் அவநம்பிக்கையுமே தொனிக்கிறது.

சந்தேகமும் அவநம்பிக்கையும் கொள்ளத் தொடங்கினால் எந்த நல்ல மனிதனிடமும் குற்றம் குறைகளைக் காணலாம். எதிர்க்கட்சியினரிடம் சந்தேகம் கொண்டு குற்றம் காண்பதில் அதிசயமில்லை.

ஸ்டாலினுக்குப் பிறகு ரஷ்ய ராஜ தந்திரத்தில் சில நல்ல மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. ரஷ்ய மக்கள் சென்ற யுத்தத்தில் அமெரிக்காவை விட யுத்தத்தின் கொடுமையை நன்கு உணர்ந்தவர்கள். அதனால் அவர்கள் சமாதானத்தைத்தான் விரும்புவார்கள். அதனால் ரஷ்யாவின் போக்கில் சந்தேகக் கண்கொண்டு பார்க்காமல், ரஷ்யாவின் வார்த்தையில் நம்பி அமெரிக்கா நடந்து கொள்ள வேண்டும்!

என்ன சேதி?

சர்க்கார் பஸ்கள்

தொழில்கள் பொது உடைமையானால், சர்க்காரின் நேரடியான மேற்பார்வைக்கு வந்தால் தொழில்கள் நன்கு வளரும் என்று எல்லாரும் நம்பினோம். ஆனால் இன்றுள்ள நிலைமையில் சர்க்கார் மேற்கொண்டுள்ள தொழில்கள் நசித்துப் பாழாகி விடுமோ என்று பீதி ஏற்படும்படி இருக்கிறது.

சென்னை சர்க்காரின் பஸ் போக்குவரத்து இதற்கு நிதரிசன உதாரணமாக இருந்து வருகிறது. முன்பு இத்தாலியிலிருந்து வாங்கிய பஸ்களில் இரண்டையே காணோம் என்று வதந்தி உலவிற்று. பிறகு கண்டக்டர்களும் இன்ஸ்பெக்டர்களும் தாங்கள் சொந்தமாகவே டிக்கட் அச்சடித்து விற்று வந்ததைப் பத்திரிகைகளில் படித்தோம். நகரில் ஓடும் பஸ்களைப் பற்றியோ சொல்ல வேண்டியதில்லை. எல்லாம் குறித்த நேரத்தில் கிளம்பிக் குறித்த நேரத்தில் போய்ச் சேருவதாகக் காகிதத்தில்தான் திட்டப்பட்டிருக்கிறது. உண்மையில் எந்தப் பாதையிலும் காலத்தில் பஸ்கள் ஒழுங்காக ஓடின என்பதைப் பார்க்க முடிவதில்லை. அங்கங்கே பஸ்கள் ஓடாமல் நடு வீதியில் நாதியற்றுக் கிடக்கும் பரிதாபத்தைத் தினம் தினம் காணலாம். இந்த லட்சணத்தில் சென்னை சர்க்கார் மேற்கொண்டிருக்கும் பஸ் நிர்வாகம் அதிகமான வருமானத்தைப் பெற்று லாபகரமாக ஒரு குறையும் இல்லாமல் நடைபெற்று வருகிறது.

சமீபத்தில் சர்க்கார் பஸ்களைச் சீர்திருத்துவதற்காக ஒரு நிபுணர் கமிட்டியை நியமித்தார்கள். அது தன்னுடைய மேலான யோசனையைக் கூறியிருக்கிறது! கேளுங்கள், அந்த யோசனையை. ஆபீஸ் நேரங்கள் தவிர மற்ற நேரங்களில் 'மலிவு' டிக்கட் கொடுக்கலாம். ஆபீஸ் நேரத்தில் அதிக பஸ்கள் விடலாம். பஸ்கள் ரிப்பேர் செய்வதற்கு அதிக தொழிற்சாலைகள் ஏற்படுத்தலாம். இப்படி இன்னும் பல யோசனைகள்.

தனிப்பட்ட முதலாளிகளிடம் இருந்ததை விட இப்பொழுது எவ்வளவோ வசதியான தொழிற்சாலையும், தொழிலாளர்களும், சிப்பந்திகளும் இருப்பதாக அறிகிறோம். இருந்தாலும் பஸ் போக்குவரத்தில் நிர்வாகத் திறமை இல்லை. காரணம் எதுவாக இருந்தாலும் இது போன்ற நிர்வாகக் குறைவு, சோஷலிஸ அடிப்படையில் நிர்மாணம் ஆகிக்கொண்டிருக்கும் நமது நாட்டின் அமைப்புக்குப் பெரும் அவமானம் ஆகும்.

மூன்றும் வகுப்புப் பிரயாணிகள்

நாடு சுதந்திரம் பெற்ற பிறகும், பெறுவதற்கு முன்பும் ஒரே நிலையில் இருந்து அவதிப்படுபவர்கள் யாராவது உண்டென்றால் அவர்கள் மூன்றும் வகுப்புப் பிரயாணிகள்தான்.

ஆனால் ரயில்வேக்கு அதிக வருமானம் மூன்றாவது வகுப்புப் பிரயாணிகளால் தான் கிடைத்து வருகிறது என்ற உண்மையை யாரும் மறுக்க முடியாது. இருந்தாலும் அவர்கள் மாற்றாந்தாய் பிள்ளை போல ஒதுக்கப்பட்டே வருகிறார்கள். நூறு மைல் இருநூறு மைல் பிரயாணம் செய்தாலும் அவர்கள் எந்த நிலையில் நின்றார்களோ, உட்கார்ந்தார்களோ, சாய்ந்தார்களோ அதே நிலையில் தான் பிரயாணம் செய்ய வேண்டும். மூன்றும் வகுப்புப் பெட்டியில் உள்ள சுகாதார வசதி அறையில் போதுமான அளவு தண்ணீர்கூட இருப்பதில்லை. முதல் வகுப்புப் பிரயாணிகளே பல சமயங்களில் தண்ணீருக்குத் தவிக்கும்போது மூன்றாவது வகுப்புப் பிரயாணிகளைப் பற்றிச் சொல்ல வேண்டுமா?

இந்த மாதிரி நிலை நீடித்தால் மக்கள் மனப்பான்மை எவ்வாறு இருக்கும் என்று நாம் கூற வேண்டியதில்லை. இந்தச் சமயத்தில் மூன்றாவது வகுப்புப் பிரயாணிகள் தூங்குவதற்கு வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று ரஷ்யா சென்று திரும்பிய ரயில்வே கோஷ்டியின் சிபார்சை அமுல் செய்யப் போகிறார்கள் என்று கேள்விப்படும் போது, 'அப்பாடா!' என்று பெருமூச்சு விடத் தோன்றுகிறது.

இது வெறும் அறிக்கையாக இல்லாமல் உடனே அமுலுக்குக் கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அப்பொழுதுதான் ரயிலில் பிரயாணம் செய்யும் மக்கள் சுதந்திரம் பெற்ற பலனையும், சுதந்திர சர்க்காரின் திறமையையும் உணர்ந்து மகிழ்வார்கள்.

திருவையாறு திருவிழா

சென்ற வாரத்தில் தியாகய்யர் மகா சமாதி அடைந்த திருவையாற்றில் சங்கீத வித்வான்களும், சங்கீத ரஸிகர்களும் கூடி கர்நாடக சங்கீதத்துக்குப் புத்துயிர் அளித்த மகானுக்கு அஞ்சலி செலுத்தினார்கள்.

இந்த ஆண்டு தியாகய்யர் விழா சிறப்பாக நடைபெறுவதற்குப் பாலக்காடு மணி ஐயர் பொறுப்பேற்று நடத்தியது தான் காரணம் என்று அறிகிறோம். அவருக்குத் தமிழ் நாட்டு சங்கீத ரஸிகர்களின் சார்பாக நமது பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

திருவையாறு தியாகய்யர் திருவிழாவில் பிரபல நாகஸ்வர வித்வான்களின்

ஒத்துழைப்பும் பூரணமாக அமையும் வகையில் இந்தத் திருவிழா இனியும் ஆண்டுதோறும் தொடர்ந்து நடைபெற வேண்டும் என்று விரும்புகிறோம்.

இவ்விதம் ஆண்டுதோறும் தியாகய்யர் மகா சமாதியான திருவையாற்றில் விழா கொண்டாட வேண்டியது அவசியம்தான். அதைப் போலவே அவர் தோன்றிய புண்ணிய ஸ்தலத்தையும் நினைக்கவேண்டாமா?

கர்நாடக சங்கீதத்தின் வளர்ச்சிக்காக வாழ்ந்து, கர்நாடக சங்கீதத்துக்காகவே தம்முடைய வாழ்நாள் பூராவும் செலவிட்ட சங்கீத மும்மூர்த்திகள் தோன்றிய புண்ணிய பூமியல்லவா திருவாரூர். திருவாரூர் சங்கீத மும்மூர்த்திகளைப் பெற்றுத் தரவில்லை என்றால் கர்நாடக சங்கீதம் இன்றைய தினம் உள்ள மகோன்னத நிலையைப் பெற்றிருக்க முடியுமா?

அத்தகைய மகா புருஷர்கள் தோன்றிய திருவாரூரை நினைவுப் படுத்திக் கொள்ள சங்கீதக் கலையில் பற்றுள்ள ஒவ்வொருவரும் கடமைப்பட்டிருக்கிறோம்.

எப்படித் திருவாரூரையும் மும்மூர்த்திகளையும் நினைவுப்படுத்திக் கொள்வது? அதற்குச் சரியான வழி இருக்கிறது. மிகச் சிறந்த முறை இருக்கிறது.

திருவாரூரில் சங்கீத மும்மூர்த்திகளுக்கு நினைவுத் திருப்பணி செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. அதைப் பூர்த்தி செய்ய உதவுவதன் மூலம் திருவாரூரையும், சங்கீத மும்மூர்த்திகளையும் என்றென்றைக்கும் மறக்காமல் இருக்கலாம்.

வி. கே. கே. மேனன்

பாரதத்தின் பெருமை உலக நாடுகளிடையே உயர்ந்திருக்கிறது என்றால் அதற்குக் காரணம் நேருஜியின் தர்ம அடிப்படையில் உருவாகியிருக்கும் அயல் நாட்டுக் கொள்கை தான். இக்கொள்கையை ஆதரித்து நின்று திரு வி. கே. கிருஷ்ண மேனன் அயல் நாடுகளில் சாதித்துள்ள சாதனைகள் பாரத நாட்டுமக்கள் ஒவ்வொருவரும்பெருமைப்படக் கூடியதாகும். வி. கே. கே. மேனன் ஜினீவாவில் காண்பித்த ராஜ தந்திரத்தினால் இந்தோ சீனாவில் நடைபெற்று வந்த உள் நாட்டு யுத்தம் நின்றது. திரு வி. கே. கிருஷ்ண மேனனின் முயற்சியினாலும் ராஜ தந்திரத்தாலும் சீனாவில் சிறைப்பட்டிருந்த அமெரிக்க விமானிகளுக்கு விடுதலை கிடைத்தது. சீனக் கடலில் மூள இருந்த பெரும் போர் தவிர்க்கப் பட்டது! இப்படி எத்தனையோ சொல்லலாம், சமீப காலத்தில் மேனன் உலக அரங்கில் நிகழ்த்திய சாதனைகளை. அவருக்கு நேரு மந்திரி சபையில் ஸ்தானம் அளித்தது பற்றி மகிழ்ச்சியடையாதவர் யாருமில்லை. நேருஜிக்குப் பக்கபலமாக நின்று பாரதத்தின் புகழை மேலும் உயர்த்துவார் என்று எதிர்பார்க்கிறோம்.



திரு வி. கே .கே. மேனன்

மகாமக தர்மம்

நிகழும் பெப்ருவரி மாதம் 25ந் தேதி கும்பகோணத்தில் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை வரும் மகாமக உற்சவம் வருகிறது. இந்தியாவின் பல பாகங்களில் இருந்தும் பல லட்சக் கணக்கான மக்கள் மகா மகத்துக்கு வருவார்கள். முன்னெல்லாம் ஒவ்வொரு மகா மகத்தின் போதும் காலம் சென்ற தேப்பெருமாள்நல்லூர் அன்னதானசிவன் என்னும் பெரியார் சமாராதனை நடத்துவது வழக்கம்.

அப்பொழுது அந்த மகான் நடத்தி வந்த பொறுப்பை அவருடைய பெயரால் நடந்து வரும் அன்னதான சிவன் சங்கத்தார் இப்பொழுது ஏற்று நடத்தி வருகிறார்கள். அவர்களுடைய சிறந்த கைங்கரியத்துக்குத் தமிழ் மக்கள் பரிபூரணமாக ஒத்துழைக்க வேண்டும். மகா மகத்துக்கு வரும் லட்சக் கணக்கான மக்களைப் பசியால் வேதனை அடைய விடலாமா? அன்னதான சிவன் சங்கத்தார் நான்கு லட்சம் மக்களுக்கு உணவளிக்கத் திட்டம் இட்டிருக்கிறார்கள். அதற்கு வேண்டிய நவீன வசதிகள் படைத்த குக்கர்களையும் இதர சாமான்களையும் தயார் செய்து விட்டார்கள். அவர்கள் மேற்கொண்டிருக்கும் புனிதமான கைங்கரியத்தில், மகாமகத்தின்போது ஏழைகளுக்கு அன்னதானம் செய்யும் மகத்தான புண்ணியத்தில் பங்கு பெற விரும்புகிறவர்கள், அவர்களுடைய பண உதவியையோ, உணவுப் பொருள் நன்கொடையையோ அனுப்பி வைக்கக் கோருகிறோம்.

பணமாக அனுப்ப விரும்புவோர் "அன்னதான சிவன் சங்கம், 19, ஸ்டிரிங்கர் தெரு, சென்னை" என்ற விலாசத்துக்கும், உணவுப் பொருள்கள் அனுப்புவதாயிருந்தால் "அன்னதான சிவன் மாணவர் இல்லம், அம்மாசத்திரம், தஞ்சை ஜில்லா. ரயில் நிலையம்-திருநாகேஸ்வரம்" என்ற விலாசத்துக்கும் அனுப்பி வைக்க வேண்டுகிறோம்.

லண்டனுக்கு பி.ஓ.ஏ.ஸி.

Coronet

கோரோனெட் டூரிஸ்ட் ஸர்வீஸ்கள் மூலம் பறந்து செல்லுங்கள்



மிகக் குறைந்த ப்ரத்யேகமான ஆப்-ஸீஸன் டூரிஸ்ட் கட்டணங்களில் ராஜபோகத்தில் பிரயாணம் செய்வதுடன் ரூ. 599 மிச்சப் படுத்துங்கள்.

மதராஸ் ஒரு வழி ரூ. 1484

லண்டன் போகவர ரூ. 2687

இப்பிரத்யேக ஆப்-ஸீஸன் கட்டணங்கள் இந்தியாவிலிருந்து 1955 ஆகஸ்டு முதல் தேதி முதல் 1956 பிப்ரவரி 29வ வரை வழங்கப்படும். திரும்பும் பிரயாணம், பிரயாணச் சீட்டு அமுலிலிருக்கும் காலத்திற்குள் (அதாவது ஒரு வருஷம்) செய்யலாம். மிகக் குறைந்த இந்த ஆப்-ஸீஸன் பிரயாணக் கட்டணங்கள் மற்றுமுள்ள பெரிய ஐரோப்பிய நிலையங்களுக்கும் கிடைக்கும். பி. ஓ. ஏ. ஸி. மற்றும் குவாண்டாஸ் சர்வீஸ்களுக்கு பம்பாயிலிருந்து உடனே பிரயாண இணைப்புகள் உண்டு.

பி. ஓ. ஏ. ஸி. உங்கள் நலனைக் கருதி சேவை செய்கிறது

விவரங்களுக்கு உங்கள் உள்ளூர் டிராவல் ஏஜண்டிடமோ அல்லது பி. ஓ. ஏ. ஸி. 35/4 மவுண்ட் ரோட், மதராஸ் 2 டெலிபோன் 85394 இவர்களிடமிருந்து அறியவும்.

FLY B·O·A·C

பி. ஓ. ஏ. ஸி. விமானம் மூலம் பறந்து செல்லுங்கள்

பிரிட்டிஷ் ஓவர்ஸீஸ் ஏர்வேஸ் கார்பரேஷன்

நந்தவனக் கலைக்கு வெள்ளி விழா



தமிழ் நாட்டின் தலைநகரான சென்னையில் பெப்ருவரி மாதம் மூன்றாம் தேதி ஒரு வெள்ளி விழா சிறப்பாக நடைபெற்றது.

சாதாரணமாக நாடகம், சினிமா முதலியவைகளுக்குத்தான் வெள்ளி விழா நடைபெறுவது வழக்கம். ஆனால் சென்னை நகரில் நடைபெற்ற இந்த வெள்ளி விழா அத்தகையதல்ல. தோட்டக் கலை ஸ்தாபனமான "சௌந்தர்ய நர்ஸரியின்" இருபத்தைந்தாவது ஆண்டு விழாவைக் கொண்டாடவே வெள்ளி விழா நடத்தினர்கள்.

வெள்ளி விழாக் கொண்டாடும்படி "சௌந்தர்ய நர்ஸரி" என்ன சாதித்து விட்டது என்றுதானே கேட்கத் தோன்றுகிறது!


சென்ற இருபத்தைந்து ஆண்டுகளாக "சௌந்தர்ய நர்ஸரி"யை நடத்தித் தோட்டக் கலைக்குப் புத்துணர்ச்சியும் புது உணர்வையும் ஊட்டி வருகிறார் ஒரு நந்தவனக் கலைஞர். தோட்டக் கலையில் கத்தரிக்காயிலிருந்து விலையுயர்ந்த குரோட்டன்ஸ் வரை, சப்போட்டா மரத்திலிருந்து உயர்ந்த சாதி மாமரம் வரை, மணம் நிறைந்த ரோஜாப் பூவிலிருந்து, மனத்தைக் கவரும் கனகாம்பரம் மலர் வரை ஒவ்வொன்றிலும் பலப்பல வகையுள்ள விதம் விதமான ஒட்டுச் செடிகளை உற்பத்தியாக்கி சௌந்தர்ய நர்ஸரியில் கிடைப்பதற்கு வழி செய்திருக்கிறார்.

இந்தியாவிலேயே சிறந்த முறையில் தோட்டக் கலையை அநுபவபூர்வமாக, ஆராய்ச்சி முறையுடன் நடத்தி வரும் ஸ்தாபனம் சௌந்தர்ய நர்ஸரி. சௌந்தர்ய நர்ஸரிக்கு அகில உலகிலும் உள்ள தோட்டக்கலை ஸ்தாபனங்களின் தொடர்பு இருப்பதுடன் அதில் பல நவீன முறைகளையும் கடைப்பிடித்து வெற்றி பெற்றிருப்பதுதான் இதற்கு முக்கிய காரணமாகும். இவ்வாறு சௌந்தர்ய நர்ஸரியின் மூலம் தமிழ் நாடும் தமிழ் மக்களும் பெருமைப் படும்படி தோட்டக் கலையை வளர்த்து வருபவர் திரு பி. எஸ். சுவாமிநாதன் அவர்கள். காலம் சென்ற சென்னை உயர்நீதி மன்றத்து பிரபல அட்வகேட் திரு பி. ஆர். சுந்தரமய்யரின் குமாரர். இன்றையதினம் சென்னை நகரத்தில் கம்பீரமாக விளங்கும் பல பெரிய பங்களாக்களில் உள்ள தோட்டங்கள் மூலம் சென்னை சௌந்தர்ய நகரமாகக் காட்சியளிப்பதற்கு "சௌந்தர்ய நர்ஸரி"யின் ஸ்தாபகர் திரு பி. எஸ். சுவாமிநாதன் அவர்களின் தொண்டுதான் காரணம் என்று சொன்னால் மிகையாகாது.

அவருக்குத் துணையாக அவருடைய குமாரர் திரு பி. எஸ். சந்திரமௌளி M. A., D. I. H., அவர்கள் தொண்டாற்றி வருகிறார். அவர் தோட்டக் கலை சம்பந்தமான ஆராய்ச்சி செய்து விசேஷ பட்டம் பெற்றவர். அவருடைய ஆராய்ச்சியின் மூலம் சௌந்தர்ய நர்ஸரி பல துறைகளில் அபிவிருத்தி அடைந்திருக்கிறது.

இந்த வெள்ளி விழாவுக்கு விவசாய மந்திரி கனம் பக்தவத்ஸலம் தலைமை தாங்கிச் சிறப்பளித்தார். அண்ணாமலை சர்வ கலாசாலை விவசாய ஆராய்ச்சித் துறைத் தலைவர் எஸ். கிருஷ்ணமூர்த்தி வெள்ளி விழாப் பேருரை நிகழ்த்தினார்.

நர்ஸரியின் தொண்டைப் பற்றித் தொழில் அதிபரான திரு ஏ. எம். எம். முருகப்பச் செட்டியார், சென்னை ஷரிப் திரு ஆர். ஈ. காஸ்டல் போன்ற பிரமுகர்கள் புகழ்ந்து பாராட்டு கூறியிருக்கிறார்கள். அவர்களுடன் சேர்ந்து நாமும் நமது பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.



மூன்றாவது பரிசுக் கதை-3

சலனம்

கல்கி திரு. ரா. கிருஷ்ணமூர்த்தி நினைவுச் சிறுகதைப் போட்டி

வேளாறு என்றும் போல அன்றும் விழித்துக் கொண்டது. வேள் ஆம் ஊர் என்று ஸ்தல புராண ஏட்டிலும், வேளூர் என்று அரசாங்க 'ரிகார்டு'களிலும், வெறும் 'வேளாறு' என்று பொது மக்களாலும் நாமகரணம் சூட்டப்பட்டிருந்த அக் கிராமத்தின் கிழக்கு, மேற்காக நீண்டிருந்த அக்கிரகாரத்தில் மெல்ல, மெல்ல ஜீவகளை அப்போதுதான் படரத் துவங்கியது.

சாமக் கோழி கூவுவதற்கு முன்பே துயில் விழித்த செல்லம், படுக்கையில் புரண்டு அலுத்துப்போய், வாசற் புறம் வந்து நின்றாள்.

"பல்லைத் தேய். காப்பி சாப்பிடலாம்" என்றாள் அவள் தாயார் விசாலம். அவள் கூறியது செல்லத்தின் காதில் விழுந்ததாகவே தெரிய வில்லை. எனவே உரத்த குரலில், "அங்கே என்னத்தை அப்படிப் பார்க்கிறே!" என்று கேட்டாள்.

"ஒன்றுமில்லையே!" என்றாள் செல்லம்.

விசாலத்துக்குச் சிரிப்பு வந்தது. "வெறுமனே பார்த்துக் கொண்டு நிக்க, இந்த வீதியிலே என்னடியம்மா இருக்கு! இன்னிக்கு முழுதும் பார்த்தாலும் வெறும் புழுதியும், மண்ணும் தான்" என்றாள்.

செல்லத்துக்குத் தாயாரின் வியாக்கியானம் பிடிக்க வில்லை. புழுதிதான்! வெறும் மண் தான்! ஆனால் அலட்சியமாக அப்படி யெல்லாம் சொல்லி ஒதுக்கிவிட அவள் கற்பனைக் கோட்டைகள் கூடக் கட்டினாள். பகலெல்லாம் சிமிட்டி ரஸ்தாக்களில் ஓடினாலும், குதிரைக்குத் தன் உடற் தினவைத் தீர்க்க மணற் பாங்கான பிரதேசம்தானே தேவைப் படுகிறது! அதைப் போலவே, அந்தப் புழுதியின் சேர்க்கை அவளுக்குத் தேவை என்று தோன்றியது.

"சரி, சரி! காரியமாச்சு" என்று முடுக்கி விட்டு விசாலம் உள்ளே போனாள்.

புழக்கடைப் புரையில் கலயத்தில் இருந்த சாம்பற் கட்டியை எடுத்துக் கொண்டு செல்லம் வாய்க்காலுக்குப் போனாள்.

தண்ணீர் படாதிருக்க முழங்கால் வரை புடவையை உயர்த்திக் கொண்டு சரசர வென்று பல் துலக்க ஆரம்பித்தாள் செல்லம். இந்த வாய்க்காலில் அவள் சிறுமியாக இருந்த போது குளித்து விளையாடி யிருக்கிறாள்! ஆனந்தமான அந்த நாட்களை எண்ணிப் பார்த்தால் இப்போதும் மனசு கிளுகிளுக்கிறது!

செல்லத்துக்குத் திடீரென்று அந்தச் சம்பவம் நினைவுக்கு வந்தது. அடியம்மா! இப்போது நினைத்தாலும் ஒருபுறம் வெட்கமாகவும், மறுபுறம் ஆசையாகவும் இருக்கிறது! இந்த வாய்க்காலில்தான் அவர்கள்—கசியும் அவள் கணவனும் — எத்தனை கும்மாளம் அடித்திருக்கிறார்கள்!

"சே! வெட்கங் கெட்டதுகள்!" செல்லம் முகத்தைச் சுளித்துக் கொண்டாள். அன்பு எப்போதும் ஒரு எல்லையை மீறினால் அசம்பாவிதம்தான். கசியும் அவள் கணவனும் நாகரிகத்தில் திளைப்பவர்கள். என்றாலும் பட்டப் பகலில் எல்லோரும் பார்க்கும்படி, அவ்வளவு சொற்ப உடை அணிந்து கொண்டு குளித்திருக்க வேண்டியதில்லை!

"அடியே செல்லம்!..." என்று அம்மாவின் குரல் நீண்டு ஒலிக்கவே, "இதோ வந்து விட்டேன்" என்று ஓடினாள் செல்லம்.

காப்பியைக் குடித்து விட்டு, கூடத்து ஊஞ்சலில் உட்கார்ந்து ஆடியபடியே மனத்தைத் தாலாட்ட ஆரம்பித்தாள்.

அந்த கசிக்கு என்னிடம் கொள்ளை ஆசை! ஒரு நாள் காதோடு ரகசியமாக அவள் கூறிய விஷயம் இப்போதும் நினைவில் இருக்கிறது! அவளுக்குக் குழந்தை பிறக்கப் போகிறதாம். அது ஆணாக இருக்குமா, பெண்ணாக இருக்குமா என்று தம்பதிகளுக்குள் சண்டை. எப்படி இருந்தால் என்ன! குழந்தை ஏன் பிறக்கிறது, எப்படிப் பிறக்கிறது என்பதெல்லாம் தெரியாத பருவத்தில் இந்த விவாதம் அர்த்தமற்றதாகத்தான் அவளுக்குத் தோன்றியது. ஆனால் இப்போதோ......

வீட்டின் செல்வம் தவழும் குழந்தை அல்லவா! அது இல்லாமல் கல கலப்பும், அரவணைப்பும் நிலவுவதில்லை என்கிற தெளிவு தான் அவளுக்கு ஏற்பட்டிருந்தது. தனக்கும் ஒரு குழந்தை பிறந்து, அதைச் சீராட்டி, அரவணைத்துப் பாலூட்டி மகிழ வேண்டும் என்கிற தாபம் அவளுக்கு உள்ளூறக் கொக்கரித்துக் கொண்டிருந்தது.

"அது நிராசை!" என்று தனக்குள் முணுமுணுத்துக் கொண்ட செல்லம் நெடிய பெருமூச்சை வெட்டித் தள்ளினாள். அவளைப் பொறுத்தவரை அது கனவுதான். சந்தேகமென்ன! செக்கில் கட்டப்பட்ட மாடு சுற்றிச் சுற்றி வருவதைப் போல, ஒரு மையப் புள்

ஏ. எஸ். ராகவன்

ளியை நெருங்க முடியாது. அதையே பிரதட்சணம் செய்ய வேண்டிய அவஸ்தைதான் அவளுடைய வாழ்வு. இந்த வாழ்வுக்கு வேறு யாரும் பொறுப்பாளி அல்ல. அவளேதான். தனக்கும், தன் குடும்பத்துக்கும் அதுதான் சரி என்று அவளாகவே வகுத்துக் கொண்ட வழிதான் அது.

சசியையும் அவள் புருஷனையும் போலக் குதூகலமாக வாழும் பாக்கியம் அவளுக்கு ஏது!

கல்யாணம் என்கிறார்களே, பார்க்கப் போனால் வாழ்க்கையில் அது ஒரு தேவையே தவிர வேறென்ன! பசியும், தாகமும் மனிதனுக்கும் ஒன்றுதான். மிருகத்துக்கும் ஒன்றுதான். ஆனால் சுய நலத்துக்காக, தன் ஆசைப் பசிக்காகப் பெண்ணைப் பலி கேட்கும் மனிதனை விட மிருகங்கள் மேலானவை. தன் கட்சியை வலியுறுத்த அவன் பேசும் பகுத்தறிவு வாதங்கள், அனுபவப் பிரசங்கங்கள் எத்தனை பித்தலாட்டமானவை!

சே! எதற்காக இந்த நினைவுகள்! இன்றைக்கு ஏன் இப்படி!

"மாமி ... மாமி ... சந்துரு அண்ணா வந்திருக்கான்!" என்று கூறியபடி அவளை உலுப்பினாள் எதிர் வீட்டுச் சம்பா.

செல்லம் திடுக்கிட்டு அவளையே ஒரு விநாடி பார்த்தாள். "என்ன மாமி, அப்படிப் பார்க்கிறே!... எங்க அண்ணா வந்திருக்கான் பட்டணத்திலேந்து ... எனக்கு சாக்லேட், கவுன், புஸ்தகம் எல்லாம் வாங்கிண்டு வந்திருக்கான்" என்று விளக்கினாள் சம்பா. அவளுடைய முகத்தில் மலர்ந்து விரிந்த ஆனந்தத்தை ரசித்தபடியே செல்லம் குழந்தையின் மிருதுவான கன்னத்தைக் கிள்ளினாள்.

"உங்க அண்ணா சந்துருவா!" என்று கேட்டாள் செல்லம்.

"ஆமாம்..." என்று தலையாட்டி விட்டுச் சம்பா திரும்ப ஓடிவிட்டாள்.

செல்லம் வாசற்புறம் வந்து, கதவிடுக்கில் நின்று, தலையை மட்டும் வெளியே நீட்டிப் பார்த்தாள். சந்துரு முன்பெல்லாம் மீசை வைத்துக் கொண்டு இருந்தான். அந்த மீசை அவனுடைய முகத்துக்குக் கொஞ்சங்கூடப் பொருத்தமாகவே இல்லை. என்னவோ அதைக் கட்டிக் கொண்டு அழுதான் அப்போதெல்லாம். இப்போது......

சந்துரு அதே சமயம் அவளைப் பார்த்தான். முகத்தில் மீசை இல்லை என்பதை மட்டுமல்ல, பழைய முரட்டு சுபாவமும் இல்லை என்பதைச் செல்லம் அந்த ஒரே பார்வையில் கணித்து விட்டாள். அதற்கு மேல் அவளால் நிற்க முடியவில்லை. உள்ளே வந்து விட்டாள்.

சற்று நேரத்துக்கெல்லாம் வாசல்புறம் செருப்புச் சத்தம் கேட்டது. செல்லம் ஊஞ்சலை விட்டு எழுந்து சமையற் கட்டுக்குள் சென்றாள்.

"வாடா, வா!" என்று வரவேற்றாள் விசாலம் சந்துருவை.

"சௌக்கியமா, மாமி! செல்லம் வந்திருக்காளாமே!" என்று கேட்டபடி அவன் ஊஞ்சலில் உட்கார்ந்தான்.

"ஆமாம்; பத்து நாள் இருந்துட்டுப் போகட்டும்னு கடுதாசி போட்டேன். அவ ஆம்படையானே 'ப்ளெஷர் கார்'லே கொண்டு வந்து விட்டுட்டுப் போனார்" என்றாள் விசாலம் பெருமையுடன்.

"அவருக்கு என்ன குறை! ஈச்வரமூர்த்தி பட்டணத்திலேயே பெரிய புள்ளியாச்சே!"

"அப்படித்தான் எல்லாரும் சொல்றா!"

"வான்தவம்தான். வக்கீல் தொழில்லே லட்ச லட்சமாகச் சம்பாதிக்கிறவர் செல்வாக்கிற்குக் கேட்பானேன்!"

"அதென்னவோ, எல்லாரையும் போல இவர் இல்லைன்னு சொல்றா. நியாயம் இருந்தால் ஒழிய, கேஸைத் தொடமாட்டாராம். இவர் எடுத்துண்டா கேஸூம் தோற்றுப் போறதில்லையாம்!"

"அதை நான் நம்ப மாட்டேன், மாமி! நியாயத்தை மட்டும் வழக்காடிப் பிழைக்கணும்னு காலணா காண முடியாது. தொழில் முறையிலே பல விதமாகவும் இருக்கும்."

"ஊஹூம். இந்த விஷயத்திலே ரொம்பக் கண்டிப்பு அவர்."

"நீங்க நினைச்சிண்டிருக்க வேண்டியதுதான்" என்றான் சந்துரு.

செல்லம் இந்தச் சம்பாஷணையைக் கவனித்து வந்தாள். அவளுக்குத் தெரிந்திராத ஒரு விஷயத்தைப் பற்றி இவர்கள் விவாதிப்பது ஆச்சரியமாக இருந்தது. மூன்று வருஷமாயிற்றே, அவரும் இதைப் பற்றி எல்லாம் பேசியதே கிடையாது. ஆனால் அநியாய வழக்குக்கு வக்காலத்து வாங்குகிற சுபாவம் அவருக்கு நிச்சயம் இருக்கவே முடியாது என்று மட்டும் அவள் நம்பினாள். அதனால் பேச்சை மேலும் வளர விடாமல் உள்ளிருந்தபடியே, "அம்மா, அந்தப் பேச்சைத்தான் விடேன். நாலு பேர் நாலு விதம் தான்பேசுவா!" என்றாள் செல்லம்.



சவுக்கடி பட்ட குதிரை போல் சந்துரு விரைத்து உட்கார்ந்தான். அந்தக் குரல் அவனை அப்படி உலுக்கியது.

"எத்தனை நாள் லீவு!" என்றாள் விசாலம்.

"பத்து நாள் இருக்கலாம்னு வந்தேன். ஒன்றும் நிச்சயமில்லே!"

"பட்டணத்திலேதானே இருக்கே!"

"அங்கேதான் இருந்தேன். இப்போ இல்லை."

"என்னடா, புதிர் போடறே!"

"குடைந்து, குடைந்து கேட்காதீர்கள், மாமி! செல்லத்துக்கு எல்லா விவரமும் தெரியும்!" என்றான்.

இதைக்கேட்ட செல்லத்துக்கு வியப்பாக இருந்தது. அவளுக்குத் தெரியுமா! இவனைப் பற்றி அவள் இப்போது தெரிந்துகொண்ட விவரங்களைத் தவிர வேறு எதுவுமே அவளுக்குத் தெரியாதே!

புழக்கடைப்புறம் மாடு தீவனத்துக்காகக் குரல் கொடுத்தது. "கொஞ்சம் இரு வந்துட்டேன்" என்று விசாலம் புழக்கடைப் புறம் சென்றாள்.

ஊஞ்சலை விட்டு எழுந்து சந்துரு சமையற் கட்டுக்கு வந்து நிலைப்படியருகில் நின்றான்.

"செல்லம்......!"

"என்ன!"

குனிந்த தலை நிமிராது அவள் கேட்டாள். சந்துருவுக்கு என்ன பேசுவதென்றே புரியவில்லை. அவளையே பார்த்தான். எத்தனை அழகு! சிவப்புச் சோளி எடுப்பாக இருந்தது.

"நீ வந்திருக்கிறாய் என்று தெரிஞ்சுது. அதான் வந்தேன்."

அவள் பேசவில்லை.

"இது அநியாயம், செல்லம்! அதுதான்— உன்னை... அங்கே... கொடுத்தது..."

"நியாயமோ அநியாயமோ அதுதான் எங்களுக்குச் சரி!"

"அப்படிச் சொல்லிப்பிட்டா!"

இதற்குள் விசாலம் வரும் ஓசை கேட்கவே சந்துரு சாதுர்யமாக, "கொஞ்சம் ஜலம் கொடு, செல்லம்!" என்றான். பிறகு விசாலத்திடம், "மாமி, பட்டணம் போயும் இன்னும் கர்நாடகப் பேர்வழியாகவே இருக்காளே செல்லம்!" என்றான். அவள் சிரித்தாள்.

சந்துரு போன பிறகு விசாலம் நீட்டி முழக்கி, "விகல்பமில்லாத பிள்ளை!" என்றாள். செல்லம் மனத்துக்குள் சிரித்துக் கொண்டாள்.

'கிரீச், கிரீச்' என்று ஆடிய ஊஞ்சலில் மீண்டும் செல்லம் சிந்தனை வலை விரித்து அமர்ந்து விட்டாள். அவள் இங்கு வந்ததற்குக் காரணம் அவனுடைய வருகையேதானா! அப்படித்தானே சொன்னான்! பழைய நாட்களின் நினைவு வந்தது அவளுக்கு. சந்துருவோடு அவள் விளையாடியிருக்கிறாள். 'நறுக் நறுக்' என்று குட்டுப்பட்டும் இருக்கிறாள். அவனைப் பற்றி எந்தவித அபிப்பிராயமும் அவளுக்கு ஏற்பட்டதே இல்லை. சுபாவத்தில் முரடனாக இருந்தான் அவன். படிப்பு மூளையில் ஏறவில்லை. பன்னிரண்டு வயதான பிறகு செல்லம் வீட்டை விட்டு வெளியே செல்ல மாட்டாள். படிப்பும் நின்றது. ஒரு தடவை பக்கத்து வீட்டில் நடந்த கல்யாணத்தின் போது யாரோ ஒருவர் குறும்பாகச் சொன்னார், "இந்தக் குட்டியை நம்ம சந்துருவுக்குக் கட்டிப் போட்டால் என்ன!" என்று.

அதன் பிறகு அவனைப் பார்க்கக்கூட வெட்கம். என்னவோ கல்யாணமே ஆகிவிட்ட மாதிரி குறுகுறுப்பும், தவிப்பும் வெட்கமும் அவளைத் தொத்திக் கொண்டன.

அதெல்லாம் பழைய கதை.

இப்போது அவள் ஸ்ரீமதி செல்லம் ஈச்வர மூர்த்தி. பெரியபங்களாவில் ஒரு குறையுமின்றி வாழ்பவள். மூத்தவள் மலட்டுப் பட்டத்தோடு பட்டணத்திலுள்ள டாக்டர்களுக்கெல்லாம் நிரந்தரமான நல்ல வருவாயை அளித்து விட்டு அகாலத்தில் போன பிறகு, சில காலம் விரக்தியும், வேதாந்தமும் கலந்த மனப் போக்கிலே சலிப்படைந்த வாழ்க்கையை நடத்திய ஈச்வர மூர்த்தி திடீரென்று முறித்துக் கொண்ட மனத்தின் பாரிச வியாதியால் அவளுக்கு மாலையிட்டார். நாற்பத்தைந்து வயதின் அநுபவ ஞானமும், தீர்க்கதிருஷ்டியும் பெற்றவர். சாந்தமான முகம்! கூர்மையான கண்கள்!

என்னதான் செல்வமும், சீரும் இருந்தாலும் அவளுக்கு ஒரு குறை இருக்கத்தான் இருந்தது. அவருக்கும், அவளுக்கும் இடையே இருபத்தைந்து வருடங்கள் வித்தியாசம்! இளந் தம்பதிகள் சிரித்துச் சல்லாபிப்பது போல அவள் வாழ முடியவில்லை. கட்டுப்பாடு, கடமை, நியதி இவற்றைத் தவிர வேறெதையும் ஈச்வர மூர்த்தியிடம் காண முடியாது. அவளிடம் உயிரையே வைத்திருந்தார். அது அவளுக்குத் தெரியும். இருந்தாலும்......

"மீசையை எடுத்த பிறகு முகமே அழகாகத்தான் இருக்கிறது" என்று ஒரு குரல் மெள்ள உள்ளத்தில் எழுந்தது.

எத்தனை தைரியமாக அடுக்களை அருகில் வந்து, "உனக்காகத்தான் வந்திருக்கிறேன்" என்றானே! இன்னும் பழைய சுபாவம் மாறவே இல்லை. மனத்தில் ஆனந்த உணர்ச்சி மெல்லப் புரையோடியது.

"என்னடி, குளிக்க வேண்டாமா!" என்று விசாலம் கேட்ட போதுதான் அவளுடைய கனவு கலைந்தது.

'இனிமேல் வேறே வாழ்வு வரப்போகிறதா என்ன! எதற்காக இந்த எண்ணங்கள்!' என்று தன்னைத் தானே கடிந்து கொண்டாள்.

பகல் நழுவி மாலைக் கடலில் விழுந்தது. விசாலம் ஆற்றுக்குப் போனாள். செல்லம் மட்டும் வீட்டில் இருந்தாள்.

"செல்லம்..."

வந்திருப்பது யார் என்று அவள் புரிந்து கொண்டு எழுந்தாள்.

"அம்மா இல்லையே!"

அது தெரியாமலா வந்திருக்கிறான்! "இல்லை" என்றாள் செல்லம்.

"அவள் காதில் மட்டும் போட்டு விடாதே, செல்லம்! இது நமக்குள் ரகசியமாக இருந்து விடட்டும்" என்றான் சந்துரு.

செல்லம் அவனைப் பார்க்க விரும்பாமல் தன்னாடியபடியே நடந்து சமையலறைக்குள் சென்றாள். ஆசைக்கும் அன்புக்கும் இதுதான் தாரதம்யம்! அன்பு தன்னை அர்ப்பணித்துப் பிறரைச் சுகப்படுத்துவது. ஆசை சுயநலத்துக்காகப் பிறரை அழிப்பது. சே!

"என்மேல் பிசகேயில்லை. இதை நீ நம்பலாம், செல்லம். எல்லாம் என் கண்பர்களின் சூழ்ச்சி. தெரியாமல் சிக்கி விட்டேன். புத்தி

புருஷர்களுக்கு மட்டும்



எங்கள் மில்கள் புருஷர்களின் தனிப்பட்ட தேவைகளையே அநேகமாகத் தயாரிக்கின்றன.



விவேகமுள்ள புருஷர்களே தங்களுடைய ஆடைகளை, அதிலும் முக்கியமாக ஷர்ட்டிங் கிளாத்தை தேர்ந்தெடுக்க முடியும். நாங்கள்



மெர்ஸரைஸ்ட் துணிகள் தயாரிப்பதுடன், புருஷர்களின் பல்வேறு உடைபாவனை நிர்ணயங்களுக்கேற்றவாறு, வெண்மையான, கலரிடப்பட்ட, மற்றும் கோடிட்ட ஸான்போரைஸ்ட் பாப்லின்களையும்,



ஷர்ட்டிங்களையும் தயாரிக்கிறோம். இது தவிர புருஷர்களின் வார்டுரோப்பை அலங்கரிக்கும் கேம்பிரிக், லாங்க்ளாத், ஷர்ட்டிங்களையும் உற்பத்தி செய்கிறோம்.

நியூ ஷோராக் மில்கள் தற்காலத்திய இயந்திரங்களை அமைத்திருப்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயமே. அதன் துணிகளின் தரம் தேர்ந்ததாக இருப்பதுடன், நல்ல துணி என்று அங்கீகரிக்கப்பட்டு போற்றப்பட்ட இடங்களிலெல்லாம் இதன் தரமும் மேம்பட்டு விளங்குகிறது.

நியூ ஷோராக் மில்களின் தயாரிப்புகள் எல்லாம் "குஞ்சா" என்ற பிராண்டின் கீழ் விற்பனை செய்யப்படுகின்றன. ஆகவே நியூ ஷோராக் என்ற பெயரை ஞாபகத்தில் வைத்துக் கொள்வதுடன், "குஞ்சா" என்ற பிராண்டின் பெயரையும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.



மெர்ஸிரைஸ்ட் மற்றும் ஸான்போரைஸ்ட், பாப்லின்கள், ஷர்டிங்குகள்— வெண்மையான, கலருள்ள, கோடிட்ட ரகங்களில் கிடைக்கும்.

தி நியூ ஷோராக்

ஸ்பின்னிங் அண்ட் மான்யுபாக்சரிங் கம்பெனி லிட்., நடியாட்.


GSF
kollegal
ஜி.எஸ்.எப். கொள்ளேகாலம்
பட்டுப் புடவைகளை
உபயோகித்து
அவைகளின்
விசேஷ சிறப்பை
உணருங்கள்
கவர்ன்மெண்ட் ஸில்க் பிலேச்சர் கொள்ளே காலம் பட்டு ஜவுளிகள் 'ஆட்வுட்' மிஷினில் முறுக்கேற்றிய உயர்தர பிலேச்சர் பட்டு நூல்களை உபயோகித்து தயாரிக்கப்பட்டிருப்பதால் சோபைக்கும் உறுதிக்கும் ஈடு இணையற்று விளங்குகின்றன.
கவர்ன்மெண்ட் ஸில்க் பிலேச்சர்ஸ்
கொள்ளேகாலம்
சென்னை சர்க்கார் கைத்தொழில் &
வியாபார இலாக்காவின் ஒரு பகுதி

வந்தது. செல்லம்; புத்தி வந்தது. இனிமேல் நான் இந்தமாதிரி வழக்கெல்லாம் போகவே மாட்டேன்'' என்றான் சத்துரு.

அவன் என்ன சொல்கிறான் என்றே அவளுக்குப் புரியவில்லை.

'' அந்த லெட்டர் உனக்கு எப்போ கிடைச்சுது !'' என்று அவன் கேட்டான்.

'' லெட்டரா ! ஏது !''

'' அதுதான் உனக்கு எழுதியிருந்தேனே !''

'' எனக்கு எழுதினதா !'' செல்லம் பதறிப் போனாள். தரை நழுவுவது போலிருந்தது. எக்கச் சக்கமாக விசாலம் வந்து விடவே மேற்கொண்டு கேட்க முடியாமல் போய் விட்டது.

கடிதத்தில் என்ன எழுதியிருந்தானோ! அதனால்தான் எனக்கு எல்லா விவரமும் தெரியும் என்றானோ ! இவனை யார் கடிதம் எழுதச் சொன்னது ! ஒரு வேளை...ஒரு வேளை...அந்தக் கடிதம் அவர் கையில் கிடைத்து......

'' அம்மா, தந்தி !''

செல்லத்துக்கு மூச்சே நின்று விட்டது. '' உடம்பு சரியாக இல்லை. உடனே வரவும். ஈச்வரமூர்த்தி'' என்ற வாசகங்களை ஏந்தி நின்ற அந்தக் காகிதம் வெறும் தந்தியாகப் படவில்லை. அவளுடைய வாழ்வின் முடிவுக்கு ஓலையாக இருந்தது.

விசாலம் உடனே மூட்டை கட்டி விட்டாள். செல்லம் துடித்துப் போனாள். '' என்ன உடம்போ ! கடவுளே, நீதான் காப்பாற்ற வேணும். மாங்கல்ய பிச்சை கொடுத்து என்னை ரட்சிக்க வேணும்... '' என்று புலம்பினாள். நேற்றுக் கூடக் கடிதம் வந்ததே, உடம்பைப் பற்றி ஒரு தகவலும் இல்லையே !

ஒரு வேளை அந்தக் கடிதம் தான் இதற்கெல்லாம் காரணமோ !

பங்களா வாசலில் கார் நின்றதும் நிற்காததுமாகச் செல்லம் இறங்கினாள். அங்கே 'கேட்' அருகில் சாட்சாத் ஈச்வர மூர்த்தியே நின்று கொண்டிருந்தார் !

'' இப்போ ஒன்றுமில்லையே ! பயந்தே போனேன்...'' என்றாள் அவள் குழறியபடியே.

'' இல்லை...உள்ளே போ,'' என்றார் அவர். முகத்தில் ஒருவித மாறுதலும் தென்படவில்லை. விசாலம் கூனிக் குறுகி ஏதோ கேட்டு விட்டு உள்ளே சென்றாள்.

'' என்ன உடம்புக்கு !'' நிதானப் படுத்திக் கொண்டு, பரிவுடன் வினவினாள் செல்லம்.

'' என்னவோ உடம்பு......எல்லாம் அப்புறம் சொல்றேன். எனக்குக் காப்பி கொண்டுவா '' என்று கூறிவிட்டு ஈச்வரமூர்த்தி மாடி ஏறினார்.

செல்லத்துக்கு உள்ளூறத் திகிலாக இருந்தது. தரையில் காலூன்றி நடப்பதாகவே தோன்றவில்லை. அவர் நடந்து கொள்ளும் விதம் புது மாதிரியாகத் தென்படவே, இதெல்லாம் நல்லதுக்கல்ல என்று எண்ணித் தவித்தாள்.

மாடிக்குச் சென்ற ஈச்வரமூர்த்தி சாய்வு நாற்காலியில் சாய்ந்து கொண்டு அர்த்தமின்றி ஜன்னல் வழியே வெளியே பார்த்துக் கொண்டிருந்தார். மேஜைமேல் கிடந்த புத்தகத்தை விரித்தார். மெள்ளப் பக்கங்களைப் புரட்டினார். அந்தக் கடிதம் தென்பட்டதும் அப்படியே நிறுத்தி விட்டு மீண்டும் எழுந்து ஜன்னலருகே சென்றார்.

அதைப் பற்றி நினைக்கவே அவமானமாகவும், வெறுப்பாகவும் இருந்தது அவருக்கு. ஆனால் உதாசீனப் படுத்திவிடக் கூடிய சாதாரண விஷயமா என்ன ! செல்லத்தைத் தந்தி கொடுத்து வரவழைத்தகாரணமே இதுதானே!

அதை எழுதிய பையனை நேரில் பார்த்த போது அவருக்கு எதையும் நிர்மாணிக்க முடியவில்லை. அவனே காலில் விழுந்து கெஞ்சினான். ஒரு நெட்டில் ஆபீஸ் அறையை விட்டு வெளியே தள்ளியிருப்பார். ஆனால் அந்தக் கடிதம்தான் குறுக்கிட்டு அவரைத் தடுத்தது.

இரண்டே பக்கங்களில் அவன் என்ன வெல்லாமோ எழுதி இருந்தான். முதலில் பழைய அன்பை நினைப்பூட்டியிருந்தான். அடுத்தபடியாகத் தன்மேல் ஒரு பிழையும் இல்லை என்றும் எல்லாம் காலத்தின் கோளாறுதான் என்றும் அங்கலாய்த்து, முடிவில் தன்னை எப்படியாவது காப்பாற்றும்படி கணவரிடம் பொரிக கோரிக் கெஞ்சி யிருந்தான்.

'' காப்பி...... ''

அவர் திடுக்கிட்டுத் திரும்பியபோது செல்லம் மேஜை அருகில் வந்து நின்றுகொண்டிருந்தாள். அவசர, அவசரமாக அவர் நடந்து வந்து, அந்தப் புத்தகத்தை மூடினார். அதில் என்ன இருந்த தென்பதைச் செல்லம் சரியாகக் கவனிக்கவில்லை. கடிதம் இருந்திருக்குமோ என்று சந்தேகப் பட்டாள்.

'' உட்காரு, செல்லம்...... '' என்றார் அவர்.

அவள் நின்ற நிலையிலேயே தடுமாறினாள்.

'' உட்காரு...... '' என்று கூறியபடி அவளுடைய கைகளைப் பற்றினார்.

செல்லத்துக்கு உடம்பெல்லாம் புல்லரித்தது. இவருடைய ஸ்பரிசத்துக்கு இத்தனை மாய சக்தி எப்படி வந்தது !

சர்வோதய மேளா

காந்திமகான் அஸ்தி கரைத்த புண்ணிய தினம் சர்வ சேவாசங்கம், அகில இந்திய வஸ்திராலயம் ஆகியவற்றின் சார்பில் பெப்ருவரி 12உ ஞாயிறு மாலை கிண்டி ராஜபவன் தோட்டத்தில் உள்ள காந்தி மண்டபத்தில் நடைபெறுகிறது.

மாலை நாலரை மணியிலிருந்து ஏழு மணி வரையில் நூற்பு யக்ஞம், பிரசங்கம், பிரார்த்தனை முதலிய நிகழ்ச்சிகள் இருக்கின்றன.

முன்னாள் விந்தியப் பிரதேச கவர்னரும், நிதி கமிஷனின் தலைவருமான திரு கே. சந்தானம் தலைமை வகிக்கிறார். திரு எல். என். கோபாலசாமி, திரு சோமசுந்தரத் தம்பிரான் ஆகியவர்கள் கலந்து கொள்கின்றனர். அனைவரும் வருக !

"தந்தி கொடுத்திருக்க வேண்டியதில்லை... நீ வீணாகப் பயப்பட்டிருப்பே...என்னவோ உன்னைப் பார்க்க வேண்டும் போல இருந்தது..." என்றார் அவர்.

அவளுடைய உடல் குளிர்ந்தது.

"காப்பி சாப்பிடுங்கள்" என்றாள் அவள் உணர்ச்சிகளை மறைத்துக் கொண்டு.

"ஊருக்குப் போய் என்ன வெல்லாம் செய்தாய், சொல்லு" என்றார் அவர்.

திடீரென்று பச்சைப் புல்லிடையே கருநாகம் படமெடுத்துச் சீறுவதைப் போல அந்தக் கேள்வி அவளைத் திடுக்கிடச் செய்துவிட்டது. மனத்தின் சலனத்துக்கு ஒரு எல்லையே கிடையாது அல்லவா!

அவர் மெள்ளச் சிரித்தபடியே, "நீ என்னவெல்லாம் செய்தாய் என்று நான் சொல்லட்டுமா!" என்று கேட்டார்.

'குப்' பென்று வியர்த்து விட்டது அவளுக்கு.

"வாய்க்காலில் குழந்தை மாதிரிக் கையையும், காலையும் உதறிக்கொண்டு குளித்திருப்பாய். புழக்கடைக்கும், வாசற்கட்டுக்குமாக நடந்து நடந்து அலுத்திருப்பாய். ஊஞ்சலில் உட்கார்ந்து பாட்டுக்கூடப் பாடியிருப்பாய்." அவர் வர்ணித்துக் கொண்டே போனார்.

"போங்கள்" என்று சிணுங்கினாள் அவள்.

"அது போகட்டும், சந்துரு என்கிற பையனை உனக்குத் தெரியுமா!"

இந்தக் கேள்வி அவளைத் துளைத்தேவிட்டது. அவரை எதிர் நோக்கத் தைரியமின்றி, வாய் குழற, "தெரியும்" என்றாள்.

"அவன் இங்கே வந்திருந்தான்."

அவள் பதில் பேசவில்லை.

"பையன் ரொம்ப இளமனசு. இல்லையா!"

"........."

"ஏன் பேசவே மாட்டேங்கறே! அவன் உன்னைப்பற்றி என்னிடம் எவ்வளவு சொன்னான் தெரியுமா!"

செல்லம் நிலைகுலைந்து சோபாவில் விழுந்தாள். அவர் அவளைத் தாங்கிக் கொண்டார். "என்ன செல்லம்! ஏன் இப்படித் திடீரென்று......" என்று கேட்டார்.

"ஒன்றுமில்லை...சந்துருவைப் பற்றிச் சொன்னீர்களே...!" என்றாள்.

"அதுவா! கேளேன். மூவாயிரம் ரூபாய் களவாடி'விட்டான், கம்பெனியிலே. ஓடி வந்து காலைப் பிடித்துக் கொண்டு அழுதான். உன் பெயரைச் சொல்லிக் கெஞ்சினான். எனக்கும் அவனைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. முதலாளியிடம் பேசினேன். அவர்களுடைய 'கேஸ்' ஒன்று என் வசம் இருப்பதால், போனால் போகட்டும் என்று அவனை விட்டு விட்டார்கள். அங்கே வந்தானா அவன்!"

"வந்தான்."

"இந்தத் தகவல் அங்கே தெரியுமோ!"

"அதைச் சொல்வானா! சிறு வயதிலிருந்தே மகா முரடன் அவன். நல்ல சகவாசம் இல்லாமல் கெட்டழிந்து திரிந்தான். அவனுக்கு நீங்கள் எதற்காக உதவி செய்தீர்கள்!"

"போனால் போகிறான், உனக்காக அவனை மன்னித்தேன்."

செல்லத்துக்கு எல்லாமே பிரமையாக இருந்தது. எந்தத் தைரியத்தில் சம்பாஷணையைத் தொடர முடிந்தது என்றே புரியவில்லை.

"என்ன, எனக்கு ஒரு ஆசை......" என்றாள்.

"சொல்லேன். நீ இஷ்டப்பட்டதைச் செய்ய நான்தான் காத்திருக்கிறேனே!" என்றார் ஈசுவரமூர்த்தி குறும்பாக.

"போங்க! கேலிதான். வந்து......"

"சொல்லேன்!"

"ராமேஸ்வரம் போய் சேது ஸ்நானம் பண்ணிட்டு வரணும்னு ஆசையா இருக்கு. அப்பவாவது நமக்கு ஒரு......"

"குழந்தை! நானும் அதையேதான் நினைச்சுண்டு இருந்தேன். சொன்னால் நீ வித்தியாசமாக நினைப்பாயோ என்றுதான் பேசாமல் இருந்து விட்டேன். 'ஆல் ரைட்.' புறப்படுவோம்" என்றார் அவர்.

"வித்தியாசமா நினைக்க என்ன இருக்கு! உங்க இஷ்டத்துக்கு விரோதமாக நான் ஏதாவது சொல்லியிருக்கேனா என்ன!" என்றாள் அவள் நாணிக்கொண்டே.

அவள் மேலே சென்றதும் ஈச்வர மூர்த்தி அந்தக் கடிதத்தை எடுத்துச் சுக்கு நூறாகக் கிழித்து எறிந்தார். "இதை நம்பி வீணாக இன்பத்தை இழக்க நினைத்தேனே! அவன் ஒரு பைத்தியக்காரன். அசடு. எதையோ நினைத்துக் கொண்டு என்னவோ எழுதி இருக்கிறான்!" என்று தமக்குள் கூறிக்கொண்டார்.

அதே சமயம் செல்லம் நிம்மதியான மனத்துடன், "நல்லவேளை! வீணாகப் பயந்து செத்தேன்! கடிதம் வந்திருந்தால் இப்படிப் பேசுவாரா! ஆனால் என் மனசு கொஞ்சம் சபலப்பட்டுதே, அதுக்கு இந்தத் தண்டனை வேண்டும்" என்று தேறுதல் கொண்டாள்.

புரியா இன்பத்தின் புகலிடமாய் இரவு கவிந்தது. மனித மனோபாவம் காணுகிற ரீதியில் தானே எதுவுமே அடங்கி இருக்கிறது!

அட்டைப்பட விளக்கம்

கிராமக் காட்சி

கண்ணாடி தோற்குமடா — வேலய்யா
கண்ணைப் பறிக்குதேடா — சுப்பையா

கொண்டையிலே பூவிருக்கு — வேலய்யா
கொணச்சுமுடி போட்டிருக்கு — சுப்பையா

காத்தெனவே பறந்துவாரா — வேலய்யா
கஞ்சிகொண்டு வாராளடா — சுப்பையா

அறுவடைக் காலத்தின் இந்த அருமையான கிராமக் காட்சியை நாடோடிப் பாடல்களிலே காண்கிறோம். இதையே நமது ஓவியர் 'மணியம்' இந்த வார அட்டையிலே மூவர்ணங்களில் சித்திரிக்கிறார்.

வட இந்திய யாத்திரை

வளர்ந்து வரும் பஞ்சாப் கிராமங்களின் புதிய சாலைகளில் ஜீப் வண்டிகள் அகில இந்தியப் பத்திரிகையாளரைச் சுமந்து கொண்டு ஒன்றன்பின் ஒன்றாகச் சென்று கொண்டிருந்தன. பட்டாளா சமூகநலத் திட்ட ஸ்தாபனத்தின் சாதனைகளால் சிறந்த முறையில் உயர்ந்திருக்கும் கிராமங்களை ஒவ்வொன்றாகப் பார்த்துக் கொண்டே சென்றோம்.

ஒரு இடத்தில் சற்று ஓய்வுக்காக இறங்கி மர நிழலில் அமர்ந்திருந்தோம். பிஸ்தோ ஆப் கால்வாயின் கரையில் இருந்த அடர்ந்து படர்ந்த அரசமரத்து நிழலில் உட்கார்ந்திருந்தோம். இரு கரையும் பொங்கிப் பெருகி ஓடும் கால்வாய்த் தண்ணீரில் பஞ்சாப் கிராமத்துக் குழந்தைகள் குளித்து விளையாடி மகிழ்ந்து கொண்டிருந்தார்கள். அடாடா! குழந்தைகளாகப் பிறந்தால் பஞ்சாபில் அல்லவா பிறக்க வேண்டும் என்று ஏக்கம் கொள்ளும்படி இருந்தது அந்த இனிய காட்சி.

இந்தச் சமயத்தில் தென் இந்தியப் பத்திரிகையாளர் ஒருவர் பளிச்சென்று எழுந்து உட்கார்ந்தார். "என்ன! நீங்கள் உண்மையைத்தான் சொல்லுகிறீர்களா! எல்லாம் உண்மைதானா! ஐயோ! அவர்கள் சொல்வதெல்லாம் உண்மைதானா! இங்கு நான் பார்ப்பதெல்லாம் கனவில்லையே!" என்றார்.

பத்திரிகையாளருடன் வந்த பஞ்சாப் சமூக நலத்திட்ட அதிகாரி முன்னைவிட அதிக சாந்தத்துடன் கனிந்த குரலில், "ஐயா, பத்திரிகையாளரே! ஏன் பதறுகிறீர்கள்! கொஞ்சம் நிதானமாகக் கேளுங்கள். நாங்கள் சொல்வதெல்லாம் உண்மை. நீங்கள் பார்ப்பதெல்லாம் கனவல்ல. கானல் நீர் அல்ல. நாங்கள் பாடுபட்டு உழைத்த உழைப்பு" என்றார்.

"எல்லாம் உண்மைதானா! உங்கள் உழைப்பின் பலனா இவைகள் எல்லாம்!"

"ஆமாம். எல்லாம் உண்மைதான். இங்குள்ள சர்க்கார் அதிகாரிகளும், பொதுஜனத் தலைவர்களும், கிராமத்து மக்களும் சேர்ந்து உழைத்த உழைப்பின் பலன்தான். உழைப்பால் உயரலாம் என்பதை நீங்கள் அறிந்ததில்லையா!"

"உழைப்பு! உழைப்பு! உழைப்பு! எதற்கெடுத்தாலும் உழைப்புத்தானா! அது செய்ய வேண்டும், இது செய்ய வேண்டும் என்று காகிதத்தில் எழுதினால் போதாதா! அப்படி எழுதுவது என்ன சாதாரண காரியமா! அதற்கு எவ்வளவு மூளை வேண்டும் தெரியுமா! திட்டம் போடுவதுதானே ஐயா எல்லாவற்றுக்கும் முக்கியம்" என்று அலறினார் அந்தத் தென் இந்தியப் பத்திரிகையாளர்.

"நீங்கள் எல்லாம் திட்டம் போட்டுக் கொண்டே இருங்கள். அது சொத்தை இது சொள்ளை என்று உழைக்க விரும்பாமல் நாளைக் கடத்திக் கொண்டே இருங்கள். நாங்கள் இரவு பகல் என்று பாராமல் கஷ்டப்பட்டு உழைத்துக் கொண்டிருக்கிறோம். கடைசியில் எங்கள் உழைப்பின் பலனைப் பார்த்து மூர்ச்சை போட்டு விழுங்கள்" என்றார் வட இந்தியப் பத்திரிகையாளர்.

இந்தச் சம்பாஷணைகள் ஒன்றும் என்னை அசைக்க வில்லை. நான் பஞ்சாப் கிராமங்கள் வளர்ந்து வரும் அதிசயத்தைப் பார்த்துப் பார்த்து வியந்து கொண்டிருந்தேன். அங்கு புதிது புதிதாக அமைத்திருக்கும் அதிசயமான சாலைகளையும், அதன் கரையில் புதிதாக நட்டிருக்கும் மரங்களையும் பார்த்துப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்தேன்.

"என்ன! ஒரே அடியாகச் சிந்தனையில் மூழ்கி விட்டீர்!" என்று கேட்டார் எங்களுடன் வந்த இந்திய சர்க்கார் பிரதிநிதி.

"சுதந்திர சர்க்கார் என்னத்தைச் சாதித்துக் கிழித்துவிட்டது என்று சிலர் சொல்கிறார்களே! இந்தக் கிராமங்களை மட்டும் அவர்கள் ஒரு தரம் பார்த்தால் அப்படி எல்லாம் வாய் கூசாமல் கேட்பார்



களா! இல்லை, கேட்க மனம் வருமா! என்று நினைத்துக் கொண்டிருந்தேன்'' என்றேன்.

''இது மட்டுமா செய்திருக்கிறார்கள். இன்னும் எத்தனையோ காரியங்களைச் சுதந்திர சர்க்கார் சாதித்திருக்கிறார்கள்'' என்றார் அதிகாரி.


ஆமாம்; அந்த அதிகாரி சொன்னது உண்மைதான். இங்கு எத்தனை எத்தனையோ அற்புதங்களைப் பார்த்தோம். கிராம மக்கள் தாங்களே பொருள் கொடுத்து உழைத்துப் பாடுபட்டுச் செய்திருக்கும் பல அபூர்வமான சாதனைகளையும் பார்த்தோம். அவைகளைப் பற்றியெல்லாம் எழுதுவதாயிருந்தால் கட்டுரை முடிவே இல்லாமல் நீண்டு கொண்டே இருக்கும். வாசக நேயர்களின் பொறுமையைச் சோதிக்க விரும்பாததால் சுருக்கமாகச் சொல்லி விடுகிறேன்.

சுமார் ஐந்நூறு மைல் நீளமுள்ள அருமையான மண் சாலைகள் போட்டிருக்கிறார்கள். இது பல கிராமங்களை இணைத்துப் போக்குவரத்துக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்திருக்கிறது. முக்கியமான சாலைகளையெல்லாம் சிமெண்ட் சாலைகளாகப் போட்டிருக்கிறார்கள். இதுபோன்ற சிமெண்ட் சாலைகள் மட்டும் இருபத்தேழு மைல் போட்டிருக்கிறார்கள். அந்தச் சாலைகளில் எழுநூற்று ஐம்பது பாலங்கள் வேறு கட்டியிருக்கிறார்கள். எல்லாம் சமூக நல ஸ்தாபனத்தாரின் உதவியைக் கொண்டு செய்திருக்கும் சாதனைகள்தான்.

மேலே சொன்ன சாதனைகளுக்காகப் பஞ்சாப் கிராமத்து மக்கள் நிலமாகவும், பொருளாகவும், உழைப்பாகவும் சுமார் பதினேழு லட்சம் ரூபாய் தானமாகக் கொடுத்திருக்கிறார்கள் என்று அறிந்தோம்.

பஞ்சாப் கிராம மக்கள் கிராமத்தின் முன்னேற்றத்துக்காகப் பாடுபடும் வேகத்தைப் பார்த்தால் இன்னும் ஒரு சில ஆண்டுகளில் இந்தியாவில் மிகச் சிறந்த கிராமங்களாகப் பஞ்சாப் கிராமங்களை அமைத்து விடுவார்கள் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. பழைய பஞ்சாப் கிராமங்களைப் பார்த்த ஒரு சில பத்திரிகையாளர்கள் ''ஏதோ மாய சக்தியால் புது நகரங்களையே அமைத்தது

கிராமங்கள் வளருகின்றன



ப கீரன்

போயிருக்கிறது. கண்கட்டு வித்தைபோ என்று சந்தேகப்பட வேண்டியிருக்கிறது" என்று வியந்து கொண்டே வந்தார்கள்.

பஞ்சாப் நகரங்களிலும் கிராமங்களிலும் நாங்கள் சென்ற இடங்களில் எல்லாம் பிச்சை எடுத்து வயிறு பிழைக்கும் சோம்பேறிக் கூட்டத்தையே காணவில்லை.

"துன்பமான கோடி கோடி
சூழ்ந்துவிட்ட போதிலும்
சோறுதின்ன மானம்விற்கும்
துக்கவாழ்வு தொட்டிடோம்"

என்ற உயர்ந்த பண்பாடு பஞ்சாப் கிராமங்களில் வேகமாக வளர்ந்து வரும் அதிசயத்தைப் பார்த்தோம்.

கிராம மக்களை உற்சாகமாக இந்தத் திருப்பணியில் ஈடுபடும்படி செய்வதற்குப் பஞ்சாப் சர்க்கார் உயர்தர அதிகாரிகளின் உண்மையான தொண்டைத்தான் சொல்ல வேண்டும். தாங்கள் ஆயிரம், இரண்டாயிரம் சம்பளம் பெற்றாலும் தாங்கள் மக்களின் சேவகர்கள் என்பதை இங்குள்ள அதிகாரிகள் மறந்து விடுவதில்லை. கிராம மக்களுடன் கிராம மக்களாக அவர்கள் இணைந்து பழகுவதைப் பார்த்தால் இப்படித் தமிழ் நாட்டில் எப்பொழுது சர்க்கார் அதிகாரிகள் கிராமத்து மக்களை நேசிப்பார்கள் என்று எண்ணி ஏங்கத்தான் வேண்டியிருக்கிறது.

தியான்பூர் மடம்

தியான்பூர் என்னும் கிராமத்துக்குச் செல்வோம். இது ஒரு புகழ்பெற்ற புண்ணிய ஸ்தலம். இங்கு நான் கண்ட ஒரே ஒரு அதிசயத்தை மட்டுமே இந்தக் கட்டுரையில் குறிப்பிட விரும்புகிறேன். இது நாம் தெரிந்து கொள்ள வேண்டிய விஷயம்.

பைராகி என்று சொல்லப்படும் சாமியார்களின் தலைவர் இருக்கும் மடம் தியான்பூரில் இருக்கிறது. இந்த மடத்தை ஸ்தாபித்தவர் பிரசித்தி பெற்ற பாவால்ஜி சுவாமிகள். பாவால்ஜி சுவாமிகளை ஷாஜஹான் சக்கரவர்த்தியின் மூத்த குமாரன் தாரா குருவாக மதித்து அவர் கட்டளைப்படி நடந்து வந்ததாகச் சரித்திர ஆசிரியர்கள் கூறுகிறார்கள். பாவால்ஜியின் வேண்டுகோளுக்கு இணங்கி தாரா இந்து மத சம்பந்தமான நூல்களை எல்லாம் படித்தான். சமஸ்கிருத பண்டிதர்களையும், சங்கீத வித்வான்களையும் தாரா ஆதரித்து ஏராளமாகப் பரிசுகள் கொடுத்து வந்தான். தாரா தன் குருநாதர் பாவால்ஜி ஸ்தாபித்த மடத்துக்கு ஏராளமான சொத்துக்கள் எழுதி வைத்திருக்கிறான்.

பாவால்ஜி மகா சமாதியான பிறகு அவருக்கு ஒரு கோயிலே எழுப்பியிருக்கிறான் தாரா. தியான்பூர் என்ற கிராமம் முழுவதும் மடத்துக்குச் சொந்தமானதுதான். ஆண்டுதோறும் தியான்பூர் மடத்தில் பாவால்ஜி மகா சமாதி அடைந்த தினத்தில் மிகவும் விசேஷமான உற்சவம் நடக்குமாம். இந்த உற்சவத்துக்குச் சுற்று வட்டாரத்தில் இருக்கும் கிராமங்களில் இருந்தெல்லாம் ஜனங்கள் வந்து கூடுவார்களாம். கிராம மக்கள் எல்லாரும் சமாதிக்குச் சென்று பிரார்த்தனை செய்து கொள்வார்கள். வேண்டிய வரங்களை எல்லாம் கொடுக்கும் சக்தியுள்ள சமாதி என்ற நம்பிக்கை கிராம மக்களுக்குப் பூரணமாக இருக்கிறது.

இப்பொழுது மடத்தின் தலைவராக இருப்பவர் துவாரகாதாஸ்ஜி சுவாமிகள். இவர் கிராம மக்களுக்குப் பல வகைகளில் தொண்டாற்றி வருகிறார். தம்முடைய செலவில் ஒரு உயர்தரப் பாடசாலை நடத்தி வருகிறார். அந்தப் பள்ளிக்கூடத்தின் நடைமுறையைப் பார்க்க முடியவில்லை என்றாலும் பொதுவாகத் தியான்பூரில் உள்ள மக்கள் எல்லாரும் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கவேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்துடன் ஆரம்பிக்கப் பட்டிருக்கிறது என்பதைத் தெரிந்து கொண்டோம்.

தியான்பூர் கிராமத்தில் போக்குவரத்துக்குச் சௌகர்யமாக இரண்டு மைல் நீளத்துக்கு உறுதியான கருங்கல் சாலை போட்டிருக்கிறார்கள். இந்தச் சாலையின் செலவில் ஒரு பகுதியை அதாவது பத்தாயிரம் ரூபாயை மடத்துத் தலைவரே ஏற்றுக் கொண்டாராம். கிராமத்து மக்கள் தங்கள் உடல் உழைப்பைத் தானமாகக் கொடுத்து உதவியிருக்கிறார்கள்.

தியான்பூர் மடத்தில் மத்தியானம் தங்கினோம். அங்கு எங்களுக்குச் சமூகநல ஸ்தாபனத்தார் ஒரு இசை விருந்துக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். சமூகநல ஸ்தாபனத்தில் தொண்டாற்றும் ஒரு கவியே இசை விருந்து அளித்தார். அவர் பாடிய பாடல் தனிமையில் துன்பத்தில் உழன்று பரிதவித்துப் பாடும் பாட்டாக இல்லை. மண்ணாசை இல்லை. நல்லது கெட்டது என்று பாகுபடுத்தாமல் எல்லாவற்றையும் அழித்து விடுவதான பயமுறுத்தல் இல்லை. பழைய அடிமை உலகத்தின் நாதமே இல்லை.

உழைத்துக் களைத்த தோழர்களே!
விழித்து எழுந்து வாருங்கள்!
பழைய பஞ்சாபின் புழுதியை உதறிப்
புதிய பஞ்சாபை அமைப்போம்!

என்ற பொருள் படும் பஞ்சாபி கீதத்தை உணர்ச்சியோடு பாடினார்.

இளங் கவியின் பாட்டைக் கேட்ட கிராமத்து மக்களின் உள்ளங்களில் பலவித உணர்ச்சிகள் தோன்றின. கூனிக் குறுகி உட்கார்ந்திருந்த சிலர் நிமிர்ந்து உட்கார்ந்தனர். சிலர் ஆனந்தப் பட்டனர். சிலர் புதுமையில் மயங்கி நின்றனர். மொத்தத்தில் மக்கள் நம்பிக்கையும் மகிழ்ச்சியையும் கொண்டிருந்தனர்.

தியான்பூர் உயர்தரப் பள்ளிக்கூடத்து வாத்தியார் வந்து தம்மை அறிமுகப்படுத்திக் கொண்டார். அவரிடம் இரண்டொரு கேள்விகள் கேட்டு வைத்தேன். அதிலிருந்து தெரிந்து கொண்ட உண்மையைக் கேட்டால் எல்லாரும் வியந்து போவீர்கள். அந்த வாத்தியார் தனிப்பட்ட முறையில் படித்துப் பஞ்சாப் சர்வகலாசாலையில் எம். ஏ. பட்டம் பெற்றவர். அவருக்குப் பொதுவாகத் தென்னாட்டைப் பற்றி ஒன்றுமே தெரியவில்லை. அதிலும் தமிழ் நாட்டைப் பற்றி அடியோடு தெரியவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். பொதுவாக, தென்னாட்டில் வடநாட்டு மக்களும் வடநாட்டுத்தலைவர்களும் அடைந்துள்ள கௌரவம் வடநாட்டில் தென்னாட்டு மக்களும் தென்னாட்டுத் தலைவர்களும் அடையவில்லை. நம் நாட்டைப் பற்றியும், நமது பண்பாட்டைப் பற்றியும்

வடநாட்டில் உள்ள பொது மக்களுக்குப் பொதுவாக ஒன்றுமே தெரியவில்லை என்று சொன்னால் மிகையாகாது. அப்படி நம்மைப் பற்றித் தெரிந்து கொண்டிருப்பவர்களும் நல்ல முறையில் தெரிந்து கொண்டிருக்கவில்லை என்பதைப் பார்க்கும்போது மனத்துக்குச் சலிப்பாகத்தான் இருந்தது. தென்னாட்டைப் பற்றியும் தென்னாட்டுப் பண்பாட்டின் சிறப்பைப் பற்றியும் அங்குள்ள மக்கள் தெரிந்து கொள்வதற்கு வழிவகைகள் செய்ய வேண்டும்.

கூட்டுப் பண்ணை

பஞ்சாப் கிராமங்களில் சமூகநல ஸ்தாபனத்தார் சாதித்துள்ள அற்புதங்களுக்குள்ளே மிகப் பெரிய அற்புதம் அலிவால் என்ற கிராமத்தில் பதினொரு மைல் நீளம் சிமெண்ட் சாலை அமைத்திருக்கும் அற்புதமாகும். இந்தச் சாலையினால் சுமார் அறுபது கிராமங்கள் ஒன்றுடன் ஒன்று போக்குவரத்துச் சௌகரியங்களுடன் இணைந்திருக்கின்றன. இந்தச்சாலையைப் போடுவதற்கு வேண்டிய நிலம், பணம், உழைப்பு எல்லாவற்றையுமே கிராம மக்கள் மனம் உவந்து வழங்கி இருக்கிறார்கள்.

இந்தக் கிராமத்தை ஒட்டினாற்போல்தான் பியாஸ்—ரவி நதியின் கால்வாயான அப்பர் பாரி—தோ ஆப் கால்வாய் வந்து பிரிந்து போகிறது. ஒரு கிளை நதி பாகிஸ்தானுக்குப் போகிறது. இங்கிருந்து பாகிஸ்தான் சுமார் பத்து மைல் தூரத்துக்குள்தான் இருக்கிறது. இந்தக் கால்வாயில் செல்லும் தண்ணீரை அடைத்து நிறுத்துவதற்கு வசதியான அணை ஒன்றும் இந்தக் கால்வாயில் இருக்கிறது. இந்த அணைக் கதவை மூடினால் கால்வாயில் ஒரு சொட்டுத் தண்ணீர்கூட பாகிஸ்தானுக்குப் போகாது. ஆனால் அணைக் கதவை மூடவே இல்லை. கால்வாயில் இரு கரையும் ததும்பிக் கொண்டு தண்ணீர் ஓடிக் கொண்டிருக்கிறது. இதுபோல் பாகிஸ்தானுக்குள் செல்லும் பல கால்வாய்கள் அங்கு இருக்கின்றன. எல்லாக் கால்வாய்களிலும்தண்ணீர் போகிறது. இதைக் கண்ணால் பார்த்தபோது பாகிஸ்தான் இந்தியாவின்மீது சுமத்தும் வீண் பழியை எண்ணி வேதனைப்படாமல் இருக்க முடியவில்லை. முழுப் பூசனிக்காயையும் சோற்றில் மறைக்க முயன்று வரும் கதைதான் நினைவுக்கு வந்தது. யார் என்ன மாதிரி தில்லுமல்லுகள் செய்தாலும் கடைசியில் உண்மைதானே வெற்றியடையும்!

இங்கிருந்து பாகிஸ்தான் வெகு சமீபத்தில் இருந்தாலும் போக்கு வரத்துச் சாலைகள் எல்லாம் மூடப்பட்டிருக்கின்றன. இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் உள்ள ரவி நதியில் பெரிய பாலம் ஒன்று இருக்கிறது. அந்தப் பாலத்தை இந்திய எல்லையில் இந்திய சிப்பாய்களும், பாகிஸ்தான் எல்லையில் பாகிஸ்தான் வீரர்களும் இரவு பகல் இருபத்து நாலு மணி நேரமும் காவல் புரிந்து வருகின்றனர்.

எல்லைப்புறத்தில் உள்ள கிராமங்கள்தானே அமைதியாக இருக்க வேண்டும். அதற்காகப் பஞ்சாப் சர்க்கார் சமூக நல ஸ்தாபனத்தின் மூலம் இங்குள்ள கிராமங்களில் அபாரமான சேவை செய்து வருகிறார்கள். லட்சக்கணக்கான ரூபாய்களை வாரி இறைத்து மக்களுக்கு நம்பிக்கை யூட்டி வருகிறார்கள். பாகிஸ்தான் பிரிவினையின் போது இங்குள்ள மக்கள் விவசாயத்தை மறந்து வீண் பீதியுடன் இருந்தார்களாம். அந்தப் பீதியை யெல்லாம் அடியோடு போக்கி வருகிறார்கள்.

இந்த வட்டாரத்து நிலங்களுக்கு வடிகால் வசதிகளே கிடையாது. வடிகால் வெட்ட வேண்டுமென்று நாற்பது ஆண்டுகளுக்கு முன்னாலேயே திட்டமிட்டிருந்தார்களாம். அப்பொழுது இருந்த அன்னிய சர்க்கார் சற்றும் அதில் கவனம் செலுத்தவில்லை. திட்டம் வெறும் காகிதத்திலேயே இருந்தது. நாடு சுதந்திரம் பெற்றவுடன் சமூக நல ஸ்தாபனத்தார் ஆறு மைல் நீளத்துக்கு ஒரு கால்வாய் வெட்டி அதன் மூலம் நிலங்களுக்கு வேண்டாத தண்ணீரை வடிவதற்கு வசதி செய்து கொடுத்து வருகிறார்கள். சுமார் பத்தாயிரம் ஏக்கர் நிலத்துக்கு இப்பொழுது போதுமான வடிகால் வசதி யிருக்கிறது.

நிலங்கள் துண்டு துண்டாகப் பிரிக்கப்பட்டுவ்வசாயத்துக்குவசதியில்லாமல் சிதைந்து சின்னா பின்னப்பட்டுக் கிடந்தன. அவைகளை எல்லாம் ஒன்று சேர்த்து, கூட்டுப்பண்ணை முறையில் விவசாயம் நடத்துவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். சோஷலிஸ சமுதாய அமைப்புக்கான கூட்டுப் பண்ணை முயற்சிகளை மக்கள் மத்தியில் பரப்பி வருகிறார்கள்.

அந்த நிலங்களில் நல்ல உரம் போட்டு, பொறுக்கு விதைகளை உபயோகித்து விவசா

ஒலித்தவண்ணமிருக்கிறது . . .



உங்கள் இல்லத்திலும் இம்மாதிரி ஆனந்த மான நிகழ்ச்சிகள் எத்தனையோ உள. அவைகளை 'கோடக்' காமிராக்களைக் கொண்டு படம் பிடியுங்கள்.

'ஒரு எளிய காமிராவை எப்படி உபயோகிப்பது' என்ற படங்களுடன் விளக்கிய கோடக் புத்தகத்தை வாசியுங்கள். உங்களுக்கு அருகாமையிலிருக்கும் கோடக் வியாபாரியிடம் பிரதி ஒன்று பன்னிரண்டு அணாவுக்குக் கிடைக்கும்.

கோடக் லிமிடெட் (இங்லாந்தில் இணைக்கப்பட்டது) பம்பாய் – கல்கத்தா – டில்லி – மதராஸ்

மூலம் நீங்கள் எப்பொழுதும்
எடுக்க முடியும்

பத்தில் அபாரமான முன்னேற்றம் காண்பதற்கு வசதி செய்து கொடுத்திருக்கிறார்கள். இதனால் இத்தனை வருஷத்தையும்விட இருபத்தைந்து லட்ச ரூபாய் மதிப்புள்ள தானியம் அதிகமாகக் கிடைக்கும் என்று சமூக நல ஸ்தாபனத்தார் எதிர்பார்க்கிறார்கள். அவர்கள் எதிர்பார்ப்பது வீண் போகாது என்பதை அங்குள்ள விவசாயிகள் கூறுவதிலிருந்து நம்ப முடிகிறது.

“பஞ்சாப் கிராமங்களை எல்லாம் ஒருவாறு பார்த்தாகி விட்டது. நாம் கிளம்பிச் செல்லலாமா!” என்றார் ஒரு பத்திரிகையாளர்.

“அவசரப் படாதீர்கள். இன்னும் ஒரு கிராமத்தை மட்டும் பார்த்து விட்டுப் புறப்படலாம். அவர்கள் நம்மை எல்லாம் வரவேற்பதற்காகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். நாம் இங்கு வரப் போகிறோம் என்பதைத் தெரிந்து அவர்கள் சென்ற வாரம் நடக்க வேண்டிய ஒரு விழாவை இன்றைக்கு வைத்துக் கொண்டிருக்கிறார்கள்” என்றார் இந்திய சர்க்கார் அதிகாரி.

“அது என்ன விழா!”

“பஞ்சாப் சமூகநல ஸ்தாபனத்தார் கிராமங்களில் ஒரு புதுவிதமான திருநாளைப் புகுத்தியிருக்கிறார்கள். அதாவது நன்றாக வீடு வைத்துக் கொண்டிருந்தவர்கள், நன்றாக மாடு வளர்த்திருப்பவர்கள், நன்றாகக் குழந்தைகளை வளர்த்துக் காப்பாற்றி வருகிறவர்கள் எல்லாருக்கும் பரிசுகள் வழங்கி வருகிறார்கள். அந்தப் பரிசு வழங்கும் வைபவத்தைப் பெரிய திருவிழாவாகக் கொண்டாடுகிறார்கள். அந்தத் திருவிழா இன்று சங்கரபுரம் என்ற கிராமத்தில் நடக்கிறது. நாம் அங்கு போக வேண்டும்” என்றார்.

வாருங்கள் சங்கரபுரம் புறப்படுவோம்.

சங்கரபுரத்துக்குச் செல்லும் சாலை புதிதாகப் போடப்பட்டிருந்தது. மண் சாலை தான். ஆனாலும் சுத்தமாக மேடு பள்ளம் இல்லாமல் இருந்தது. இடையிடையே கால்வாய்கள் குறுக்கிட்டன. அந்தக் கால்வாய்களை யெல்லாம் தாண்டி ஒரு மேட்டில் ஏறி ஜீப் வண்டிகள் இறங்கின. எதிரில் கண்ட காட்சி பிரமிப்பை அளிக்கும்படி இருந்தது. கிராமத்து மக்கள் கூட்டமாக அந்தச் சாலை முனையில் கூடியிருந்தார்கள். கிராமத்துத் தலைவர்கள் கையில் ஆளுக்கு ஒரு மாலை வைத்துக் கொண்டிருந்தார்கள். நாங்கள் ஜீப் வண்டியில் இருந்து இறங்கியதும் பஞ்சாபின் கிராமத்து வாத்தியங்கள் முழங்க ஆரம்பித்தன. பஞ்சாப் சமூகநல அதிகாரி பத்திரிகையாளரை ஒவ்வொருவராகக் கிராமத்துத் தலைவருக்கு அறிமுகம் செய்து வைத்தார். கிராமத் தலைவர் பத்திரிகைப் பிரதிநிதிகளுக்கு மாலைகள் சூட்டினார். பின்னர் பத்திரிகையாளர்களை ஊர்வலமாகத் தங்கள் கிராமத்துக்கு அழைத்துச் சென்றனர்.

அதிசயத் திருவிழா

கிராமம் திருவிழாக் கோலத்துடன் விளங்கியது. கிராமத்தில் மக்கள் குதூகலமாக இருந்தனர். இங்கு கைத்தொழிலும், விவசாயமும் எல்லாரிடமும் பரவி இருப்பதைக் காணலாம். இங்கே மக்கள் தாங்கள் உழைப்பதின் மூலம் தான் இன்பமாக இருக்க முடியும் என்பதை உணர்ந்து உழைத்து வருகின்றனர். அதோடு கிராமத்து மக்களிடையே ஒற்றுமை நிலவுகிறது. மிகவும் கஷ்டப்பட்ட மக்களாதலால் சுதந்திரம் பெற்றவுடன் தங்களுக்குள்ள உழைப்புத் திறமையை நன்றாகப் பயன்படுத்திச் செம்மையாக வாழ்வதற்குத் துடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

கிராமத்தில் உள்ள வீடுகளை எல்லாம் போய்ப் பார்த்தோம். இங்கு ஹரிஜனங்கள் வேறு இடத்தில் தனியாக இல்லை. கிராம மக்களோடுதான் சேர்ந்து இருக்கிறார்கள். அவர்கள் வீடு ஜாதி இந்துக்கள் வீடுகளைவிட இன்னும் சுத்தமாக இருந்தது. இதை எல்லாம் பார்த்துக் கொண்டு பொதுக் கூட்டத்துக்கு வந்து சேர்ந்தோம்.

கூட்டத்தில் சீக்கியர்களும், பஞ்சாபியர்களும், பெண்மணிகளும் குழந்தைகளும் கூடியிருந்தார்கள். கண்ணை மூடிக் கொண்டால் அவர்களுடைய குதூகலமான முகங்கள் இதோ என் எதிரில் தெரிகின்றன. கூட்டத்துக்கு அந்த மாவட்டக் காங்கிரஸ் கமிட்டித் தலைவர் தலைமை வகித்தார். நன்றாக வீடு வைத்திருந்தவர்கள், நன்றாக மாடு வளர்த்தவர்கள், நன்றாகக் குழந்தை வளர்த்த தாய்மார்கள் எல்லாருக்கும் பரிசுகள் வழங்கினார். நன்றாகக் குழந்தையை வளர்த்த தாய்க்குப் பரிசு வழங்கும்போது குழந்தையைத் தூக்கி உச்சி முகர்ந்து ஆசீர்வாதம் செய்தார். கள்ளமற்ற அந்தக் குழந்தையின் பால் வடியும் முகம் இன்னும் என் கண்ணை விட்டு மறையவில்லை.


கூட்டத்தின் ஆரம்பத்திலும் முடிவிலும் நியான்பூர் மடத்தில் நாங்கள் கேட்ட அதே பாடலைப் பாடினார்கள். இந்தப் பாட்டைக் கிராம மக்கள் எல்லாரும் சேர்ந்து பாடினார்கள். கடைசியில் எல்லாரும் ஒரே குரலில் “புதிய பஞ்சாபை அமைப்போம்” என்று விண்ணதிர கோஷமிட்டார்கள்.

இந்தியாவில் மிகச் சிறந்த முறையில் வேலை செய்து வருவது பட்டாலா சமூக நல ஸ்தாபனம்தான் என்பதை ஏற்கனவே நான் கேள்விப்பட்டிருந்தாலும் பஞ்சாப் கிராமங்களில் அதன் சேவையை நேரில் பார்த்து உண்மையில் வியந்தே போனேன். அதற்குக் காரணம் இங்குள்ள சமூக நல ஸ்தாபன அதிகாரிகளின் உற்சாகமும், பஞ்சாப் மக்களின் தேசபக்தியும்தான். இருந்தாலும் சங்கரபுரத்தின் அதிசயத் திருவிழாக் கூட்டம் என்னை உணர்ச்சி கொள்ளச் செய்து விட்டது.

பஞ்சாப் மக்கள் ஏற்றத் தாழ்வில்லாமல் தேன் சேகரிக்கும் தேனீ போல் உழைத்து வருவதைப் பார்த்துப் பிரமித்துப் போனேன். பஞ்சாபில் சில தினங்கள்தான் தங்கியிருந்தாலும் பஞ்சாபை மறக்க முடியவில்லை.

** ** **

அடுத்தாற் போல் நேயர்களை இந்தியாவின் வடக்குப் பகுதியான ஜம்மூவுக்கும் காஷ்மீரத்துக்கும் அழைத்துப் போக விரும்புகிறேன். ஜம்மு காஷ்மீரம் பகுதிகளில் அராஜகமும் குழப்பமும் மிகுந்திருந்த காலத்தில் நமது வீரர்கள் விரைந்து சென்று அராஜகத்தையும் குழப்பத்தையும் அடக்கி அமைதியை நிலைநாட்டினார்கள். அப்பொழுது இந்திய வீரர்கள் காட்டிய வீர சாகஸத்தைக் கண்டு நவீன ராணுவப் போர்க்கலையில் பிரசித்தி பெற்ற பிரிட்டிஷ் ராணுவ தளபதிகளே மூக்கின் மேல் விரல் வைத்துத் திகைத்துப் போனார்கள். அவ்வாறு நமது பாரத நாட்டு வீரர்கள் வெற்றிக் கொடி பிடித்த அற்புதங்களை அடுத்த இதழில் காணலாம். (தொடரும்)



கீர்த்தனம் 21 ராகம்: ஷண்முகப்ரியா ஆதி தாளம்

பல்லவி

கண்ணனைப் பணி மனமே தினமே (கண்ணனை)

சரணம் 1

மண்ணில் யசோதை செய் புண்யஸ்வரூபனை
மாதவனை நமது யாதவ தீபனை (கண்ணனை)

சரணம் 2

பாண்டவர் நேயனை பக்த ஸஹாயனை
பவளச்செவ்வாயனை பரமனை மாயனை (கண்ணனை)

சரணம் 3

மங்களமூலனை கோகுல பாலனை
மணமிகு துளஸி மாலனை பாலனை (கண்ணனை)

சரணம் 4

விண்ணவர் போற்றவே மண்ணில்வரும் வேதப்
பண்ணனை ச்யாமள வண்ணனைத் தாமரைக் (கண்ணனை)

ஷண்முகப்ரியா 56-வது மேள ராகமாகும். ராகாங்கம். ரக்திராகம். எப்பொழுதும் பாடத் தகுந்தது. (இந்த ராகம் வேங்கடமகியவர்கள் ஸம்பிரதாயத்தில் ச்சாமரம் என்ற பெயருடன் வழங்கப்படுகிறது.) இதில் வரும் ஸ்வர ஸ்தானங்கள் ஷட்ஜ பஞ்சமம் தவிர சதுச்ருதி ரிஷபம், ஸாதாரண காந்தாரம், பிரதி மத்யமம், சுத்த தைவதம், கைசிகி நிஷாதம்.

பல்லவி —1 களை

1 , , , ஸ நி ஸ்ரி தா பா பா ம க மா | பா ; ; ; | ; , நி த ப த நி ||
க - ண்ண - னை ப்ப ணி - ம ன மே நி ன - மே -

1 ; ரி ஸ நி த பா பாதநி தபபா , க மா | பா ; ; ; | நீ தபா , தாரிஸ நீ ||
க ண் - - ண னைப் ப - - ணி - - ம ன மே நி ன - - - - மே

3 ; ரி ஸ நி த பா பாதநி தபபா , க மா | பா ; ; ப த | நிஸ ரிக்ரி ரி ஸ நீ ||
க - - ண்ணனைப் ப - - ணி - - ம ன மே நி - ன - - - - - - மே

; ரி ஸ நி த பா நி த ப பா க மா | பா ; ; ; | ; ; ; ; ||
க - - ண்ணனைப் ப - ணி - ம ன மே

சரணம் 1

1 , , , நீ த நீ ஸா ; ஸா ஸா | , , , ரீ ரி ஸநீ, | ஸா , நி நிரிஸநிததா, ||
மண்ணில்ய சோ தை செய் புண்ய ஸ்வ- ரூ ப - - - னை - -

2 , , , நீ த நீ ஸா , நி ரீ ஸா | , , , ரீ ரி ஸநீ, | ஸா ; ரிக்ரிஸ நிதா, ||
மண்ணில்ய சோ - தை செய் புண்ய ஸ்வ- ரூ ப - - - னை -

1 , , , ப த நி தபா, தநீ, த த தா,ரிஸ்ரீ, | நி , ரி ஸ நி த பா | நி த ப ம ப த நிஸா, ||
மா - த வ - னை - ந ம - து - - யா - - த வ தீ - - - ப - னை -

2 , , , ப த நி தபா, தநீ, த த தா,ரிஸ்ரீ, | நி , ரி ஸ நி த பா | பாதநிதபமா பதநிஸ ||
மா - த வ - னை - - ந ம - து - - - யா - - த வ தீ - - - - - ப - னை -

ரிக்ரீ,க் ரிஸாரிஸநிதா பாதநிதபபா , கமா | பா ; ; ; | ; ; ; ; ||
- - - - - க - ண்ண - னை ப்ப - - ணி - - ம ன மே - - - - - - -

சரணம் 2

1 , , , ப த நி நீ ஸா ; ஸா ஸா | , , , ரீ ரி ஸநீ, | ஸா ; நிரிஸநிததா, ||
பா - ண்டவர் நே ய னை பக்த ஸ - ஹா ய - - - னை , -

2 , , , ப த நி த நி ஸா , நி ரீ ஸா | , , , கா ரி ஸநீ, | ஸா ; ரிக்ரிஸநிதா, ||
பா - ண்டவர் - நே - ய னை பக்த ஸ - ஹா ய - - - னை -

1 , , , ni ni ni nī , da da pa da ṙi ṡ nī | , , , ṡnī, ni da pā | ; pa da ma padāniṡā ||
பவள ச்செ -ல் வா - - ய - னை | ப - ர ம னை | மா - - ய - னை -

2 , , , ni ni ni nī , da da pa da ri ṡ nī | , , , ṡnī, ni da pā | pani dā pa ma pā,da niṡ ||
பவள ச்செ -ல் வா - - ய - னை | ப - ர ம னை | மா - - - - ய - னை -

ṙiġṙ,ġ ṙiṡā ṙi ṡni dā
- - - - க - - ண் ண - னை ப்பணி மனமே

சரணம் 3

1 , , , ṙ ṙiġ, ṡā ṙ ; , ġ ṙ | , , , ġā ṙi ṡnī, | ṡā ; ; ṙiġṙiṡ ||
மங் க - ள ரூ ல னை | கோ கு ல - | பா ல - - -

2 nidā, , ṙ ṙiġ, ṡā ṙ ; , ġ ṙ | , , , ġā ṙi ġā | ġġṙiṡ ; ; ṙiġṙiṡ ||
னை - - மங் க - ள ரூ ல னை | கோ கு ல | பா - - ல - - -

1 niġ, , ni ni ni nī ; ni ṡā niṡṙ , ni | , , ṙi ṡ ni da pā | da ma pā da ni ṡā ||
னை - - மணி மு டி ள வீ - - - | மா - - ல னை | - - பா - ல னை

2 , , , ni ni ni nī ; ni ṡā niṡṙ , ni | , , ṙi ṡ ni da pā | pani dā pa ma pā,da niṡ ||
மணி மு டி ள வீ - - - | மா - - ல னை | பா - - - - ல - னை -

ṙiġṙ,ġ ṙiṡāṙiṡni dā
- - - - க - - ண்ண னை ப்பணி மனமே.

சரணம் 4

, , , ṙ ni ṡā ṙ ; , ġ ṙ | , , , ġā mi ġā | ṙ ; ; ṙ ||
விண்ணவர் போ ற்றவே | மண்ணில் வ | ரும் வே

ṡā, nī ni nī ; , pa da ni ṡā | , , ṙi ṡ ni da pā | ni da pama pā,da niṡ ||
த ப்ப ண்ண னை ச்யா - ம ள | வண் - ண னை | த்தா - - - ம - ரை -

ṙiġṙ,ġ ṙiṡāṙiṡni dā
- - - - க்க - - ண்ண - னை ப்பணி மனமே

செழிப்பிற்கு மூலாதாரம் எது?

நாம் 'செழிப்பு' 'முன்னேற்றம்' என்று பலவிதமாகப் பேசக் கேட்கிறோம். ஆனால் நம் நாட்டில் பெரும்பாலோருக்கு இவ்விரு வார்த்தைகளின் பொருளே தெரியாது. ஏனெனில் இவர்களில் ஐந்தில் நான்கு பேர்களுக்கு எழுதப்படிக்கத் தெரியாது. இவர்களுக்கு கல்வி கற்பித்து, நம் நாட்டு விவகாரங்களை உணர்ந்து அவைகளைத் தீர்ப்பதில் பங்கு எடுக்கச் செய்வது நம் கடமை.

பொது ஜனங்களின் கல்வி பிரசார அபிவிருத்தியுடன், காகிதத்தின் தேவையும் அதிகரிக்கிறது. இத்தேவையை சமாளிக்க, நமது காகித தொழிற்சாலைகள் தயாராயிருக்கின்றன. நம் நாட்டின் 32 காகிதத் தொழிற்சாலைகள், ஆண்டுதோறும் 1,56,000 டன் காகிதம் உற்பத்தி செய்கின்றன. 1956 ம் வருடத்தில், 5 கோடி ரூபாய் செலவில் 2,87,000 டன் காகிதம் உற்பத்திச் செய்ய இத்தொழிற்சாலைகள் திட்டம் செய்துள்ளன. நம் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு எஃகு இன்றியமையாதது. இதற்காகவே டாடா அயரன் அண்டு ஸ்டீல் கம்பெனியார், தங்களுடைய உற்பத்தியை மென்மேலும் அதிகரிக்க பல திட்டங்களைக் கையாண்டு வருகிறார்கள்.

இரும்பு உற்பத்தி	
1955 ...	10,50,000 டன்கள்
1959 ...	20,00,000 டன்கள்



தனியார் தொழில் தேச நலனுக்காகப் பாடுபடுகிறது.

தி டாடா அயரன் & ஸ்டீல் கம்பெனி லிட்.

TM 575

வாழத் தெரிந்தவள்



டி. எஸ். கே.

நடு அறையில், சுழலும் விசிறியின் குளிர்ந்த காற்றை அனுபவித்துக் கொண்டு சிந்தனையே உருவாய் அமர்ந்திருந்த கமலத்தினுடைய உள்ளத்தின் அடித்தளத்திலிருந்து நீண்டதொரு பெருமூச்சுப் பிறந்தது. அந்தப் பெருமூச்சின் உஷ்ணத்தில் அறை முழுவதுமே வெப்பம் படர்ந்தது போல் ஆகிவிட்டது!

சோபாவிலிருந்தவாறே தலை நிமிர்த்து எதிர்ச்சுவரைப் பார்த்தாள் கமலம். அவளும் ரங்கநாதனும் சேர்ந்து எடுத்துக் கொண்ட புகைப்படம் கண்களைத் தாக்கியது. ஆம், அன்றிருந்த குதூகலம் இன்று எங்கே போய் விட்டது! எவ்வளவு ஆசையாக அவளை அழைத்துச் சென்றான், புகைப்பட நிலையத்துக்கு! ஆனால், இன்று! ....

கமலம், சிந்தனையின் போக்கைத் தாளாமல் திடுக்கிட்டுத் தன்னுள்ளே பார்த்தாள். 'பொய், பொய்' என்று அவள் நெஞ்சம் அலறியது!

பொய் தான்! ரங்கநாதனுக்கு அவளிடமிருந்த அன்பு குறைந்து விட்டதென்று யார் சொல்ல முடியும்! உண்மையில், ரங்கநாதனுக்கு அவளிடம் அளவில்லாத அன்பு. அதை அவளும் உணரத்தான் செய்கிறாள். ஆனால், அவன் அன்பை மாந்தி மாந்தி உண்டாலும் மயக்கம் உண்டாகவில்லையே, ஏன்! இதயங்களின் பிணைப்பில் நிறைவு ஏற்படவில்லையே, ஏன்!......

அவளுக்கும் ரங்கநாதனுக்கும் திருமணம் நடந்த அன்று மாலை. ரங்கநாதனுடைய நண்பர்கள் ஏராளமான பேர்கள் வந்திருந்தார்கள். அவன் என்ன, சாதாரண மனிதனா! தமிழ் நாட்டின் தலை சிறந்த இலக்கிய கர்த்தாக்களில் ஒருவன்; மேடைப் பிரசங்கி; சமூக நல வாதி; கலை வளர்ச்சிக்குப் பாடுபடும் உண்மைத் தொண்டன்!

கமலத்துக்கு ஆனந்தம் கட்டுக் கடங்கவில்லை. கல்யாணத்துக்குச் சில நாட்களுக்கு முன்பிருந்தே அவளுடைய சிநேகிதிகள் அவளைக் கேலிசெய்ய ஆரம்பித்து விட்டார்கள். உள்ளுக்குள் பலருக்குப் பொறாமை. முதல்தரமான கணவன் அவளுக்குக் கிடைக்கிறானே என்று!

சுவர்க் கடிகாரம் நான்கு முறை ஒலித்து அவள் சிந்தனையைக் கலைத்தது.

இன்னும் இரண்டு மணி நேரம் ஆகும், ரங்கநாதன் வருவதற்கு. நிச்சயம் வெறும் கையுடன் வரமாட்டான். மணக்கும் கதம்பத்தை ஆசையோடு வாங்கி வருவான். ஆனால், அவன் அதைக் கேசத்தில் சூட்டிக் கொள்ளும் வரைகூட இருக்க மாட்டானே!

கமலத்தின் நெஞ்சு வெடித்து விடும்போலிருந்தது! யாரேனும் வேண்டியவர்கள் எதிரில் இருந்திருந்தால் கட்டாயம் அவள் ஒரு குரல் அழுதிருப்பாள்!

அவளுக்கு எந்த விதமான குறையையும் வைக்கவில்லை, ரங்கநாதன். "கமலம்! சில்க் எம்போரியத்தில் இந்தப் புடவையைப் பார்த்தேன். ரொம்ப நன்றாயிருந்தது. உனக்குப் பொருத்தமாக இருக்கும் என்று வாங்கினேன்" என்று கூறி, அவன் வாங்கிக் கொடுத்த புடவைகள், துணிகள் எத்தனை எத்தனை! அவன் தன்னுடன் அழைத்துக் கொண்டு செல்லாவிட்டாலும் சிபாரிசு செய்து எத்தனையோ சினிமாவுக்கு அனுப்பியிருக்கிறான்!

அவள்மீது அன்பு இல்லாமலா, அவன் இப்படிச் செய்கிறான்!

அவளோடு உல்லாஸமாக உலாவ, மணிக்கணக்காக உலகத்தை மறந்து பேசிக்கொண்டிருக்க, கடற்கரைக்கும் சினிமாவுக்கும் அழைத்துச் செல்ல அவனுக்கு நேரமில்லை. நாள்தோறும் சென்னை நகரின் ஒரு பேட்டையில் இலக்கிய சர்ச்சை, சொற்பொழிவு, திட்டம் தீட்டுதல் என்று ஒவ்வொரு இடமாகப் போய் விடுவான். இரவு ஒன்பது அல்லது பத்து மணிக்குத்தான் திரும்பி வருவான். களைப்பு மேலிட, உணவருந்தி விட்டுப் படுக்கையில் உடலைச் சாய்த்தால், அடுத்த கணம் நித்திரையின் வசப்பட்டு விடுவான். கமலம், சமையலறைக் காரியங்களை முடித்துக் கொண்டு வரும் சமயத்தில் அவன் ஆழ்ந்த துயிலில் இருப்பான்!

தனிக் குடித்தனம் வைத்த புதிதில் கமலத்துக்குக் கணவனின் அவசரம் ஒருவித இன்பமாகத்தான் இருந்தது. பறந்து பறந்து அவனுக்குப் பணிவிடை செய்வதில் தனியானதொரு கிளுகிளுப்பு இருக்கத்தான் செய்தது. ஊரார் அவனைப் புகழும்போது அவள் மார்பு விம்மும். 'என் கணவர் அவர்!' என்ற உரிமையில் அவள் அகமகிழ்ந்து போவாள்.

நாட்கள் செல்லச் செல்ல, அவளால் அவன் அவசரத்துக்கு ஈடு கொடுக்க முடியவில்லை! அவளையும் மீறிய கசப்பு இதயத்தில் மூண்டு விட்டது. நிறைவுகளிலெல்லாம் அவள் குறையையே கண்டாள்.



தாம்பத்தியத்துக்கு அத்தியாவசியமான ஏதோ ஒரு பொருள், அவர்களிடையே இல்லை. கமலத்தின் நெஞ்சம் பொங்கியது. அது என்ன ! என்ன !......

* * *

ரங்காதனுக்கு மிகுந்த ஆச்சரியமாகப் போய் விட்டது. சிறிது காலமாகவே கமலத்திடம் அவன் ஒரு மாறுதலைக் கவனித்து வருகிறான். ஆனால் அன்றைய தினம் அவள் கூறியதைக் கேட்ட போது அவன் ஆச்சரியத்தின் எல்லைக்கே போய் விட்டான் !

ஆறு மணிக்குக் காரியாலயத்திலிருந்து வந்தான் அவன். அறைக்குச் சென்று உடை மாற்றிக் கொண்டு வருமுன்பாகக் காப்பி அவனை எதிர் கொண்டழைத்தது.

"என்ன அவசரம், கமலி ! கை கால்களைக் கழுவிக் கொண்டு வருகிறேனே " என்றான்.

" அவசரம்தான் ! பிடியுங்கள், கையில் !" என்று பொய்ச் சிரிப்புச் சிரித்துக் கொண்டே அவள் கூறினாள். "என்ன விழிக்கிறீர்கள் ! சரியாக ஆறரை மணிக்கு மாதர் சங்கத்தில் கூட்டம் இருக்கிறது."

"சபாஷ் ! கூட்டங்களுக்கெல்லாம் போகத் தொடங்கி விட்டாயா நீ ! கமலம், இன்று எனக்கு எவ்வளவு சந்தோஷமாக இருக்கிறது, தெரியுமா ! ஆமாம் ; யார் பேசுகிறார்கள் !"

" பிரபல எழுத்தாளரும் பேச்சாளரும் சமூக நலவாதியுமான திருவாளர் உங்களின் தர்ம பத்தினியான திருமதி நான் !"

" நிஜமாகவா !"

"நிஜம்தான் ! ஆயிரம் முறை சொல்கிறேன். நிஜமேதான் !"

" கமலி! அப்போ சற்றுப் பொறு. நானும் வருகிறேன்."

" எங்கே !"–கமலம் திடுக்கிட்டாள்.

" தெருக் கோடி வரையில் ! நானும் வெளியே போக வேண்டும். சைதாப் பேட்டையில் ஒரு இலக்கியக் கூட்டம் இருக்கிறது."

" சரிதான், போங்கள் ! வீட்டை யார் பார்த்துக் கொள்வது !"

" பூட்டிக் கொண்டு போய் விடுவோம் !"

" சாவியை யார் வைத்துக் கொள்வது !"

" நீதான் வைத்துக் கொள்ளேன் !"

"நீங்கள் எனக்கு முன்னால் திரும்பி வந்து விட்டால் !"

" திரும்பி விட்டால் !...என்ன செய்யலாம்!"

" நீங்கள்தான் சொல்ல வேண்டும்... "

" ... ஒரு யோசனை. இப்படிச் செய்தால் என்ன !"

" எப்படி !"

" இரண்டு சாவியுள்ள பூட்டை வாசற் கதவில் பூட்டிக் கொண்டு போனால் !......"

" பிரமாதம் !" என்றான், கமலம்.

அரை மணி கழித்து, கதவைத் திறந்து கொண்டு நுழைந்தாள், கமலம். அவள் மாதர் சங்கத்துக்கும் போகவில்லை, வேறு எந்த சங்கத்துக்கும் போகவில்லை ! ரங்காதனைச் சும்மா மிரட்டிப் பார்த்தாள். ஆனால், பலன் பூஜ்யமாகி விட்டதே !

கமலம் மனம் தளரவில்லை. 'எடுத்த எடுப்பிலேயே வெற்றி கிடைத்து விடுமா !' என்று கூறி மனத்தைத் தேற்றிக் கொண்டாள். வெற்றி கிடைக்கும் வரையில் முயற்சியைக் கைவிடுவதில்லை என்று உறுதி பூண்டாள்.

இன்னொரு நாள்.

" கமலம், பேராசிரியர் வெராமனை நம் வீட்டுக்கு அழைத்திருக்கிறேன். இரண்டு இலக்கிய நண்பர்களோடு இன்று வருவார். எல்லோருக்கும் இங்கேதான் விருந்து !" என்று ஆரம்பித்தான், ரங்காதன்.

" அட ராமா !" என்று அங்கலாய்த்தாள், கமலம்.

" என்ன கமலி !"

" இன்று ஞாயிற்றுக் கிழமை யல்லவா ! புயல் நிவாரணத்துக்கு நன்கொடை வசூலிக்க, மாதர் சங்க அங்கத்தினர்கள் எல்லோரும் கூட்டமாகப் போகப் போகிறோம். நான் இப்போதே கிளம்பியாக வேண்டும். மத்தியானம் மட்டும் ஹோட்டலில் சாப்பிட்டுக் கொள்ளுங்கள் என்று சொல்ல நான் எண்ணிக் கொண்டிருக்கிறேன். நீங்களானால் 'விருந்து வருகிறது' என்கிறீர்கள்...... !"

" நீ போகா விட்டால் என்ன, கமலம் ! மற்றவர்கள் போய்க் கொள்ளட்டுமே !"

"ரொம்ப நன்றாக இருக்கிறது ! இப்படியே எல்லோரும் நினைத்தால் புயல் நிவாரணம் என்னவாகிறது !"

" நானேக்குப் பார்த்துக் கொண்டால்... "

“நீங்களா இப்படிப் பேசுகிறீர்கள்! ஆயிரக் கணக்கான ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் வீடிழந்து, வாசலிழந்து, உடைமைகள் எல்லாம் இழந்து தவித்துக் கொண்டிருப்பதை மறந்து விட்டீர்களா! ஒரு நாள் என்பது ஒரு யுகம் மாதிரி அல்லவா! உதவி செய்வதில் சிறிது தாமதித்தாலும் அவர்களில் பலர் மடியக்கூடும். மூன்று நாட்களுக்கு முன்பு ஏதோ ஒரு சமூக சேவகர்கள் கூட்டத்தில் முழங்கினீர்களே—உதவி, நிதி, கஷ்ட நிவாரணம் என்று!......”

ரங்கநாதன் வாயடைத்துப் போய் விட்டான். கமலமா இப்படிப் பேசுகிறாள்! அவள் எப்போது பேசக் கற்றுக் கொண்டாள்!...

முடிவாக, அன்றைய விருந்தாளிகளுக்கு ஹோட்டலிலிருந்து சாப்பாடு வரவழைத்து விடுவது என்று தீர்மானித்தார்கள்!

எட்டு மணிக்கு வீட்டை விட்டுப் புறப்பட்ட கமலம் சரியாக மாலை மூன்று மணிக்குத்தான் திரும்பி வந்தாள். மாம்பலத்தில் இருந்த ஒரு சிநேகிதியின் வீடு அவ்வளவு நேரம் அவளுக்கு அடைக்கலம் அளித்திருந்தது!

“கமலம், கமலம்......”

பதில் வராததைக் கண்டு, கதவைத் தட்டினான், ரங்கநாதன். கதவில், பூட்டு ‘லொட், லொட்’ என்று தட்டியது!

திக்கென்றது, அவனுக்கு. எவ்வளவு அவசரமாக வந்தான்! அவன் உடனே தஞ்சாவூருக்குப் புறப்பட்டாக வேண்டுமே! அருமை நண்பர் வேணுநாதன் தந்தி அடித்திருக்கிறார், தஞ்சையிலுள்ள ஏதோ ஒரு பள்ளியின் ஆண்டு விழாவில் ரங்கநாதன் சொற்பொழிவாற்ற வேண்டுமென்று. மணி ஆறரை ஆகிறது. எட்டு மணிக்கு எழும்பூரில் வண்டி புறப்படுகிறது. நாளைக் காலையிலும் மாலையிலும் விழா. கமலத்திடம் சொல்லிக் கொண்டு, பெட்டி படுக்கையையும் எடுத்துக் கொண்டு புறப்படலாம் என்று எண்ணி வந்தால் கமலம் எங்கே போய்த் தொலைந்தாள்!...

பத்து நிமிஷம் வாசற் கதவுக்கும் வீட்டின் சுற்றுச் சுவருக்குமாக அலைந்தான். தெருக் கோடிவரை கண்களை நீட்டிப் பார்த்தான். அவள் வரும் சுவட்டையே காணோம்!

“ஏ, கமலம்! ஏ, பிசாசே! உன்னை யார் கூட்டத்துக்கும் சமூகப் பணிக்கும் போகச் சொன்னார்கள்! கணவனுக்குப் பணிவிடை செய்வதை விட என்ன சேவை வேண்டிக் கிடக்கிறது!......கஷ்டம், கஷ்டம்!......”

ரங்கநாதன் மனத்தை அலட்டிக் கொண்டிருந்தான். அரை மணி சென்றதும் அடுத்த வீட்டுப் பெண், முதல் வகுப்புப் படிக்கும் விஜயா மெல்ல எட்டிப் பார்த்தாள்.

“அடே, மாமா! வந்துட்டேளா!...உங்க வீட்டுச் சாவி இங்கே இருக்கு!......”

அடுத்தவீட்டுக்குப் பாய்ந்தான், ரங்கநாதன்.

“விஜயா, சாவியைக் கொண்டு வா......”

“கொண்டுவரேன். நீங்க எப்போ வந்தேள்!”

“அரை மணிக்கு முன்னே!”

“அத்தனை நேரமும் வாசல்லேயே காத்திண்டிருந்தேளா!...என்னைக் கூப்பிட்டுக் கேட்கக் கூடாதா!” என்று கேட்டாள் விஜயா.



தஞ்சை மக்கள் ஜனவரிமாதம் கடைசி வாரத்தில் சங்கீத வித்வான்கள் இருவருக்குப் பாராட்டு விழா நடத்தினார்கள். நாகஸ்வரச் சக்கரவர்த்தி திரு டி. என். ராஜரத்தினம் பிள்ளை அவர்களையும், சங்கீத கலாநிதி திரு மகாராஜபுரம் விஸ்வநாத ஐயர் அவர்களையும் தஞ்சைக்கு வரவழைத்துத் தங்கப் பதக்கம் சூட்டிப் பாராட்டினார்கள். இந்த விழாவுக்குத் தஞ்சை நகரசபைத் தலைவர் திரு பரிசுத்த நாடார் தலைமை வகித்தார். மதுரை மணி ஐயர் அவர்கள் பிரார்த்தனை கீதம் பாடினார். திரு பூவராகன் சங்கீதக் கலைஞர்களைப் பாராட்டிப் பேசினார்.

◇◇

ரங்கநாதனுக்கு எரிச்சல் பற்றிக் கொண்டு வந்தது! 'குழந்தையின் கேள்விகளைப் பார். பேசாமல் சாவியைக் கொண்டு வந்து கொடுக்காமல்...' என்று மனத்துள் கருவினான்.

நல்ல வேளையாக விஜயாவின் தாய், ரங்கநாதன் நிற்பதைப் பார்த்து விட்டுச் சாவியைக் கொண்டு வந்து கொடுத்தாள். அரைக் கணத்தில் வீட்டுக் கதவைத் திறந்து 'ஸ்விச்'சைப் போட்டான். சுவர்க் கடிகாரம் மணி ஏழாகிப் பதினைந்து நிமிஷம் ஆகி விட்டதாக அறிவித்தது. 'ரயிலுக்கு முக்கால் மணி நேரம் தானே இருக்கிறது!' என்று எண்ணியவாறே தோல் பெட்டியை எடுக்கப் போனான். வழக்கமாக இருக்க வேண்டிய இடத்தில் அதைக் காணவில்லை.

"ஐயோ கமலம்! நீ எங்கேயாவது போய்த் தொலை. என் பெட்டியை வேறு தூக்கிக் கொண்டு போய் விட்டாயே!"

ரங்கநாதனின் மனம் புலம்பியது. சுவர்க் கடிகாரம் 'டிங்' என்று அடித்து மணியைத் தெரிவித்தது!

வாசலில், சரசர வென்று செருப்பின் சப்தம். தொடர்ந்து அழகுப் பையும் கையுமாகக் கமலம் உள்ளே வந்தாள்.

கட்டெரித்து விடுவதைப் போல ரங்கநாதன் அவளைப் பார்த்து, "கமலா, என் தோல் பெட்டி எங்கே!" என்று கேட்டான்.

"பயந்து விட்டேன்! ஏன் இப்படிக் கூச்சல் போடுகிறீர்கள்!" என்றாள் கமலா.

"கமலா, உன்னோடு பேசிக் கொண்டிருக்க எனக்கு நேரமில்லை. என் தோல் பெட்டி எங்கே, சொல்லு!"

"எங்கும் கெட்டுப் போய் விடவில்லை. மாதர் சங்கத்தின் உதவித் தலைவி இருக்கிறாளே, டாக்டர் குருமாரனின் மனைவி. அவள் நாளைக் காலை விமானத்தில் டில்லிக்குப் போகிறாள்."

"...சாமான்கள் அதிகமாக இருக்கிறது என்று உன்னிடம் சொன்னாள். உடனே பெட்டியைக் கொடுத்து விட்டாய், தாராளமாய்! இல்லையா!"

"ஆமாம். அதற்கு ஏன் இப்படிக் கோபித்துக் கொள்கிறீர்கள்!"

"உன் கேள்விக்குப் பதில் சொல்ல நான் தயாராக இல்லை. கமலா, வர வர உன் நடத்தை எனக்குத் துளிக்கூடப் பிடிக்கவில்லை. இஷ்டப்பட்ட போது வெளியே போவதும் வருவதும் கொஞ்சம் கூட நன்றாக இல்லை......"

"ஆமாம், நானும் இதைத் தான் சொல்ல வேண்டுமென்று காத்துக் கொண்டிருந்தேன். காரியாலயத்திலிருந்து வந்ததும் அரை நிமிஷம் கூடத் தங்காமல் நீங்கள் வெளியே செல்வது கட்டோடு பிடிக்கவில்லை!"

"கமலா......!"

"கமலம்தான் பேசுகிறேன். வாழ்க்கையைப் பற்றி ஆயிரம் பேர்களுக்கு உபதேசிக்கிறீர்கள். ஆனால் உங்கள் வாழ்க்கையைச் சிந்தித்துப் பார்த்ததுண்டா! எப்போது பார்த்தாலும் பேச்சு, இலக்கியம், சமூக நலம்! வீட்டு நலத்தை என்று கவனிக்கப் போகிறீர்கள்! உங்களுக்குப் பெயரும் புகழும் ஏற்பட்டால் போதும். நான் பெண். எனக்குக் கணவனும் வேண்டும்."

பெண் புலியைப் போலச் சீற்றத்துடன் ஆரம்பித்த கமலம், கடைசி வாக்கியங்களைக் கூறும் போது கண்ணீர் சிந்தி விட்டாள். அவன் அலமாந்து நின்றான். அவன் நெஞ்சில் ஏதோ ரஸவாதம் நிகழ்ந்து கொண்டிருந்தது.


"இதோ பார், கமலம். நான் இனிமேல்...." வார்த்தைகள் பலமிழந்து தொண்டையில் தங்கி விட்டன.

அன்புடன் அவள் முகத்தைத் திருப்பினான் அவன். மின் விளக்கின் ஒளியால் அவளது நீர் நிறைந்த கண்கள் பளபளத்தன.

"என்னை மன்னித்து விடு கமலி."

"அப்படிச் சொல்லாதீர்கள். நீங்கள்தான் என்னை மன்னிக்க வேண்டும்."

அவள் கண்களைத் துடைத்து விட்டான் அவன். அவளுடைய கண்களில் ஒரு புதிய ஒளி தென்பட்டது அவனுக்கு. அவனோடு சம்பாஷிப்பது போலிருந்தது. ஆம்! இதுவரை அவன் சிருஷ்டிக்காத மகா இலக்கியங்களை யெல்லாம் அந்தக் கண்கள் அவனுக்குப் புரிய வைத்துக் கொண்டிருந்தன! தஞ்சாவூர்ப் பிரயாணத்தை அவன் மறந்தே போய் விட்டான்!


உலகமெல்லாம்.....
மேன்மையான வாழ்வின் சின்னமாக மர்பி ரேடியோ கருதப்படுகிறது. இதன் தெளிவு குரல், அபார வரவேற்பு, கம்பீரமான சாதனை பெருமையுடன் போற்றி வைத்திருக்க இதுவே காரணம்.
மாடல் டிஏ 224 ஏஸியில், டியு 224 ஏஸி / டிஸியில், எல்லா வேவ் 8-பாண்டு, 5-வால்வுகள். ரூ. 425.
மர்பி ரேடியோ


நாள் முழுவதும்
நேர்த்தியாக இருக்க
பெர்லீன்
ப்ரென்ச்
லாவண்டர்
ப்ரிலியண்டைன்
உபயோகியுங்கள்
PEARLINE PARIS, LTD.
P.O. Box 493 BOMBAY 1.
"பிரதி செவ்வாய் இரவு 8-30 மணிக்கு, ரேடியோ சிலோனில் 41 மீட்டரில் 'ஷாமே மௌனிங்' என்ற பியர்லீன் நிகழ்ச்சியைக் கேளுங்கள்."

ரகுபதி ராகவ

[அகமதாபாத் நவஜீவன் காரியாலயத்தினர் பிரசுரம் செய்திருக்கும் 'சத்தியமே தெய்வம்' என்னும் காந்தி வசன மஞ்சரியிலிருந்து ராஜாஜி எடுத்து எழுதியது]

13

சச்சிதானந்தம் என்று கடவுளைச் சொல்லுகிறோம். சத்தியம் என்கிற சொல், 'சத்' என்கிற பகுதியிலிருந்து பிறந்தது. 'சத்' என்றால் 'இருப்பது', 'உளது' என்பது பொருள். உண்மை ஒன்றே உளது. சத்தியம் ஒன்றே சத் ஆகும். சத்தியம் அல்லாதது சத் அல்ல. இதனாலேதான் சத் என்பது ஆண்டவனுடைய பல பெயர்களில் முக்கியமான ஒரு பெயர். என்னுடைய கருத்தில் உண்மையே கடவுள். சத்தியமே பரம்பொருள்.

அரசனின்றி மக்கள் வாழ முடியாது. தளபதி இன்றி சேனை இருக்க முடியாது. அதுபோலவே பிரபஞ்சத்துக்கு ஆட்சி செய்யும் ஒரு அரசன் வேண்டும். ஆதலால் கடவுளுக்கு ஈச்வரன், ஆண்டவன், புருஷோத்தமன், முதலிய பெயர்கள் வழங்கி வருகின்றன. ஆயினும் சத்தியம் என்பதே கடவுளுடைய முழுத் தத்துவத்தைச் சரியாகக் குறிக்கும் நாமமாகும்.

உண்மையைக் காண்பதே அறிவு. உண்மையறிவைக் குறிக்கும் சொல் "சித்". அதுவும் ஆண்டவனுடைய பெயர்களில் ஒன்று. உண்மையறிவுடன் ஆனந்தம் எப்போதும் கூடும். உண்மை அறிவே ஆனந்தம். ஆனபடியால் கடவுளை சச்சிதானந்தம் என்று தியானிக்கிறோம். பூரண மெய்ம்மையும் ஞானமும் ஆனந்தமும் கலந்து நிற்கும் பொருள் கடவுள்.

ராஜாஜி

நாம் வாழ்வதன் இலட்சியப் பயனானது உண்மைக்குக் கட்டுப்பட்டு இருக்க வேண்டும். நாம் செய்யும் செயல்கள் அனைத்தும் சத்தியத்தில் காலூன்றி இருக்க வேண்டும். உண்மைக்கு மாறான செயல்கள் பாவமாகும். உடலுக்கு ஸ்வாசம் உயிர் தருவது போல் வாழ்க்கைக்கு உண்மை அமைந்து உயிர் தர வேண்டும். ஜீவயாத்திரையில் உண்மையைத் தவறாது பற்றுவது என்று ஏற்பட்டு விட்டால் பிறகு எல்லா தர்மங்களும், நியதிகளும், ஒரு சிரமமுமில்லாமல் அமைந்து விடும். ஆசாரமும் சீலமும் தாமாகத் தோன்றிக் காக்கப்படும். ஒரு பிரயத்தனமுமின்றி எல்லாம் நடைபெறும். வாய்மையைக் காக்காவிடில் வேறு எந்த அறமும் காக்கப்படாது தவறிப் போகும்.

உண்மை யென்றால் பொய் பேசலாகாது என்பது ஒன்று மட்டும் அல்ல. சத்தியம், மெய்ம்மை, உண்மை என்பதை நாம் விஸ்தரித்து முழுப் பொருளை உணர வேண்டும். மனம் வாக்கு செயல் மூன்றிலும் உண்மை காக்கப்பட வேண்டும். இப்படி உண்மையைப் பூரணமாக உணர்ந்தவனுக்கு வேறு ஒரு அறிவும் வேண்டியது இல்லை. எல்லா ஞானமும் அதில் அடங்கிப் போகும். உண்மைக்குள் அடங்காதது அறிவு ஆகாது, ஞானமும் ஆகாது. அறிவு இன்றி உள்ளத்தில் சாந்தி இல்லை. உண்மை என்கிற உரை கல்லில் எதையும் தேய்த்து உரைத்துப் பார்க்கத் தெரிய வேண்டும். இதைத் தெரிந்து விட்டோமானால் பிறகு ஒரு குறையும் இல்லை. எதைச் செய்யலாம் எதைச் செய்யக் கூடாது, எதைப் பார்க்கலாம் எதைப் பார்க்கலாகாது, எது படிக்கத்தக்கது எது படிக்கலாகாது. என்பதெல்லாம் மிக எளிதாகக் கண்டு கொள்ளலாம்.

இவ்வாறு எல்லாவற்றையும் கொடுக்கும் காமதேனுவைப் போன்ற உண்மையை, நாம் எப்படி அடைவது? 'மனம் முழுதும் செலுத்திய அப்யாஸத்தாலும், வேறு பொருள்கள் மேல் ஆசை வைக்காமல் இருக்கும் வைராக்கிய நிலையாலும்' என்கிறது சாஸ்திரம். பக்தியோடு நாடினாலும், ஒருவனுக்கு உண்மையாகத் தோன்று

வது மற்றொருவனுக்கு உண்மையாகத் தோன்றாது. இதனால் குற்றமில்லை. தூய உள்ளத்தோடு செய்யப்பட்ட முயற்சியினால் காணப்படும் உண்மை, ஒருவனுக்கு ஒரு விதமாகவும் இன்னொருவனுக்கு மற்றொரு விதமாகவும் வேறுபட்டுத் தோன்றுவது ஒரு மரத்திலுள்ள பல இலைகள் மாதிரி. ஆண்டவன் பல்வேறு வடிவங்களில் காணப்படுகிறான். ஆயினும் அவன் ஒருவனே என்று அறிவோம். சத்தியமே அவன் வடிவமும் பெயரும். பலவிதமாக நாம் உண்மையைக் கண்டு பக்தி செலுத்துவதில் குற்றமில்லை. அவனவனுக்கு அது சத்தியமே யாகும். அவனவன் கண்ட உண்மையைத்தான் அவனவன் பக்தி செலுத்த வேண்டும். அவ்வாறு செய்தால், குற்றம் இருப்பினும் நீங்கிப் போகும்.

உண்மையை நாடுவது ஒரு தவமாகும். உண்மைக்காகச் செய்யும் தவத்தில் உற்ற நோய்களைப் பொறுத்துக் கொள்ள வேண்டும். உயிரையும் இழக்க வேண்டியதாகும். சுயநலத்தை முற்றிலும் விலக்கி உண்மையை நாட வேண்டும். அப்படிச் செய்வதால் வழி தப்பிப் போகாது. தப்பினாலும் அது நெடுங்காலம் பிறழாது. தவறான வழியில் சென்றால் கட்டாயம் இடறி விழ வேண்டியதாகும், பின்பு நேர்வழிக்கு வந்து விடுவோம்.

சத்தியமே பக்தியுமாகும். அதுவே தெய்வத்தை யடையும் மார்க்கம். இதில் பயப்படுவதற்கு இடமில்லை. தோல்வியும் இல்லை. உயிர் நீத்தாலும் அதுவே அமிருத நிலைக்குக் கோபுர வாயில். ஹரிச்சந்திரன், பிரகலாதன், ராமசந்திரன், இமாம் ஹஸன், இமாம் ஹுஸேன், மற்றும் கிறிஸ்துவ முனிவர்கள் இவர்களுடைய சரித்திரங்களைக் கற்றுத் தியானிக்க வேண்டும்.

ஆகா! உலகத்தில் அனைவரும் சத்தியத்தையே கடைப்பிடித்து எல்லாக் காரியங்களிலும் உண்மையே வழி என்று நடந்து கொள்வார்களாகில் இந்த உலகம் எவ்வளவு சுந்தரமாக இருக்கும்! எல்லாவற்றிலும் சத்தியமே நம்முடைய வழி என்று நடந்து கொண்டு முடிவில் உடலை விட்டு உயிர் பிரியும் தருணம், அந்த சத்தியப் பொருளிலேயே ஒன்றுபட்டுப் போவோமானால் உலகம் எவ்வளவு ஆனந்தமாக இருக்கும்! சத்தியமே ஆண்டவனுடைய வடிவமாகவும் என்னுடைய செல்வமாகவும் இருந்து வந்திருக்கிறது. அனைவருக்கும் அவன் அருளால் அவன் சத்திய ரூபமே செல்வமாகுக!

[யரோதா சிறையில் எழுதியது]

வட்ட மேஜை

பிரயாணக் கட்டுரை

பிரயாணக் கட்டுரைகள் எழுதுவது என்பது எளிதான காரியமே அல்ல என்று சொல்லலாம். எதுகை மோனைகளுக்குப் பிரதானம் அளித்துக் கட்டுரை வெறும் எழுத்துக் குவியலாகப் போய் விடாமல் பார்த்துக் கொண்டு — வாசகர்களைத் தான் பிரயாணம் செய்த இடங்களுக்கெல்லாம் மானஸீக யாத்திரை செய்விப்பது ஒரு அபாரமான கலை. திறமைசாலியான எழுத்தாளர் இத்தகைய கட்டுரைத் தொடரில் எத்தகைய வெற்றி காணலாம் என்பதற்கு அமரர் ரா. கி. யின் இலங்கைப் பயணக் கட்டுரைகளைக் குறிப்பிடலாம். படித்து முடித்ததும் அந்தந்த இடங்களுக்கு விஜயம் செய்து விட்ட எண்ணமே மேலோங்கியது.

இதே அற்புதத்தை மிகச் சிறந்த முறையில் சாதித்து வருகிறார் ஸ்ரீ பரதன் 'வட இந்திய யாத்திரை' மூலம். சுகமான வர்ணனைகள் மூலம் ஒவ்வொரு காட்சியையும் கண் முன்னே கொண்டு வந்து நிறுத்துகிறார் அவர்.

செங்கல்பட்டு
21—1—56

ர. கிருஷ்ணன்

ராஜாஜியின் சிறுகதைகள்

வாரந்தோறும் ராஜாஜி தாத்தா அவர்கள் 'கல்கி'யில் எழுதிவரும் சிறு கதைகளைப் படிப்பதற்கு எங்கள் பள்ளி (தியாகராயசெட்டி எலிமெண்டரி பாடசாலை) மாணவர்கள் ஆவலாக இருக்கிறோம். அவர் எழுதி வரும் சிறுகதைகள் சிறியோர்களுக்கும், நடுநிலைமை வாய்ந்தவர்களுக்கும், எல்லா மதத்தினர்களுக்கும், பணக்காரர்களுக்கும், ஏழைகளாய்க் குடிசையில் வாழ்பவர்களுக்கும், மகிழ்ச்சியளிப்பதாய் இருக்கின்றன. சில ஆண்டுகளுக்கு முன் ஔவைப் பாட்டி குழந்தைகளுக்கு நற்புத்தி புகட்டப் பாட்டாகப் பாடினார். இப்பொழுது நமக்கு ராஜாஜி தாத்தா அவர்கள் நற்புத்தி வருவதற்கு 'கல்கி'யில் சிறுகதை எழுதி வருகிறார். அவர்கள் நீடூழி வாழ வேண்டும் என்றும், என்றும் சிரஞ்சீவியாக மார்க்கண்டேயரைப் போல் இருக்க வேண்டுமென்றும் முருகப் பெருமானைப் பிரார்த்திக்கிறோம்.

மதராஸ்-21
1-2-56

டி. சித்திரலேகா
(5ம் வகுப்பு மாணவி.)

நான்தான் டீ

சுறுசுறுப்பு மிக்க நேரத்திலும்
கவலை மிகுந்த நேரத்திலும்
நானே உங்கள் நண்பன்.



நான் உமது நண்பன். லட்சக்கணக்கான மக்களுக்கு நண்பன்—ஏழைக்கும் பணம் படைத்தவருக்கும் சமமாக நண்பன். சிறுவரும் பெரியோரும் என்னை விரும்புகின்றனர் எல்லிடத்திலும் எனக்குத் தனிச் சிறப்பும் வரவேற்பும் உண்டு.

ஓய்ச்சலை நொடியில் விலக்கி, வியர்த்து விறுவிறுத்திருக்கையில் உமக்கு அமைதி அளிக்கிறேன். மனோவியாகுலம் அடைந்துள்ள சமயத்தில் சந்தோஷமளித்து மனக் கொந்தளிப்பின்போது சாந்தி தருகிறேன். என்னால் என்றும் கெடுதலில்லை (ஒரு டம்ளர் கூடவே சாப்பிடலாம்); எப்போதும் இன்பத் துணையே.

ஓய்வுக்காக ஏங்கும்போதும், நிமிஷம் செல்வது யுகமாகத் தோன்றும்போதும், கண்ணைத் திறக்கமுடியாமல் களைப்பு மேலிடும்போதும், நான் உமக்குப் புத்துயிர் அளிக்கிறேன். வேலைநேரம் முடிந்து வீடு திரும்பும்போது அங்கும் உமக்குத் தெம்பு கொடுக்கக் காத்திருக்கிறேன்.


உண்மையில், எங்கிருந்தபோதிலும், என்ன செய்தபோதிலும், உடல் நிலை எப்படி இருந்தபோதிலும், என்னை உயிரளிக்கும் பானமென்று காண்பீர்கள். மேலும் இவ்வளவு உயரிய குணங்கள் பெற்ற நான்தான் மிக்க மலிவான பானமுங்கூட; தேநீருக்கு "பதிலாக" என்று ஒன்றில்லை.

நான்தான் டீ — இன்பத்தின் சின்னம்

TEA BOARD INDIA

நறுமணம் விரும்புகிறவர்களுக்கு...

மைசூர் சந்தன சோப்பினால் ஸ்னானம் செய்வதே ஓர் கலாசியான இன்ப அனுபவம். அதன் மிருதுவான நுரை சருமத் துவாரங்களிலும் ஊடேறி சுத்தம் செய்து, சருமத்தை மழமழப்பாகவும் பளபளப்பாக வும் பட்டுப்போல் செய்கிறது. அதன் இன்பமூட்டும் ரம்மியமான மணம் உங்கள் தேகமுழுவதும் பல மணி நேரம் நீடித்துப் பரிமளிக்கும்.



மைசூர் சந்தன சோப்

கவர்ன்மெண்ட் சோப் பேக்டரி, பெங்களூர்

இந்திய சோப், வாசனைப் பொருள்கள் உற்பத்தியாளர் சங்கத்தின் அங்கத்தினர்

PPV 26 TAM.

"என் தொண்டை ரணத்தினால் என்னால் விழுங்கவே முடியவில்லை"

ஆனால்

பெப்ஸ்

அதை சமனமாக்கி குணப்படுத்தியது.



பெப்ஸ் தொண்டை மற்றும் மார்பு வலி நிவாரண மாத்திரைகளில் சமனமூட்டி குணப்படுத்தும் ரசங்கள் அடங்கியுள்ளன. பெப்ஸை கரையவிடும் போதே இந்த ரசங்கள் ஆவியாக மாறி உங்கள் ஸ்வாஸத்துடன் தொண்டை, ஸ்வாசக் குழாய் மூலமாக ஸ்வாசப் பைக்குச் செல்லும். ஆகவே கோளாறின் ஆரம்பஸ்தானத் திற்கே நேராகச் சென்று வேலை செய்கின்றன. இதனால் தான் பெப்ஸை கண்ட ஜனங்களுமாயும், உலக பிரசித்திப் பெற்றும் விளங்குகிறது. பெப்ஸ் இருமலை நிறுத்தி, தொண்டை ரணத்தை சமனமாக்கி, கபத்தை உடைத்து அடைப்பை நீக்குவதுடன், இன்ப்ளுயன்ஸா மற்றும் பிராங்கைடிஸ் சிகிச்சையில் இன்றியமையாததாயுமுள்ளது.



PEPS

பெப்ஸ் தொண்டை, மார்பு வலி நிவாரண மாத்திரைகள் எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்

மதராஸுக்கு ஸோல் ஏஜண்டுகள்: தாதா & கம்பெனி பார்க் டவுன்



அத்தியாயம் 30

லண்டன் மாநகர்

நான் இங்கிலாந்தை அடைந்த போது டிஸம்பர் மாதம். ஆகவே குளிர் தாங்க முடியாமல் இருந்தது. அந்தக் குளிரை விவரிக்கவே முடியாது. எலும்புக்குள்ளே யெல்லாம் உறைந்து விட்டது போலிருந்தது. 'டோவரி'லிருந்து லண்டனுக்குப் போகும் வழியில் ஒரு அற்புதமான காட்சியைக் கண்டேன். அந்தப் பிரதேசம் பூராவும் ஒரே தூய்மையான வெள்ளைப் பரப்பாக இருந்தது. மரங்கள், செடி கொடிகள், வீடுகள் எங்கு பார்த்தாலும் ஒரே வெண்மை நிறம். அதைக் கண்டு நான் வியந்து கொண்டிருக்கும் போதே பனி மழை பொழிய ஆரம்பித்தது. ஆகாயத்திலிருந்து தேவதைகள் எல்லாருமாகச் சேர்ந்து கோடிக்கணக்கான வெண்ணிற மலர்களைப் பொழிகிறார்களோ எனத் தோன்றியது அக்காட்சி.

இல்லை! இல்லை! தெய்வலோகத்துப் பறவைகளான ராஜ ஹம்ஸங்கள் தங்களது தூய வெண்ணிற இறகுகளை உதிர்க்கின்றன. அவைதான் இப்படி வந்து பூமியில் உதிர்கின்றன என்று தோன்றியது. அடுத்த நிமிஷம் இரவு வந்து கவிந்து கொள்ளும் வேளையில் கருநீல நிற ஆகாயத்திலிருந்து பஞ்சு




உதிர்வது போல உறைந்த பனி உதிர்வது பார்ப்பதற்குக் கண் கொள்ளாக் காட்சியாக இருந்தது. இதை இந்துமதி பார்த்தால் எப்படி ரஸிப்பாள்? இதைப் பற்றி அவளுக்கு எழுத வேண்டும். 'இந்தத் தூய வெண்மை நிறத்தைப் பார்த்ததும் உன் வெண்மையான பரிசுத்த இதயம் எனக்கு ஞாபகம் வந்தது' என்று எழுத வேண்டும்.

இப்படித் தோன்றியதும் பெட்டியைத் திறந்து காகிதத்தையும் பேனாவையும் எடுத்தேன். ரகு எதிர்ப் பக்கத்திலிருந்து புன்னகையுடன் என்னைப் பார்த்தான். பிறகு அவனும் பேனாவையும், காகிதத்தையும் எடுத்துக் கொண்டான்.

பம்பாயிலிருந்து புறப்பட்டது முதல் எனக்கு ஏற்பட்ட உணர்ச்சிகளை யெல்லாம் கடிதத்தில் விவரித்தேன். புயலில் சிக்கிக் கொண்டு தெய்வாதீனமாகத் தப்பியதைப் பற்றி எழுதினேன். பிரான்ஸ் தேசத்தில் ஆங்கிலபாஷை யாருக்கும் புரியாமல் நாங்கள் திண்டாடியதைப் பற்றி எழுதினேன். பாஷை தெரியாதபடியால் சாப்பிடுவதற்கு ஏதாவது வேண்டுமென்று கூடக் கேட்க முடியாமல் தவித்ததைப் பற்றி வரைந்தேன். இன்னும் எத்தனையோ விவரங்கள் இந்துவுக்குப் பிடிக்குமென்று எழுதினேன். பாரிஸ் நகரத்தைப் பற்றியும், எனக்கு எப்படி அதெல்லாம் கொஞ்சம் விநோதமாகவும், ஏன் அதிர்ச்சியாகவும் கூட இருக்கிற தென்பதையும் எழுதினேன். கடைசியாக உறை பனி கொட்டும் அழகையும் விவரித்து விட்டு அவளைத் தைரியமாக இருக்கும்படி எழுதி முடித்தேன். நான் கடிதத்தைக் கவரில் போட்டு ஒட்டுவதற்கும் ரயில் வண்டி பிரசித்தி பெற்ற லண்டன் மாநகரின் 'விக்டோரியா' ஸ்டேஷனை அடைவதற்கும் சரியாக இருந்தது.

ரகு லண்டனிலேயே தங்கி, லண்டன் யூனிவர்ஸிடியில் படிப்பதாக இருந்தான். நானும் அரவிந்தும்தான் 'கேம்பிரிட்ஜ்'க்குப் போய்க் கொண்டிருந்தோம். என்னுடைய கல்லூரியின் தலைமை யாசிரியர், லண்டனில் படித்துக் கொண்டிருந்த ஒரு மாணவருக்கு நான் வருவதைப் பற்றிக் கடிதம் எழுதியிருந்தார். அனந்தகிருஷ்ணன் என்ற அந்த மாணவருக்கு நான் பாரிஸ் நகரிலிருந்து கடிதம் எழுதி யிருந்தேன். ஆகவே



அவர் ஸ்டேஷனுக்கு வருவாரென்று நாங்கள் எதிர்பார்த்தோம்.

ரயில் நின்றதும் சாமான்களை யெல்லாம் இறக்கிக் கொண்டே யாராவது எங்களைத் தேடி வருகிறார்களா என்று பார்த்தேன். இரண்டு, மூன்று இந்திய முகங்கள் தென்பட்டன. எனக்கு யாரிடம் விசாரிப்பது என்று புரிய வில்லை. கடைசியில் ஒரு உயரமான மனிதர் என்னிடம் வந்து, "நீங்கள் சென்னையி லிருந்து வருகிறீர்களா?" என்று கேட்டார்.

நான் உடனே அவரிடம், "நீங்கள் தான் அனந்த கிருஷ்ணனா?" என்று கேட்டேன்.

"ஆம்! நீங்கள் ரங்கதுரை தானே?" என்று வினவினார்.

"ஆமாம். நான் 'பாரிஸ்' நகரி லிருந்து எழுதிய கடிதம் கிடைத்ததா?"



"கிடைத்தது. உங்களுக்கு வேண்டிய ஏற்பாடுகளெல்லாம் செய்திருக்கிறேன். நீங்கள் இங்கே ஒரு வாரம் இருக்க வசதிகள் செய்திருக்கிறேன்."

"ரொம்ப வந்தனம். மறந்து விட்டேனே. இவர்தான் அரவிந்த். என்னோடு கேம்பிரிட்ஜுக்கு வந்து படிக்கப் போகிறார். இவர் ரகுநாதன். இங்கேயே லண்டன் சர்வகலாசாலையில் சேர்ந்து படிக்கப் போகிறார்" என்று இரண்டு பேரையும் அறிமுகப்படுத்தி வைத்தேன்.

"பிரயாண மெல்லாம் சௌகரியமாக இருந்ததா? இப்போது குளிர் காலம். கொஞ்சம் கஷ்டப் பட்டிருப்பீர்கள்" என்றார் அனந்தகிருஷ்ணன்.

"இல்லை. சுகமாகவே இருந்தது. இந்தக் குளிரில்தான் கம்பளியைப் போர்த்திக் கொண்டு தூங்கும் சுகம் நன்றாகத் தெரிகிறது. கப்பலில் முதலில் வந்தபோது ரொம்ப சுகமாக இருந்தது. ஆனால் 'கலே'யிலிருந்து 'டோவர்' வரும் போது இங்கிலீஷ் கால்வாயில் ரொம்பக் கஷ்டப்பட்டுப் போய் விட்டோம். உடம்பே சரியாக இல்லை. ஒரே தலை சுற்றலாக இருந்தது. கப்பல் ரொம்ப ஆடிற்று. சில சமயம் பயமாகக் கூட இருந்தது" என்றேன்.

"ஆமாம். இங்கிலீஷ் கால்வாய் எப்போதும் கொஞ்சம் கொந்தளிப் பாகவே இருக்கும். இப்போது நாம் டாக்ஸியில் நேரே 'இந்திய மாணவர் சங்கத்'துக்குப் போய் விடுவோம்" என்றார் அனந்தகிருஷ்ணன்.

நாங்கள் எல்லோரும் சாமான்களை ஒரு வண்டியில் ஏற்றிவிட்டு டாக்ஸியில் இந்திய மாணவர் சங்கத்தை அடைந் தோம். டாக்ஸியில் போகும்போதே அனந்த கிருஷ்ணன் லண்டன் நகரத் தின் பல பகுதிகளைப் பற்றி எங்களுக் குச் சொன்னார். அரவிந்த் கூட உற் சாகமாக இருந்தான்.

அனந்த கிருஷ்ணன் எங்களிடம், "உங்களில் யாருக்காவது கல்யாண மாகி யிருக்கிறதா?" என்று கேட்டார்.

நான், "ரகுவுக்குக் கல்யாணமாகி விட்டது" என்றேன்.

"நான் கூட என் மனைவியை இந்தி யாவில் விட்டு விட்டு வந்திருக்கிறேன். நல்ல வேளையாக இன்னும் மூன்று மாதத்தில் நான் போய்விடலாம். என் படிப்பு அதற்குள் முடிந்து விடுகிறது. இந்தியாவுக்குப் போகலாம் என்று நினைத்தாலே குதூகலமாக இருக்கிறது. எவ்வளவுதான் சௌகரியமாக வாழ்ந் தாலும் நம்முடைய தேசத்துக்கு ஈடா குமா?" என்றார் அனந்தகிருஷ்ணன்.

"உங்களுக்கு எந்த ஊர்?" என்று கேட்டான் ரகு.


"ஏன்? அவரிடம் உன் மனைவிக்கு ஏதாவது அனுப்ப இப்போதே திட்டம் போடுகிறாயோ?" என்று கேட்டேன் சிரித்துக் கொண்டே.

"நான் திருவனந்தபுரத்தைச் சேர்ந் தவன். ஆனால் என் தாய் தந்தையர் மதராஸில்தான் இருக்கிறார்கள். ரகு நாதன் அவருடைய மனைவிக்கு ஏதாவது கொடுத்தால் எடுத்துக்கொண்டு போக எனக்கு ஒரு ஆட்சேபணையும் கிடை யாது" என்றார் அனந்தகிருஷ்ணன்.

இதற்குள் வண்டி இந்திய மாணவர் சங்கத்தை அடைந்தது.

வண்டியிலிருந்து இறங்கி உள்ளே பிரவேசித்தோம்.

சாப்பிடும் போது நான் அனந்த கிருஷ்ணனைப் பார்த்து, "இங்கே சாவ



குண்டூர் ஜில்லா—செஷன்ஸ் ஜட்ஜ் ஸ்ரீ எச். அனந்தநாராயணய்யர் ஐ. ஸி. எஸ். அவர்களின் புதல்வி சௌ. சுசீலாவுக்கும், பம்பாய் கமர்ஷியல் பிரிண்டிங் பிரஸின் உற்பத்தி மானேஜர் ஸ்ரீ ஆர். கப்பு அவர்களுக்கும் ஜனவரி 19-ம் சென்னையில் விமரிசையாகத் திருமணம் நடந்தது. வாழ்க மணமக்கள்!

உணவுடன் காலந் தள்ள முடியாது என்று சொல்கிறார்களே உண்மையா? கப்பலில் பலபேர் என்னிடம் எச்சரிக்கை செய்தார்கள். நானும் ரகுவும் கப்பலில் சரியான சைவ உணவு கிடைக்காமல் ரொம்பக் கஷ்டப்பட்டோம். அரவிந்த் பரவாயில்லை. அவனுக்கு எல்லாம் பழக்கம்'' என்று கூறினேன்.

''அப்படி யொன்றும் கஷ்டமில்லை. இங்கே ருசியான இந்திய உணவுகள் கிடைக்கும் இடங்கள் இருக்கின்றன. ஆனால் விலையைக் கேட்டால் பயந்து விடுவீர்கள். நிறையப் பால் சாப்பிட்டுச் சமாளித்துக் கொள்ளலாம்'' என்று அவர் சொல்லிக் கொண்டிருக்கும்போதே நான் கொஞ்சம் காய்கறிக் குழம்பை மேலே கொட்டிக் கொண்டேன்.

அனந்தகிருஷ்ணன் புன்முறுவலுடன் ''மிஸ்டர் துரை! இந்தமாதிரி நீங்கள் மேலே கொட்டிக் கொண்டால் எல்லாரும் பரிகாசம் செய்வார்கள். நீங்கள் ஏன் இந்தத் துணியை மடியில் போட்டுக் கொள்ளவில்லை? இங்கே சாப்பிடும் முறையைப் பார்த்து ஒரு மனிதனை மதிப்பிட்டு விடுவார்கள். நீங்கள் ரொம்ப ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். ஸ்பூனை உபயோகிக்க உங்களுக்குத் தெரியவில்லையே? சரியாகப் பிடித்துக் கொள்ளுங்கள்'' என்றார்.

நான் சங்கோசத்துடன், ''எனக்கு இவைகள் வழக்கமில்லை'' என்றேன்.

''நீங்கள் சங்கோசப்பட வேண்டிய அவசியமில்லை. நானும் உங்களைவிடத் திண்டாடியிருக்கிறேன். உங்களுக்காவது நான் இதைக் கூறினேன். நான் இங்கே வந்தபோது யாரையுமே எனக்குத் தெரியாது. இந்தச் சங்கத்தை நிர்வகிக்கும் மிஸ். ஜேன் எட்மண்ட் என்பவர் எனக்கு இவைகளையெல்லாம் சொல்லிக் கொடுத்தார். வெண்ணெய் தடவும் கத்தியை வைத்துக் கொண்டு நான் ரொட்டியை வெட்ட முடியாமல் ஒரு சமயம் தவித்தேன். பக்கத்தில் யார் என்ன செய்கிறார்கள் என்று அரைக் கண்ணால் சங்கோஜத்துடன் பார்த்து விட்டுத்தான் சாப்பிட ஆரம்பிப்பேன். அதுகூடச் சிலசமயம் ஆபத்தாகப் போய்விடுவதுண்டு. அவர்கள் செய்யும் தவறை நாமும் செய்து நகைப்புக்காளாகி விடுவோம்'' என்றார்.

நாங்கள் எல்லோரும் சிரித்தோம். அந்தச் சமயத்தில் மிஸ். எட்மண்ட் அங்கே வந்தார். எங்களை விசாரித்தார். அவர் பேசிய விதமும், காட்டிய மரியாதையும் எனக்கு ரொம்ப வியப்பாக இருந்தன. அனந்தகிருஷ்ணன், மிஸ். எட்மண்டைப் பார்த்து ''நான் இங்கு வந்த புதிதில் பட்ட கஷ்டங்களையெல்லாம் இவர்களிடம் சொல்லிக் கொண்டிருக்கிறேன். நீங்கள் எனக்குச் சொல்லிக் கொடுத்த விஷயங்களை எல்லாம் அவர்களுக்கும் கூறினேன்'' என்றார்.

மிஸ். எட்மண்ட் எங்களோடு உட்கார்ந்து கொண்டார். ''உங்களைப்போல் எத்தனையோ மாணவர்களுக்கு நான் மேஜையில் எப்படிச் சாப்பிடுவது என்று கற்றுக் கொடுத்திருக்கிறேன். அது ஒன்றும் கஷ்டமே இல்லை. மிஸ்டர் ராங்......உங்கள் பெயரென்ன?''

''ரங்கதுரை.''

''ராங் ஓ ராய். சரிதானே? நீங்கள் புதியவராக இருப்பதால் சொல்கிறேன். மன்னித்துக் கொள்ளுங்கள். சாப்பிட வரும்போது ரொம்பச் சரியாக உடைகளை உடுத்திக் கொண்டு வரவேண்டும். உங்களுடைய 'டை' ரொம்பக் கசங்கியிருக்கிறது. நன்றாக இஸ்திரி பண்ணிய உடைகளைத்தான் அணிந்து கொண்டு வரவேண்டும். உங்கள் 'பூட்ஸ்' நன்றாகப் 'பாலிஷ்' செய்திருக்க வேண்டும். எங்கள் குழந்தைகளுக்கு மேஜையில் உட்கார்ந்து சரியாகச் சாப்பிடத் தெரியும் வரையில் பெரியவர்களோடு சேர்ந்து சாப்பிட அனுமதி கிடைக்காது.''

''கையாலேயே சாப்பிட்டு வழக்கமான எங்களுக்கு இத்தனை ஸ்பூன்களை வைத்துக் கொண்டு எப்படிச் சாப்பிடுவது என்று புரியவே இல்லையே'' என்று பரிதாபகரமாகக் கூறினான் ரகு.

''சீக்கிரத்தில் புரிந்து கொள்வீர்கள். பக்கத்தில் சாப்பிடுகிறவர் என்ன செய்கிறாரென்று கவனித்தால் புரிந்துவிடும். சாப்பிடும்போது உங்களுக்கு ஏதாவது

வேண்டுமென்று எடுத்துக் கொண்டால், முதலில் பக்கத்திலிருப்பவருக்கு வேண்டுமா என்று கேட்டு விட்டுத்தான் எடுத்துக் கொள்ள வேண்டும். தட்டில் கடைசியில் ஒன்றே ஒன்று மீதியிருக்குமானால் அதை யாரும் எடுக்க மாட்டார்கள்" என்றார் மிஸ். எட்மண்ட்.

ஒருவாறு சாப்பிட்டு முடித்தோம். "நீங்கள் எங்களுக்குச் சொன்ன விவரங்களுக்காக ரொம்ப வந்தனம்" என்று சொன்னேன்.

மிஸ். எட்மண்ட் புன்னகையுடன், "எனக்கு உங்களையெல்லாம் ரொம்பப் பிடித்து விட்டது. இங்கே இன்னும் சில நாட்கள் இருப்பீர்கள் அல்லவா?" என்று கேட்டார்.

"நாங்கள் நாளை கேம்பிரிட்ஜ் போகிறோம்" என்றான் அரவிந்த்.

"கூடவே கூடாது. கிறிஸ்துமஸுக்கு இன்னும் நான்கு நாட்கள்தான் இருக்கின்றன. நீங்கள் இங்கே இருந்து லண்டன் நகரில் கிறிஸ்துமஸ் விழா கொண்டாடப்படும் அழகைப் பார்த்து விட்டுத்தான் போகவேண்டும்" என்றார் மிஸ். எட்மண்ட்.

பிறகு, மேஜைமீதிருந்த ஒரு பெரிய பாட்டிலை எடுத்து அதிலிருந்த சிவந்த திரவத்தைக் கோப்பைகளில் ஊற்றிக் கொண்டே, "நீங்கள் பானங்கள் சாப்பிடுவதுண்டா?" என்று கேட்டார்.

நாங்கள் மூன்று பேரும் ஒரே சமயத்தில் "இல்லை" என்றோம்.

"உண்மையாகவே சொல்கிறீர்களா? இங்கே வரும் இந்திய மாணவர்கள் எல்லாரும் முதலில் அப்படித்தான் சொல்கிறார்கள். முட்டையைக் கூடத் தொடமாட்டேன் என்று கூறுகிறார்கள். நாலைந்து மாதங்களுக்குப் பிறகு எல்லாவற்றையும் சகஜமாகச் சாப்பிடுகிறார்கள். நீங்களும் இவற்றையெல்லாம் வழக்கம் செய்து கொள்வது நல்லது. இல்லாவிட்டால் உங்கள் ஆரோக்கியம் ரொம்பக் கெட்டுப் போய்விடும்!"

நான் அனந்தகிருஷ்ணனைப் பார்த்தேன். அவர் இன்னொரு பாட்டிலில் இருப்பதை எடுத்துக் கோப்பைகளில் ஊற்றிக் கொண்டிருந்ததைப் பார்த்தேன். அதில் 'லெமனேட்' என்று எழுதியிருந்ததைப் பார்த்தபிறகுதான் எனக்கு மூச்சு வந்தது. பாட்டிலை வைத்துவிட்டு அவர், "மிஸ். ஜேன்! என்னையும் சேர்த்து விடாதீர்கள்" என்றார்.

"நீங்கள் ஒருவர்தான் எனக்குத் தெரிந்து மூன்று வருஷங்களாகப் பானம் அருந்தவில்லை. மிஸ்டர் ராகு! நீங்கள் இவரைப் பொருட்படுத்த வேண்டாம். கொஞ்சம் சாப்பிடுங்கள். ஒன்றும் செய்து விடாது!" என்றார்.

நாங்கள் மறுபடியும் மறுக்கவே, "வேண்டாமென்றால் நான் வற்புறுத்தவில்லை" என்று கூறிவிட்டு எழுந்து விட்டார் மிஸ். ஜேன் எட்மண்ட்.

அவர் சென்ற பிறகு அனந்தகிருஷ்ணன் எங்களைப் பார்த்துக் கூறினார்: "நான் கூறும் ஐந்து விஷயங்களை ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள். எல்லோரும் நம்மைக் குடிக்கச் சொல்லியும் ஸிகரெட் புகைக்கச் சொல்லியும் வற்புறுத்துவார்கள். நாம் மரியாதையாக மறுத்துவிட வேண்டும். இவைகளை நாம் செய்யாமலிருப்பதில் பெருமை கொள்ள வேண்டும். பிரிட்டிஷ்காரர்கள் அப்போது நம்மை ரொம்ப மதிப்பார்கள். ஆனால் அதற்காக அவர்களுக்குப் புத்தி சொல்ல ஆரம்பித்து விடாதீர்கள்.

"அவர்களுடைய விஷயத்தில் தலையிட்டால் கொஞ்சங்கூடப் பிடிக்காது.

"அவரவர்கள் காரியத்தைக் கவனியுங்கள். மரியாதையாகவும், அடக்கமாகவும் நடந்து கொள்ளுங்கள்.

"நம்மைப் பார்த்து அவர்கள் இந்தியாவை மதிப்பிடுகிறார்கள் என்பதை ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள்.

"பெண்களுடன் பழகுவதில் மிகவும் ஜாக்கிரதையாக இருங்கள்" என்றார்.

அவருடைய குரலிலிருந்து அவர் உண்மையான சிரத்தையுடன் கூறுகிறார் என்பது தெரிந்தது. அவர் கூறிய விஷயங்கள் எங்களுக்கு எவ்வளவோ உபயோகமாக இருந்தன

அத்தியாயம் 31

கிறிஸ்துமஸ் விழா

நான் கேம்பிரிட்ஜுக்குச் சீக்கிரம் சென்று கலாசாலையில் சேர்ந்துவிட வேண்டுமென்று துடித்துக் கொண்டிருந்தேன். ஆனால் அனந்தகிருஷ்ணன் எங்களைப் புறப்பட விடவில்லை. கிறிஸ்துமஸ் சமயத்தில் வந்துவிட்டு அந்தப் பண்டிகையை லண்டனிலிருந்து பார்க்காமல் போகக் கூடாது என்று சொல்லி விட்டார். மிஸ் ஜேனும் எங்களை இருக்கச் சொல்லி வற்புறுத்தினார். நான் அரை மனத்துடன்தான் இருக்கச் சம்மதித்தேன். நாட்கள் வீணாகின்றனவே என்று ரொம்பக் கவலையாக இருந்தது.

ஆனால் பிறகு இருந்ததற்காக வருந்தவில்லை. இயேசுபிரான் அவதரித்த புனித தினத்தை லண்டன் மாநகரில்

கொண்டாடும் அழகுக்கு ஈடாக எதைச் சொல்ல முடியும்? முதன் முதலில் பார்த்ததனால்தானோ என்னவோ தெரியவில்லை, அந்தக் காட்சிகள் அப்படியே மனத்தில் பதிந்து போய் விட்டன. எப்போதுமே லண்டன் நகரத்தில் தீபாலங்காரங்கள் பிரமாதமாக இருக்கும். இயேசு மகானின் பிறந்த தினத்துக்கு முதல் நாளிரவு, ஆகாயத்து நட்சத்திரங்கள்கூட அந்த அலங்காரத்தின் முன்னால் போட்டியிட முடியாது.

இயேசு பிரான் அவதரித்த போது மூன்று வியாபாரிகளுக்கு ஒரு பிரகாசமான நட்சத்திரம் வானத்தில் தோன்றி அவர் பிறந்த இடமான 'பெத்லெலம்' என்னும் ஊரைக் காட்டியதாகப் புனித பைபிள் கூறுகிறது. ஆனால் அவர் நல்ல வேளையாக இங்கிலாந்தில் பிறக்கவில்லை. டிசம்பர் மாதத்தில் அவர் அங்கே பிறந்திருந்தால் எந்த நட்சத்திரமும் அவர்களுக்கு வழிகாட்டியிருக்க முடியாது. வாரக் கணக்கில் விண் மீன்களைக் கண்ணால் பார்க்க முடிவதேயில்லை. சில சமயங்களில் ரொம்ப மனச்சோர்வு ஏற்படும்போது கண்களை மூடிக் கொண்டு அரேபியா தேசத்தில் இருப்பதாகவும், ஒரு மேகம் கூட இல்லாத நிர்மலமான ஆகாயத்தில் ஜ்வலிக்கும் கோடிக் கணக்கான நட்சத்திரங்களைப் பார்த்து ஆனந்தப் படுவதாகவும் கற்பனை செய்து கொள்வதுண்டு. மூடு பனியும், மழையும் நிற்கவே நிற்காதோ என்று தோன்றும்படி தொடர்ந்து பெய்து கொண்டே இருக்கும்.


வானத்து நட்சத்திரங்களுக்குப் போட்டியாக மின்சார நட்சத்திரங்கள் எங்கு பார்த்தாலும் ஜகஜ் ஜோதியாய் மின்னிக் கொண்டிருந்தன. அதிலும் அவர்கள் கிறிஸ்துமஸ் மரத்தை அலங்கரிக்கும் அழகு உண்டே, அதற்கு இணையே கிடையாது. விதம் விதமான வர்ணங்களில் ரிப்பன்களும், குஞ்சலங்களும், சின்னஞ்சிறு மின்சார விளக்குகளுமாக மிக அழகாக இருக்கும். மெழுகுவர்த்திகள் அவற்றின் குளுமையான இளஞ் சிவப்பு நிற ஜ்வாலையோடு அடக்கமாக எரிந்து கொண்டிருக்கும்.

உலகமெங்கும் பண்டிகைகள் வேறுபட்டாலும், விளக்குகளை ஏற்றிக் கொண்டாடும் வழக்கம் ஒன்றாக இருக்கிறதல்லவா என்று எண்ணி வியந்தேன். நீரூற்றுக்களைப் பல வர்ண விளக்குகளில் அலங்கரித்திருந்தார்கள். "வெஸ்ட் மினிஸ்டர் அபே" என்ற பிரசித்தி பெற்ற தேவாலயத்தைப் பார்த்துப் பிரமித்துப் போனேன். இந்திய மாணவர் சங்கமும் சும்மா இருக்கவில்லை. மிஸ். ஜேன், ஒரு கிறிஸ்துமஸ் மரத்தை அழகாக அலங்கரித்திருந்தார். அதன் அடியில் ஏகப்பட்ட பொட்டலங்கள் வைக்கப்பட்டிருந்தன. அவற்றில் அநேகமாக எல்லாம் மிஸ். ஜேனுக்காக மாணவர்கள் வாங்கிவைத்திருந்தார்கள். அதை யெல்லாம் ஒரு குழந்தையைப்போல் அவர் பார்த்துப் பார்த்து ஆனந்தப்பட்டார்.

அன்று பிரமாதமான விருந்துகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. என்ன ஏற்பாடு செய்தாலும் என்னையும், ரகுவையும் பொறுத்த வரையில் ஒன்றுதானே? 'ஸாலட்' என்று சொல்லப்படும் பச்சைக் காய்கறிகளுடனும், வெண்ணெய் தடவிய ரொட்டியுடனும் நாங்கள் திருப்தியடைய வேண்டியதாயிற்று.

"நீங்கள் கட்டாயம் 'கேக்' சாப்பிட்டுத்தான் ஆகவேண்டும். இன்று சாப்பிடாமல் இருக்கக்கூடாது" என்றார் மிஸ். ஜேன் எட்மண்ட்.

கை மேல் பலன்?



நான் முதலில் மறுத்தேன். பிறகு எல்லாரும் வற்புறுத்தியதன் பேரில் கொஞ்சம் சாப்பிட்டேன்.

மறுநாள் காலை எழுந்திருக்கும் போது குளிர் தாங்க முடியவில்லை. மணி ஆறாகி விட்டது. எனக்குச் சீக்கிரம் எழுந்து வழக்க மாதலால் படுத்திருக்கப் பிடிக்கவில்லை. ஆனால் குளிரோ தாங்க முடியவில்லை. சற்று நேரம் ஸஹாரா பாலைவனத்தில் இருப்பதாக நினைத்துக் கொண்டு மனத்தை உஷ்ணப்படுத்திக் கொண்டேன்.

கடைசியில் கேம்பிரிட்ஜுக்குப் புறப்பட்டு விட்டோம். ரகுவும், அனந்த கிருஷ்ணனும் எங்களை வழியனுப்ப ஸ்டேஷனுக்கு வந்திருந்தார்கள்.

கேம்பிரிட்ஜ் லண்டனிலிருந்து ஐம்பத்துமூன்று மைலில் இருக்கிறது. சீக்கிரத்தில் நாங்கள் அங்கே போய்ச் சேர்ந்து விட்டோம். ரயிலிலிருந்து இறங்கி ஸ்டேஷன் ரோடு வழியாக டாக்ஸியில் வந்தபோது எனக்கு நான் கேம்பிரிட்ஜின் அழகைப் பற்றிப் படித்த தெல்லாம் ஞாபகம் வந்தது. ஸ்டேஷன் ரோடு முடியு மிடத்தில் யுத்தத்தில் இறந்தவர்களின் நினைவுக்காகக் கட்டிய கட்டடம் நிற்கிறது. அதைத் தாண்டியதும் "ஹில்ஸ் ரோட்" என்று டாக்ஸி டிரைவரிடமிருந்து தெரிந்து கொண்டேன். ஹில்ஸ் ரோடு சாதாரணமாகத்தான் இருந்தது. லண்டனைவிடச் சிறியதாக இருக்கும் போலிருக்கிறது. இங்கும்தான் கூட்டமாகவும், இரைச்சலாகவும் இருக்கிறது என்று எண்ணினேன். கடைகளும், உணவு விடுதிகளும், கார்களும்தான் காணப்பட்டன. இது எனக்குச் சற்று ஏமாற்றமாகவே இருந்தது. ஆனால் அங்கே காணப்பட்ட கிறிஸ்துவ தேவாலயத்தின் கம்பீரமான கோபுரம் மனத்தைக் கவர்ந்தது.

ஹில்ஸ் ரோடில் கொஞ்ச தூரம் போனதும் ஆகா! அந்தக் காட்சியைப் பார்க்கக் கண்கள் இரண்டு போதவே போதாது. ஒரே வெண்மை நிற மைதானங்கள். நடு நடுவே கம்பீரமான கட்டடங்கள். என்ன அழகு! முதல் கட்டடத்தைப் பார்த்ததும் "நான் இது என்ன கட்டடம்?" என்று கேட்டேன். "இதுதான் டௌனிங் காலேஜ்" என்று பதில் வந்தது.


ஸெயின்ட் ஆன்ட்ரூஸ் ரோடில் எமானுவல் காலேஜ் இருந்தது. அதைத் தாண்டியதும் கிரைஸ்ட்ஸ் காலேஜ் தென்பட்டது. அதன் தோற்றம் பழைய காலத்துக் கோட்டையைப் போல இருந்தது. வாசலில் ஒரு பெரிய தூணும் அதன்மீது ஒரு சிலுவையும் கம்பீரமாகக் காணப்பட்டன. அதன் பிறகு 'ஸிட்னி ஸஸெக்ஸ்' காலேஜின் கட்டடம் தென்பட்டது.

பிறகு நாங்கள் சேருவதாக இருந்த "ஸெயின்ட் ஜான்ஸ்" காலேஜுக்குப் போய்ச் சேர்ந்தோம். அதன் அருகில் இருந்த "டிரினிடி காலேஜ்" என்ற பிரஸித்தி பெற்ற கல்லூரியைப் பார்த்ததும் எனக்கு மயிர்க்கூச்சம் எடுத்தது.

"நாம் எவ்வளவு அதிர்ஷ்டசாலிகள்?" என்று அரவிந்திடம் கூறினேன்.

"ஆம். இப்படி யெல்லாம் நடக்கிறது என்று என்னால் நம்பவே முடியவில்லை. ஒருவேளை கல்கத்தாவில் என் வீட்டிலிருந்து கொண்டு கனவு காண்கிறேனோ என்று சந்தேகமாக இருக்கிறது" என்றான் அரவிந்த்.

"இந்த டிரினிடி கல்லூரியைப் பாரேன். மகா மேதாவியான ஸர் ஐஸக்





பாகிஸ்தான் பிரிவினையை யடுத்து ஏற்பட்ட குழப்பத்தின் போது சுமார் 250 பேருக்கு மேற்பட்ட தென்னிந்தியர்களை இந்தியாவுக்குக் 'கலாவதி' என்னும் கப்பலில் ஏற்றிக் கொண்டு வந்து சேர்க்கக் காரண புருஷராக விளங்கியவர் திரு நவின்காண்ட்வாலா அவர்கள். இப்பேருதவிபுரிந்த திரு நவின் காண்ட்வாலா சிந்தியா ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனியின் விசேஷப் பிரதிநிதியாகச் சென்னையில் பணிபுரிந்து. இப்பொழுது பம்பாய்க்கு சிந்தியா கம்பெனியின் பொதுநல உறவு அதிகாரியாகச் செல்லுகிறார். இவர் யுனைடெட் அமெச்சூர் நடிகர் சங்கத்தின் உதவித் தலைவராகவும், தியேட்டர் சென்டரின் காரியதரிசியாகவு மிருந்து சேவை செய்துள்ளார். இவருக்கு ஜனவரி 29-ந் தேதி தாஸப்பிரகாஷ் ஹோட்டலில் ஒரு பிரிவுபசார விருந்து நிகழ்ந்தது. சென்னை நிதி மந்திரி சி. சுப்பிரமணியம் அவர்கள் இவ்வைபவத்துக்குத் தலைமை தாங்கிச் சிறப்பித்தார்கள். காண்ட்வாலா கலைக்குச் செய்துள்ள தொண்டை நிதி மந்திரி பெரிதும் பாராட்டினார். அவரது சேவையைப் பாராட்டி அவருக்கு வெள்ளிக் குத்துவிளக்கு இவ்வைபவத்தில் வழங்கப்பட்டது.

நியூட்டனும், மகா கவிஞரான ஆல்பிரட் லார்ட் டென்னிஸனும் இங்கே படித்தவர்கள் என்று எண்ணும்போதே உடல் சிலிர்க்கிறதல்லவா?'' என்றேன்.

இப்படியெல்லாம் பேசிக் கொண்டே துடிக்கும் உள்ளத்துடன் ஸெயின்ட் ஜான் கல்லூரியின் உள்ளே சென்றோம். கல்லூரியின் நிர்வாகி எங்களை அன்போடு விசாரித்தார். ''பிரயாணம் எப்படி இருந்தது?'' என்று கேட்டார். பிறகு ''லண்டன் நகரம் பிடித்ததா?'' என்று கேட்டார். கிறிஸ்துமஸின்போது லண்டனில் இருந்ததையும், அங்கே பார்த்து அனுபவித்த விஷயங்களையும் பற்றிப் பேசினோம்.

''உங்களுடைய விண்ணப்பத்தில் இருவரும் தனி அறைகளில் வசிக்க விரும்புவதாக எழுதியிருக்கிறீர்கள். கல்லூரியில் கொஞ்சம் செலவு அதிகம்தான். ஆனாலும் உங்களுக்கு இதுதான் இன்னும் சௌகரியமாக இருக்கும். இப்போதுகூட உங்களுக்கு வேண்டுமானால் இங்கேயே இருக்கலாம்'' என்றார்.

''எனக்கும் அரவிந்துக்கும் தனி அறைகளே சௌகரியமாக இருக்கும். அரவிந்த் தனிமையை விரும்புகிறவன். எனக்கும் படிப்பு முக்கியம். செலவைக் கூடியவரையில் குறைத்துக் கொள்ள விரும்புகிறேன்'' என்றேன்.

அவர் புன்சிரிப்போடு, ''சரி! ஆனால், உங்கள் இருவருக்கும் ஒரே வீட்டில் இடம் கிடைக்காதென்று நினைக்கிறேன்'' என்று சொல்லிக் கொண்டே ஒரு புத்தகத்தைப் பிரித்துப் பார்த்தார். என்னைப் பார்த்து, ''மிஸஸ். ஆலிஸ் ஹார்வி, நம்பர் 17, பிரிட்ஜ் லேன்'' என்ற விலாசத்தைக் கூறினார். அரவிந்துக்கு இன்னொரு விலாசத்தைக் கூறினார். நாங்கள் உடனே கிளம்பி எங்கள் இடங்களைத் தேடிக் கொண்டு சென்றோம்.

அரவிந்தை அவனுடைய விலாசத்தில் கொண்டு விட்டு விட்டு நான் மிஸஸ். ஆலிஸ் ஹார்வியின் வீட்டைத் தேடிக் கொண்டு போனேன். வீட்டைக் கண்டு பிடித்ததும் டாக்ஸியிலிருந்து இறங்கிச் சென்று கதவைத் தட்டினேன். பேச்சு மூச்சே இல்லை. இரண்டு மூன்று தடவை தட்டினேன். பிறகும் கதவு திறக்கவில்லை. டாக்ஸி டிரைவர் ''மணியை அடியுங்கள், ஸார்'' என்றான். சுற்றுமுற்றும் பார்த்தேன். கதவின் அருகில் ஏதோ நீட்டிக் கொண்டிருந்தது. அதை அழுத்தினேன். சத்தம் கேட்கவில்லை. பிறகு அதைப் பிடித்து ஒரு இழுப்பு இழுத்தேன். உள்ளேயிருந்து மணியடிக்கும் சத்தம் கேட்டது.

ஒரு நிமிடத்துக்கெல்லாம் கதவு திறந்தது. கதவு இருந்த இடத்தில் நடுத்தர வயதுடைய ஒரு மாது நின்றார். அவரைப் பார்த்த உடனே, ''நீங்கள் தானே மிஸஸ். ஹார்வி?'' என்று தயக்கத்துடன் கேட்டேன்.

''ஆமாம்! உங்களுக்கு என்ன வேண்டும்?''

''என்னை 'ஸெயின்ட் ஜான்' கல்லூரியின் தலைவர் இங்கு அனுப்பினார். உங்கள் வீட்டில் அறை காலியாக இருக்கிறதாமே?''

''ஆமாம்! ஆமாம்! உன்னை நான் எதிர்பார்த்துக் கொண்டுதான் இருந்தேன்'' என்று வரவேற்புக் கூறினார் மிஸஸ். ஹார்வி. (தொடரும்)



'அனஸின்'

வில்லைகளில் கலந்துள்ள நான்கு மருந்துகளால் உங்கள் வலியை நிவர்த்தி செய்து கொள்ளுங்கள்

'அனாஸின்' விஞ்ஞான முறைப்படி சேர்க்கப்பட்ட நான்கு மருந்துகளின் கலப்பாகும். அவை நரம்புகளின் முக்கிய சேர்க்கை பாகங்களின் கூட்டாக வேலை செய்து விரைவில் வலி, தலைவலி, ஜலதோஷம், ஜுரம், பல்வலி, மற்றும் தசைநார்களில் நோவு இவற்றை நீக்கும்.



அனாஸினில் அடங்கிய மருந்துகள் :—

1. க்வினின் : ஜுரத்தடுப்பு குணமும், பலவிருத்தி செய்வதற்கும் பிரசித்தி பெற்றது. ஜுரத்தை குறைப்பதில் மிகத் துரிதமானது.
2. காப்பின் : பலஹீனத்திற்கும், மனச்சோர்வுக்கும் மிதமான தூண்டுகோல் மருந்தாக விதிக்கப்பட்டிருக்கிறது.
3. பினஸிடின் : ஜுரத்தடுப்பு, வலி நிவாரணத் தன்மைகளுக்கு பெயர் பெற்றது.
4. அஸிடில்ஸாலிஸிலிக் ஆஸிட் : தலைவலி அது போன்ற எல்லா வலிகளையும் நிறுத்துவதற்கு உபயோகமுள்ளது.

அனாஸினிலுள்ள இந்த நான்கு மருந்துகளும் ஒரு டாக்டரின் குறிப்புக்கு ஒப்பாகும். 'அனாஸின்' ஹிருதயத்திற்கு தீங்கு விளைவிப்பதோ அல்லது வயிற்றுக்கு வேறாறு உண்டாக்குவதோ கிடையாது. வலி, தலைவலி, ஜலதோஷம், ஜுரம், பல் வலி மற்றும் தசைகளில் வலி முதலியவற்றிலிருந்து விரைவிலும், பத்திரமாகவும், நிச்சயமாகவும் நிவாரணம்பெற எப்பொழுதும் அனாஸினையே கேட்டு வாங்குங்கள்.

லக்ஷக்கணக்கான மக்களுக்கு நிவாரணம் அளிக்கின்றது.

A. 44


நிராலா
சோப்
வெளுப்பதை
எளிதாக்குகிறது
வியர்க்க விறுவிறுக்க அடித்து, கசக்கி, தேய்த்து அவஸ்தைப்பட வேண்டாம். நிராலா சோப்பை உபயோகித்தால்; அதன் நிறைந்த நுரை துரிதமாக துணிகளுக்குக் கெடுதலில்லாமல் அழுக்கையும், கறைகளையும்போக்கும்.
அடைப்புகள்
அற்றது
துங்கபத்ரா இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்
கர்நூல்
பிரதிநிதிகள் இல்லாத இடங்களுக்கு டிஸ்ட்ரிபியூட்டர்கள் தேவை

ஆற்றங்கரையினிலே



பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை

57. தஞ்சைமா நகரம்

காவேரியின் கருணையால் தஞ்சை வளம் பெற்றது தஞ்சை நன்னாடு. பஞ்சம் என்பதறியாத அத் திரு நாட்டில் தஞ்சை மா நகரம் தழைத்தோங்கி வளர்கின்றது. அஞ்சன வண்ணனாகிய திருமால் அந் நகரில் அமர்ந்து அருள் புரிகின்றான்.

"வம்புலாம் சோலை மாமதிள் தஞ்சை
மாமணிக் கோயிலே வணங்கி
நம்பிகாள் உய்ய நான்கண்டுகொண்டேன்
நாராயணா என்னும் நாமம்"

என்று தஞ்சை மாமணிக் கோயிலை நெஞ்சாரப் போற்றினார் திருமங்கை மன்னன். செஞ்சடைப் பெருமானாகிய ஈசனும் தஞ்சையம்பதியிலே கோயில் கொண்டருளினான். அக் கோயிலைத் 'தஞ்சைத் தளிக் குளம்' என்று தேவாரம் பாடிற்று.

இத்தகைய தஞ்சைமா நகரின் பெருமையெல்லாம் தன் பெருமையாக்கிக் கொண்டான் இராச இராசன் என்ற சோழன். அவன் மன்னர் மன்னன்; மாநில வேந்தன்; வெற்றி மேல் வெற்றி பெற்ற கொற்றவன்; கடல் சூழ்ந்த இலங்கையையும் வென்று அரசாண்ட இணையற்ற வீரன். அம் மன்னன் தஞ்சையைச் சோழ நாட்டின் தலைநகர் ஆக்கினான். அதற்கு அருமையும் பெருமையும் அளித்தான்: முத்தமிழும் அங்கு முழங்கக் கண்டு களித்தான்.

தஞ்சையம்பதியில் அம் மன்னன் எடுத்த தனிப் பெருங் கோயில் தமிழ் நாட்டுக்கு ஒரு நல்ல அணியாகத் திகழ்கின்றது. இராசராசன் பெயர் தாங்கி நிற்கும் அப் பெருங் கோயிலை அந்நாளிற் பாடினார் கருவூர்த் தேவர் என்னும் பெரியார்.

"மின்நெடும் புருவத்து
இளமயில் அனையார்
விலங்கல்செய் நாடகசாலை
இன்னடம் பயிலும்
இஞ்சிசூழ் தஞ்சை
இராசராசேச்சரத்து இவர்க்கே"

(விலங்கல்-பண்மாறி இசைத்தல்; இஞ்சி-மதில்; இராசராசேச்சரம்-கோயிலின் பெயர்)

என்பது அவர் அருளிய திருப்பாசுரம்.

சோழ மன்னரின் செல்வச் செழுமைக்கும் சமயப்பற்றுக்கும் ஒரு சான்றாகத் திகழ்கின்றது தஞ்சைப் பெருங்கோயில். அதன் உயர்ந்த நடுவிமானத்தின் உச்சியிலே குன்று போன்ற கருங்கல்லொன்று நின்று நிலவுகின்றது. அக் கல்லைக் கோபுரத்தின் உச்சியிற் கொண்டுசேர்ப்பதற்கு நெடுந்தொலைவிலிருந்து சாரம் அமைத்ததாகவும், தஞ்சைக்கு நான்கு மைலுக்கு அப்பாலுள்ள சாரப் பள்ளம் என்ற சிற்றூரின் பெயரே அதற்குச் சான்று பகர்வதாகவும் அறிந்தோர் கூறுவர். இன்னும் அத் திருக்கோயிலின் முன்னே உள்ள பெரிய நந்தி என்னும் மாக் காளையும் ஒரே கல்லில் எடுப்பாக வடிக்கப் பட்டிருக்கின்றது.

கருங்கச் சொல்லின் தஞ்சைக் கற்கோயில் முற்காலச் சிற்பக் கலையின் சீர்மைக்கு ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகும்.

அக் கோயிலின் சுற்றாலையில் அமைந்துள்ள முருகன் திருவுருவைக் கண்டு ஆனந்தமுற்றார் அருணகிரியார்.

"அஞ்சன வேல்விழி மடமாதர்
அங்கவர் மாயையில் அலைவேனோ
தஞ்சென வாம்அடி யெய்யாழத்
தஞ்சையில் மேவிய பெருமாளே"

என்று பாமாலை சூட்டிப் பணிந்தார்.

சிவ நெறியிலே சிறந்த ஆர்வமுடைய இராச ராசன் சிவபாத சேகரன் என்னும் சிறப்புப் பெயர் பெற்றான். அம்மன்னனைப் பற்றிய பாட்டும் கூத்தும் முன்னாளிற் பல உண்டு. "இராச ராசேச்சர நாடகம்" என்னும் கூத்து தஞ்சைத் திருவிழாக் காலங்களில் சிறப்பாக நடைபெற்ற தென்பது பெரிய கோயில் கல்லெழுத்தால் புலனாகின்றது. அந்நாடகம் கிடைத்தால் சிவபாதசேகரன் பெருமை இன்னும் நன்றாக விளங்கும்.

பெருஞ் சோழ மன்னர் காலத்திற்குப் பின் நாயக்க மன்னர் சில காலம்; மராட்டிய மன்னர் சில காலம் தஞ்சைமா நகரில் ஆட்சி புரிந்தனர். அன்னார் கட்டிய கோட்டைகளும் மாளிகைகளும் இன்றும் அந் நகரில் பொலிவிழந்து நிற்கக் காணலாம். அவற்றில் ஒன்று சங்கீத மண்டபம் என்று வழங்கும் இசை மன்றம். நெடுங் காலமாக ஒளி மழுங்கிக் கிடந்த அம்மன்றம் இப்பொழுது கலையரங்கமாக மீண்டும் காட்சி யளிக்கிறது.

வீர சிவாஜியின் மரபில் வந்த மராட்டிய வேந்தர் பலர் தஞ்சையில் அரசு புரிந்தாரேனும் சரபோஜி மன்னன் ஒருவனே இன்றும் பொது மக்களால் நினைந்து போற்றப் படுகின்றான். அரசாட்சியில் அவன் கருத்துச் செல்லவில்லை. ஆதலால் ஆங்கிலேயரிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்புவித்தான். அவர் தந்த பொன்னையும் பொருளையும் கொண்டு கவலையின்றி வாழ்ந்தான்; அருங் கலைவாணரை ஆதரித்தான். பாட்டின் தரம் அறிந்து பரிசளித்தான். அவன்மீது ஒரு குறவஞ்சி நாடகம் பாடினார் ஒரு கவிஞர்.

"நன்னயம்சேர் தஞ்சைநகரில்
நலம் பெருகும் வாசல்இது
மன்னுசர போஜிமன்னன்
மகிழ்ந்திருக்கும் வாசல்இது"

என்று அவன் மாளிகையின் வாசல் வளம் பாடுகின்றது சரபேந்திர குறவஞ்சி.

அம்மன்னன் தஞ்சை மாநகரில் பவனி வந்த கோலத்தையும் அவன் அழகைக் கண்டு மையல் கொண்ட மதனவல்லியின் மோகத்தையும், குறவஞ்சி நாடகத்திலே காண்பது ஓர் இன்பம்.

காதலுற்ற மதனவல்லியின் முன்னே குறி சொல்லும் குறவஞ்சி கூடையும் கையுமாய்த் தோன்றுகிறாள்.

"அந்தமிகும் கந்தன் எங்கள்
மருமகன்காண் அம்மே
அன்னநடை வள்ளி எங்கள்
கன்னிகைகாண் அம்மே"

(அந்தம் - அழகு)

என்று ஆனந்தமாக ஆடிப் பாடுகின்றாள். அவள் தப்பாமல் குறி சொல்வதில் எப்பாலும் புகழ் பெற்றவள்; பல நாட்டுப் பாவையரின் கை பார்த்துப் பரிசு பெற்றவள். இத்தகைய குறவஞ்சி மதனவல்லியை மகிழ்ந்து நோக்கி,

"சொன்ன நாடுகளும் பெற்ற வரிசையும்
சொல்லுகிறேனடி கண்ணே"

என்று எடுத்துத் தான் பார்த்த பெண்களையும் பெற்ற பரிசுகளையும் அடுக்குவாளாயினாள். "அம்மே! நான் ஆந்திர நாட்டிலே ஒரு பெண்ணின் கை பார்த்துக் குறி சொன்னேன். அவள் மனமகிழ்ந்து இந்த மூக்குத்தியைப் பரிசளித்தாள்.

"நன்னிடங்கொரு தெலுங்குமானினி
'நாசெய்சூ'டெனச் சொன்னாள்
நாடிநற்குறி ஒத்தேன் இந்த
நாசிகாபரணம் தந்தாள்"

(மானினி - பெண்; நாசெய் சூடு - என் கையைப் பார்: இது தெலுங்கு; நாசிகாபரணம் - மூக்குத்தி.)

ஒரு கன்னடப் பெண் 'என் கையைப் பார்' என்று காட்டினாள். நான் பார்த்து நல்ல குறி சொன்னேன், அவள் இந்தக் காதோலை தந்தாள்.

"கன்னி இங்கொரு கன்னடப்பெண், 'நன
கையின நோடே' என்றாள்
கருதவட்சிசை குறிதனக்கவள்
காதின் ஓலை அளித்தாள்"

(நன கையின நோடே - என் கையைப்பார்: இது கன்னடம்)

இன்னும் கேள்! அம்மே! ஒரு ஆங்கிலப் பெண்ணும் தன் கையைக் காட்டிக் குறி கேட்டாள். அவள் தந்தது இந்த மேகலை.

"ஒண்ணுதல்பெறும் இங்கிலீஷ்மாது
ஒருத்தி 'லுக் மை ஹாண்'டென்றாள்
ஒத்தேன் அவள் பாணிரேகை கண்டு
உதவினாள் இந்த மேகலை"

(நுதல் - நெற்றி; லுக் மை ஹாண்டு - என் கையைப் பார்: இது ஆங்கிலம்; பாணி - கை.)

குறத்தி சொல்லிய சொல்லை நம்பி மதனவல்லியும் குறி கேட்டாள். அவள் கையை நன்றாகப் பார்த்து, "தஞ்சையை ஆளும் சரப மன்னன் உனக்கு அருள் புரிவான்" என்று கூறினாள் குறவஞ்சி.


சரபேந்திர குறவஞ்சி நாடகம் தஞ்சைக் கோவிலில் நெடுங்காலம் நடந்து வந்தது. 'பல கலைகள் உணர்ந்த தஞ்சைச் சரபோசி' என்று பாராட்டப் பெற்ற மராட்டிய மன்னனது மாளிகை அழிந்தது; மருத்துவசாலை மறைந்தது. ஆயினும் அவன் ஆசையுடன் தொகுத்த அருமையான நூல் நிலையம் மட்டும் 'சரஸ்வதி மகால்' என்னும் பெயரோடு தஞ்சையிலே காட்சிதருகின்றது.


MAFATLAL FINE MILLS
NAVSARI
Two by Two
FULL VOILE
ராஜ்ரேகா
ராஜலக்ஷ்மி
ராஜ்சோபா
ராஜ்சுந்தரி
சூபர்பைன்
மெர்஬ரைஸ் செய்யப்பட்டது
மாபத்லால் பைன் மில்ஸ் — நவ்ஸாரி

கால்கேட் குளோரோபில்*

ஈறுகளை பலப்படுத்துகிறது

வைத்திய சோதனை நிரூபிக்கிறது!



ஈறுகளைப் பலப்படுத்து கிறது!

வாய் நாற்றத்தை அதி தீவிரமாய் ஒழிக்கிறது!

சொத்தையாக்கும் கிருமிகளை ஒழிக்கிறது!

கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்டை வழக்கமாகத் தேய்ப்பதால், குளோரோபில் மூலம் அது ஈறுகளைப் பலப்படுத்துகிறது.

வேறு சாதாரண பற்பசையை விட மிகமிகத் தீவிரமாக வாய்நாற்றத்தை கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்ட் ஒழிக்கிறது என்பது ருசுவான உண்மை.

கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்டை ஒவ்வொருமுறையும், சாப்பிட்டவுடன் தேய்ப்பதால் பல் எனுமலை அரிக்கும் நாச அமிலங்களும், அவற்றை விளைவிக்கும் கிருமிகளும் குறைகின்றன!

வேறு எந்த பற்பசையிலும் இதைவிட வீரிய குளோரோபில் இல்லை

குழந்தைகள் விரும்பும் மதுரமான சுவை.
மதுரமான இனிய சுவையுள்ள கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்டை குழந்தைகள்கூட விரும்புவார்கள்.



குளோரோபில் டூத்பேஸ்டின் பூரண நன்மைகளைத்தரும் விசேஷ கால்கேட் சூத்திரம்!

* நீரில் கரையும் குளோரோபிலின்ஸ் சேர்ந்தது.

CTPA/G/3

தனிக் குடித்தனம்



எஸ். கோவிந்தராஜன்

அடுத்த வீட்டு வாசலிலே வண்டியொன்று வந்து நின்றது. வெளியே வந்து எட்டிப் பார்த்த கோமளா, இடுக்கிட்டுப் போனாள்.

நேற்றுத்தான் புக்ககம் போன அடுத்த வீட்டுப் பெண், வண்டியிலிருந்து இறங்கிக்கொண்டிருந்தாள்.

"கோமு!" என்று உள்ளேயிருந்து கோபாலன் குரல் கொடுத்தான். அப்பொழுதுதான் அவளுக்கு ஞாபகத்துக்கு வந்தது, கணவருக்கு இலையிலே சாதத்தைப் போட்டுவிட்டு மோர் ஊற்றுமலேயே வெளியே வந்துவிட்டோம் என்பது.

வேகமாக உள்ளே வந்தாள் அவள்.

"என்ன கோமு இது? வெளியே அப்படி என்ன வேலை? மோரை ஊற்றிவிட்டு அப்புறம் போய்ப் பாரேன். என் கை கூட உலர்ந்து போய் விட்டது" என்றான் கோபாலன்.

"ஒரு அதிசயமான சமாசாரம். நேற்றைக்குப் புக்ககம் போன அடுத்த வீட்டுப் பெண் இன்றைக்குத் 'இடு இடிப்'புன்னு வந்து இறங்குகிறாள். என்னமோ, ஏதோ தெரியல்லே......" என்றாள் அவள், கணவனுக்கு மோரை ஊற்றிக் கொண்டே.

"எல்லாம் சீர் செனத்தியைப் பற்றித்தான் இருக்கும். பெண்ணுக்கு அது செய்யவில்லை, இது செய்யவில்லை என்று குறைப் பட்டுக் கொண்டு பெண்ணைப் பிறந்தகத்துக்கு அனுப்பியிருப்பார்கள்!" என்றான் அவன் அசுவாரஸ்யமாக.

"இந்தப் பிள்ளை வீட்டுக்காரர்களே எப்பவும் இப்படித்தான். எதையாவது சாக்கிட்டு, பெண்களைக் கதற அடிப்பதே அவர்கள் வழக்கம். பாவம், அந்தப் பெண் கண்ணீரும் கும்பலையுமாக இறங்குகிறதைப் பார்த்தால் பெற்ற வயிறு எப்படித் துடிக்குமோ!" என்று அடுத்த வீட்டு மாமிக்காக அனுதாபப்பட்டாள் அவள்.

"சும்மா பிள்ளை வீட்டுமேலேயே குற்றம் எல்லாவற்றையும் சுமத்தி விடாதே! பெண் வீட்டார் மட்டும் சாமான்யப் பட்டவர்களா? அந்தக் காலத்திலே உன் அம்மா ஆடின ஆட்டத்தைத்தான் கொஞ்சம் நினைக்கப் பாரேன்" என்றான் அவன்.

"உங்களுக்கு எங்கம்மாவைப் பற்றிக் குறை சொல்லாவிட்டால் தூக்கம் வராது!" என்று அவள் வாய்தான் கூறிற்றே தவிர, மனம் மட்டும் 'அவர் சொல்லுவது வாஸ்தவம்தான்' என்று ஆமோதித்தது.

கோபாலன் சாப்பிட்டுவிட்டு எழுந்து சென்றுவிட்டான். அவளால் அதற்குமேல் காரியங்களைச் செய்ய முடியவில்லை. உள்ளம் பழைய குப்பைகளைக் கிளறத் தொடங்கவே அப்படியே அவள் தரையில் உட்கார்ந்து விட்டாள்.

கோமளாவின் தந்தை பத்மநாபன் ஓர் அதிசயப் பிறவி. அதிர்ஷ்டதேவதை அவர் பக்கம் இருந்ததால் பணத்தை அள்ளி அள்ளிச் சேர்த்தார். வெளியே அவருக்கு நல்ல செல்வாக்கு. அவர் பேச்சுக்கு மறு வார்த்தை கூறக்கூட மற்றவர்கள் அஞ்சினர். அப்படிப்பட்டவர் வீட்டிலே தம் மனைவி மங்களத்தினிடம் மட்டும் பயந்து நடுங்கி வந்தார் என்றால் அது ஓர் அதிசயம்தானே!

மங்களத்துக்கு, 'தான் பணக்காரி' என்ற எண்ணம் மட்டற்ற கர்வத்தைக் கொடுத்தது. அவள் தன்னைவிடப் பணத்தில் குறைந்தவர்களை மதிப்பதே கிடையாது. தன்னுடைய சிநேகிதத்தை எல்லாம் தன்னையொத்த பணக்காரர்களிடமே வைத்துக் கொண்டாள்.

கோமளம் அவர்களுக்கு ஒரே பெண். 'நூலைப் போலச் சேலை; தாயைப் போலப் பெண்' என்று கூறுவார்கள். ஆனால் கோமளத்தின் விஷயத்தில் இது முற்றிலும் மாறுபட்டிருந்தது. மங்களத்துக்குத் தன் வேலைக்காரர்களிடமும் மற்ற ஏழை எளியவர்களிடமும் நெருங்கிப் பழகுவது கட்டோடு பிடிக்கவில்லை. சமயம் நேரும் போதெல்லாம் "அந்தத் தரித்திரங்களுடன் என்னடி பேச்சு..." என்று மகளைக் கண்டிக்க அவள் தவறியதேயில்லை.

கோமளம் வளர்ந்து பதினாறு வயதுக் குமரியானாள். மகளுக்குக் கல்யாணம் செய்வதற்கான முயற்சியில் அவள் தீவிரமாக இறங்கினாள்.

மங்களம் தன்னைவிட உயர்ந்த அந்தஸ்திலுள்ள சம்பந்தமாகத்தான் செய்து கொள்



வான் என்று எல்லோரும் நினைத்தனர். ஆனால், அந்தஸ்துக்குக் குறைந்த நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்த கோபாலனை அவன் தன்னுடைய மகளுக்குக் கணவனாகத் தேர்ந்தெடுத்த பொழுது ஊரே மிகவும் அதிசயப்பட்டது.

அவன் கோபாலனைத் தேர்ந்தெடுத்ததற்கு முக்கிய காரணங்கள் இரண்டு. பணக்கார இடத்தில் சம்பந்தம் செய்தால் கோமளாவைப் புக்ககம் அனுப்ப வேண்டி வரும். அங்கே தன் மகள் இடுப்பொடிய வேலை செய்து உடல் கெட நேரிடும். கோபாலனுக்கு அவளைக் கொடுத்துவிட்டால் மகளையும் மருமகனையும் வீட்டோடு வைத்துக் கொண்டு விடலாம் என்பது ஒன்று. மேலும் கோபாலன் தான் சொன்னபடியெல்லாம் ஆடுவான். கூப்பிட்டவுடனே ஓடி வரும் நாய்க் குட்டியைப் போலத் தங்கள் பின்னாலேயே திரிந்து கொண்டிருப்பான் என்பது மற்றொன்று.

அவன் மனத்துக்குள்ளேயே திட்டம் வகுத்துக் கொண்டு கல்யாணத்துக்கு ஏற்பாடு செய்து விட்டான்.

கல்யாணம் சிறப்பாக நடந்தது. கல்யாணத்துக்கு மறு நாள் சம்பிரதாயத்தையொட்டி மகளையும் மருமகனையும் ஊருக்கு அழைத்துச் சென்று விருந்து வைக்க வேண்டும் என்றார் கோபாலனின் தந்தை. மங்களம் பிடிவாதமாக மகளை அனுப்ப மறுத்து விட்டாள். "உங்கள் விருந்தையெல்லாம் இங்கேயே வைத்துக் கொள்ளுங்கள். இனி என் மகளும் மருமகனும் இருக்க வேண்டிய இடம் இதுதான்" என்றாள்.

கோபாலனுக்கும் அவன் பெற்றோர்களுக்கும் தூக்கி வாரிப் போட்டது. மனைவி கணவன் வீட்டுக்குப் போகாமல், மருமகன் மாமியார் வீட்டுக்கு வருவதென்றால் யாருக்குத்தான் தூக்கி வாரிப் போடாது? கோபாலனின் தந்தையும், ஊராரும் எவ்வளவோ எடுத்துச் சொன்னார்கள். ஆனால், எல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்காகத்தான் முடிந்தது. "என் பெண் ஒரு பொழுதும் உங்கள் வீட்டுக்கு வர மாட்டாள். பெண்டாட்டி வேண்டுமென்றால் மாப்பிள்ளைதான் இங்கே யிருக்க வேண்டும்" என்றாள்.

இத்தனைக்கும் பத்மநாபன் வாயே திறக்கவில்லை. அவருக்குத் தெரியும், தம் மனைவி சொல்வது நியாயமல்லவென்று. ஆனால் அதை எதிர்த்துப் பேசச் சக்தியற்றவராகி வாய் மூடி மௌனியானார்.

கோபாலனுக்கும் அவன் பெற்றோர்களுக்கும் ரோஷம் பொத்துக் கொண்டு வந்தது. 'சீ...இந்த ராட்சஸியிடம் வந்து சம்பந்தம் செய்து கொண்டோமே' என்று வெறுத்துக் கொண்டனர். கடைசியில் "எங்களுக்கும் கொஞ்சம் 'மானம்' இருக்கிறது. என் மகன் பெண்டாட்டியின் கையை எதிர் பார்க்கும் அளவுக்குச் சக்தியற்றவனாகி விடவில்லை. உங்கள் பெண் கணவனுடன் வாழ வேண்டுமென்ற விருப்பம் இருந்தால் அவளை எங்கள் வீட்டில் கொண்டு வந்து விடுங்கள். நாங்கள் போய் வருகிறோம்!" என்று கூறிவிட்டுக் கிளம்பி விட்டனர்.

அவர்கள் போகும்பொழுது கோபாலன் ஒருதடவை திரும்பிப் பார்த்தான். உள்ளே ஒரு ஜோடிக் கண்கள் கண்ணீர் ததும்பத் தன்னையே உற்றுப் பார்த்துக் கொண்டிருப்பது தெரிய வந்தது. பாவம், அவன் என்ன செய்வான்?

நாட்கள் வேகமாக ஓடத்தொடங்கின. மங்களம் தன் முறுக்கைச் சிறிதும் தளர்த்தவில்லை. கோமளா தன் தாயிடம் எத்தனையோ முறை கெஞ்சிப் பார்த்துவிட்டாள். பலன் பூஜ்யம்தான். "சரிதான்! போடி, உன்னே! மானத்தை விட்டு உன்னை நான் அங்கே கொண்டு போய்விட முடியாது. பெண்டாட்டி வேணுமென்றால் அவன் இங்கே வரட்டும்" என்று கூறிவிட்டாள்.

கோமளா, தாய்க்குத் தெரியாமல் தனது அன்பையெல்லாம் குழைத்துக் கோபாலனுக்குக் கடிதம் ஒன்று போட்டாள். அவனும் உடனே பதில் போட்டான்.

கோபாலனுடைய நிலையும் அங்கு தர்ம சங்கடமாகத்தான் இருந்தது. கல்யாணமாகியும் மகன் பிரம்மச்சாரியாகக் காலங் கழிப்பதைக் கண்ட அவன் பெற்றோர் மெள்ள அவன் மனசை மறு விவாகத்தில் திருப்பத் தொடங்கினர். "நான் சொல்வதைக் கேளடா, கோபாலா! உன்

அத்தை பெண் இளியபாட்டமா இருக்கா...நீ சரின்னு சொல்லு. நாளைக்கே ஏற்பாடு பண்ணிவிடுகிறேன்" என்றாள் அவன் தாய்.

ஏக்கத்தையும் துக்கத்தையும் ஒன்று சேர்த்து எழுதப்பட்ட கோமளாவின் கடிதங்கள் அவன் மனம் மாறாமல் பார்த்துக் கொண்டன. அவன் பிடிவாதமாகவேயிருந்தான். ஆனால் தாய் தந்தையரின் நச்சரிப்பு நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வந்தது. இந்தத் தொல்லையிலிருந்து எப்படியடா தப்பித்துக் கொள்வது என்று தெரியாமல் அவன் தவியாய்த் தவித்தான்.

கணவனின் மறு விவாகச் செய்தியைக் கேட்டுப் புழுவாய்த் துடித்துப் போனாள் கோமளா. ஆனால் மறு நாள் வந்த கோபாலனின் கடிதம் அவளுக்குச் சிறிது ஆறுதலைக் கொடுத்தது. "நீ எதற்கும் பயப்படாதே. நான் உன்னை மறந்து, வேறு எவரையும் மணந்து கொள்ள மாட்டேன். இது சத்தியம். இன்னும் இரண்டு நாட்களில் விவரமாகக் கடிதம் எழுதுகிறேன். அதன்படி நீ நட!" என்று சுருக்கமாக இருந்தது அவன் கடிதம்.

இரண்டு நாட்கள் நகர்ந்தன. மூன்றும் நாள் காலை! மணி எட்டடித்தும் கோமளா காப்பி குடிக்க எழுந்து வராததைக் கண்ட தாயார் மாடிக்குச் சென்றாள்.

"எழுந்திரம்மா, மணி எட்டடிச்சுடுத்து! இன்னும் காப்பி குடிக்காமல் படுத்திருந்தால் உடம்பு என்னத்துக்கு ஆகும்?" என்று கூறிப் போர்வையை விலக்கியவள் தேள் கொட்டியவள் போல் திடுக்கிட்டாள்.

படுக்கையிலே கோமளா இல்லை. அவளுக்குப் பதில் இரண்டு தலையணைகள்தான் போர்வைக்குள் ஐக்கியமாகி யிருந்தன. உடனே வீடு முழுவதும் தேடினாள். கணவனை எழுப்பி விஷயத்தைச் சொன்னாள். வேலைக்காரர்களை அனுப்பி ஊர் முழுவதும் தேடச் சொன்னாள்.

வேலைக்காரர்களெல்லோரும் கோமளாவைத் தேடிக் கொண்டு மூலைக் கொருவராகப் பறந்தனர். மங்களம் வாசலுக்கும் உள்ளுக்குமாக ஓடிக் கொண்டிருந்தாள். வெளியே சென்ற வேலைக்காரர்கள் எல்லாம் தொங்கிய முகத்துடன் திரும்பினர். கோமளாவை எங்குமே காணவில்லை.

மங்களத்துக்குப் பளிச்சென்று ஓர் எண்ணம் தோன்றியது. 'அப்படியிருந்தாலும் இருக்கும்' என்று மனத்துள் கூறிக் கொண்டே கணவரிடம் வந்தாள். "ஒரு வேளை, சம்பந்தி வீட்டு மனுஷாளுடைய சூழ்ச்சியாக இருக்குமோ? நேற்று யாராவது வந்து குழந்தையைத் தந்திரமாக அழைத்துக் கொண்டு போயிருக்கலாமல்லவா?" என்றாள் கணவனை நோக்கி.

பத்மநாபனுக்கு உள்ளுக்குள் மகிழ்ச்சி. தன்னையும் மதித்து இந்த மங்களம் பேசுகிறாளே என்று உச்சி குளிர்ந்து போனார். ஆனாலும் தம்முடைய ஆனந்தத்தை வெளிக் காட்டிக் கொள்ளாமல், "கோமளா என்ன சின்னக் கொழந்தையா, 'லபக்'குனு தூக்கிண்டு போக? எனக்கு என்னமோ அப்படியிருக்கும் என்று தோன்றவில்லை" என்று கூறினார். அவர் துணிந்து மங்களத்துக்கு எதிராகப் பேசியது இதுதான் முதல் தடவை.

மங்களம், "உங்களைப் போய்க் கேட்க வந்தேனே......என் புத்தியைச் செருப்பால் அடிக்கணும்......நிச்சயம் குழந்தை அங்கே தான் இருக்கிறாள்......பழனி, காரைச் சீக்கிரம் எடு. உடனே ஸ்டேஷனுக்குப் போகணும்" என்றாள்.

எழும்பூர் ஸ்டேஷனிலே ரயிலில் உட்கார்ந்து கொண்டிருந்தாள் மங்களம். ரயில் புறப்பட இன்னும் அரைமணியிருந்தது. இந்தப் பாழாய்ப்போன ரயில் சீக்கிரம் புறப்படக்கூடாதா என்று அவள் முணுமுணுத்தாள்.

அதே சமயத்தில் தெற்கேயிருந்துவரும் வண்டியொன்று வந்து நின்றது. ரயிலிலிருந்து இறங்கும் பிரயாணிகளின் மேல் கவனத்தைச் செலுத்திய மங்களம், ஒரு பெட்டியிலிருந்து இறங்கும் மனிதர்களைக் கண்டதும் திடுக்கிட்டாள். இறங்கியவர்கள் சாட்சாத் அவளுடைய சம்





சுதந்திர இந்தியாவின் முன்னேற்றத்துக்காக இந்திய சர்க்கார் ஐந்தாண்டுத் திட்டங்கள் மூலம் அற்புதமான சாதனைகள் செய்து வருகிறார்கள் அல்லவா? அந்தச் சாதனைகளைப் பற்றி இந்திய மக்கள் எல்லாரும் தெரிந்து கொள்வதற்காக ஆண்டுக்கு இரண்டு முறை அகில இந்தியாவிலும் உள்ள பத்திரிகைப் பிரதிநிதிகளை அழைத்துக் கொண்டு சென்று அவைகளைச் சுற்றிக் காண்பிக்க ஏற்பாடு செய்து வருகிறார்கள். இந்திய சர்க்கார் அழைப்புக்கிணங்க இரண்டாவது முறையாக "கல்கி" பத்திரிகையின் பிரதிநிதியாக 'கல்கி' துணை ஆசிரியர் திரு ஜெயமணி சுப்பிரமணியம் அவர்கள் செல்லுகிறார்கள்.

ஜனவரி மாதம் 26உ திரு ஜெயமணி சுப்பிரமணியம் அவர்கள் சென்னையிலிருந்து தில்லிக்குப் புறப்பட்டார். சென்னை சென்ட்ரல் ஸ்டேஷனில் "கல்கி" ஆசிரியர் திரு சோமு அவர்களும், உதவி ஆசிரியர்களும், கல்கி காரியாலயச் சிப்பந்திகளும் திரளாகச் சென்று திரு சுப்பிரமணியம் அவர்களை வழி அனுப்பி வைத்தனர்.

பந்தியேதான். எங்கே மாப்பிள்ளை......? இவர்கள் இரண்டு பேர் மட்டும் இறங்குகிறார்களே ......?

சிறு குழந்தையைப் போலக் குதித்துக் கொண்டு ரயிலை விட்டு இறங்கி இரண்டே எட்டில் அவர்களை அணுகினான். மங்களத்தைக் கண்டதும் கோபாலனின் தாயும் தந்தையும் திடுக்கிட்டனர்.

தனக்கு இருக்கும் படபடப்பில் தன்னுடைய துடுக்குத் தனத்தையும் மறந்து "குழந்தையும் மாப்பிள்ளையும் எங்கே...? அவர்கள் வரவில்லையா?" என்று கேட்டாள் மங்களம் வினயமாக.

"குழந்தையா? மாப்பிள்ளையா? என்ன, சம்பந்தியம்மா! விளையாடுகிறீர்களா...? நேற்றிலிருந்து கோபாலனைக் காணவில்லை. இங்கேதான் வந்திருப்பான் என்று நாங்கள் தேடிக் கொண்டு வந்தால் எங்களை ஏய்க்கப் பார்க்கிறீர்களே!" என்றார் கோபாலனின் தந்தை படபடப்புடன்.

"என்ன? மாப்பிள்ளையைக்காணோமா?" என்று மங்களம் திடுக்கிட்டுப் போய்க் கேட்டாள். விஷயம் புரியாமல் அவள் மனம் குழம்பியது. அதற்கு மேல் வார்த்தையே வெளிவரவில்லை.

இந்தச் சமயம், "எல்லோருக்கும் நமஸ்காரம்!" என்று கூறிக்கொண்டே கோபாலன் அங்கே தோன்றினான். அவனுடன் கோமளாவும் தோன்றினாள்.

"அப்பா, நமஸ்காரம்! யாரைத் தேடுகிறீர்கள்? பெண்ணும் மாப்பிள்ளையும் சேர்ந்துதான் வீட்டை விட்டு வெளியேறினோம். எல்லாம் சுபமாக முடிந்து விட்டது. வாருங்கள் போகலாம். கோமளா, அப்பாவுக்கு நமஸ்காரம் பண்ணு" என்றான் கோபாலன். கோமளா மாமனாருக்கும் மாமியாருக்கும் நமஸ்காரம் செய்தாள்.


பெண்ணும் பிள்ளையும் ஒன்று சேர்ந்து விட்டபிறகு வேறு என்ன பேச்சு இருக்கிறது! மங்களத்தின் வாயும் அடைத்துப் போய் விட்டது.

* * *

"கோமு! என்ன இது? சாப்பிடாமலேயே உட்கார்ந்துட்டே..." என்ற கணவரின் குரல் கேட்டுச் சுய நினைவுக்கு வந்தாள் அவள்.


"நம்முடைய பழைய சரித்திரத்தைப் புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்தேன்" என்று சொல்லியவண்ணம் வேகமாக எழுந்தாள் கோமளா.

திறமைசாலிகளின் உணவு



உலகில், ஒவ்வொரு நாட்டிலுமுள்ள சுறுசுறுப்பான ஆண்களும் பெண்களும் அதிகப்படியான தெம்பையும் திடத்தையும் தரக்கூடியது எது என்பதை நன்கு அறிந்திருக்கிறார்கள். அவர்கள் காட்லிவர் ஆயிலை— சுத்தமான ஸெவன்ஸீஸ் காட்லிவர் ஆயிலை, உட்கொள்ளுகிறார்கள். இயற்கை யளிக்கும் உயர்தரமான உணவு இது.

மார்பு சம்பந்தமான நோய்கள் வராமல் தடுப்பதிலும் மேற்படி நோய்களைக் குணப்படுத்துவதிலும் பெயர் போனது.



SevenSeaS

ஸெவன்ஸீஸ்

சுத்தமான காட்லிவர் ஆயில்




விவரங்களுக்கு :

கார் & கம்பெனி, லிமிடெட்

பெ.பெ.152	பெ.பெ.7814	பெ.பெ.1213
பம்பாய்	கல்கத்தா	மதராஸ்

K.Sa



நிரபராதி

சுகுமாரன்

"இளம் குற்றவாளிகள் பள்ளிக்கூட" வாசலைத் தாண்டித் தெருவுக்கு வரும்போது தான் ஆறரை மணி வண்டி, கடைசி ரயில் குலவணிகர் புரம் 'லெவல் கிராஸிங்'கைக் கடந்து கொண்டிருந்தது.

அன்று கடைசி வெள்ளிக் கிழமை. அந்த வண்டியைத் தவற விட்டு விட்டால் செந்தூரான் கோவில் நடைவாசல் திறப்பதைக் காணப் போய்ச் சேர முடியாது. கடைசி வெள்ளிக்கிழமை பன்னிருகையனின் தரிசனம் எனக்குத் தவறி விட்டால் அந்த மாதம் முழுவதுமே ஏதோ ஒரு பாரம் என் நெஞ்சை அழுத்திக் கொண்டே இருக்கும்.

தோளிலே கிடந்த துண்டைக் கையில் எடுத்துக் கொண்டு, வேஷ்டியை முழங்கால் வரை மடித்து விட்டுக் கொண்டு, தண்டவாளத்தின் நடுவே குறுக்கு வழியில் பாளையங் கோட்டை ஸ்டேஷனை நோக்கி ஓடினேன்.

ஸ்டேஷனுக்குப் பத்து கெஜ தூரம் சமீபம் வரும்போதுதான் வண்டியும் நகர ஆரம்பித்தது. நானும் தொடர்ந்து ஓடினேன். பிளாட்பாரத்தின் எல்லையை வண்டி கடப்பதற்குள் கடைசிப் பெட்டியை நெருங்கி விட்டேன்.

கைப்பிடியைப் பிடித்துக் கொண்டு வண்டியினுள் தாவும் போதுதான் படியில் இருந்த என் கால் நழுவி விட்டது. உலகத்துக்கும் நமக்கும் இனித் தொடர்பு கிடையாது என்ற எண்ணம் என் மனத்தில் தோன்றி மறைவதற்குள் யாரோ ஒரு ஆத்மா என்னை இழுத்து வண்டியினுள் தள்ளியது.

வண்டியினுள் ஏறிய சிறிது நேரத்துக்குள் என் படபடப்பு அடங்கியது. உயிரைக் காத்த மனிதருக்கு நன்றி கூறுவதற்காக அவர் முகத்தை ஏறெடுத்துப் பார்த்தேன். நான் காண்பது கனவா!

வாழ்க்கையில் நான் யாரைச் சந்திக்கக் கூடாது என்று கங்கணம் கட்டிக் கொண்டிருந்தேனோ, அதே நாராயணசாமிதான் என் எதிரே உட்கார்ந்து கொண்டிருந்தான்.

"ஏன் சார்! என்ன அவசரம்! பார்த்து ஏறக்கூடாதா! நிமிஷம் தவறி யிருந்தால் என்ன கதி ஆகியிருக்கும்!" நாராயணசாமி தான் உபதேசம் செய்ய ஆரம்பித்தான்.

"உங்கள் உதவிக்கு மிகவும் நன்றி சார்!" பேச்சைச் சுருக்கிக் கொண்டு அவனுக்கு எதிரே காலியாயிருந்த இடத்தில் அமர்ந்தேன்.

நாராயணசாமியால் என்னை அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை. என் முகத்தை நான் தாடி, மீசைக்குள் புதைத்து வைத்திருந்தேன்.

அவன் அருகே ஒரு யுவதி. அது அவன் மனைவியாகத்தான் இருக்க வேண்டும். அவன் மடியில் மூன்று வயதுப் பெண் குழந்தை ஒன்று உறங்கிக் கொண்டிருந்தது.

மனம் ஒரு குரங்கு. நினைத்த நேரத்தில் நினைத்த இடத்துக் கெல்லாம் தாவ ஆரம்பிக்கும்.


நாராயணசாமி கதைகளில் வருவது போலத் தோன்றி மறையும் நண்பன் அல்ல. வாழ்க்கை ஓடத்தில் நாங்கள் இருவரும் பின்னிப் பிணைந்தே பயணம் நடத்தினோம். என்னைவிட அவனுக்கு நான்கு வயது அதிகம்.

முதல் வகுப்பிலிருந்து பத்தாவது வகுப்பு வரையில் நானும் நாராயணசாமியும் ஒன்

றாகவேதான் படித்தோம். நாமக்கல் மலை உச்சியில் கூட ஒன்றாகவேதான் உருண்டு விளையாடினோம்.

நாராயணசாமியின் வாழ்க்கையில் அதிகமான நெளிவுகள் கிடையா. அவன் தகப்பனார் பெரிய மோட்டார் பட்டறை வைத்து நடத்திக் கொண்டிருந்தார். அவனும் அவருக்கு ஒரே மகன்.

ஆனால் என் நிலை அப்படி இல்லை. என்னை நம்பி ஒரு விதவைத் தாயார், ஏழு வயதுச் சகோதரி ஆகியவர்கள் இருந்தனர். தகப்பனார் சம்பாதித்து வைத்த சொத்து சுமாராக இருந்தது.



என் தங்கை லலிதாவும் தன் நிலைமையை அறிந்து தான் போலும் காலணா மிட்டாய்க்குக் கூட ஆசைப் பட்டது கிடையாது. அவள் உடம்பிலேயும் ஒரு பொட்டு நகை கிடையாது.

என் தங்கையின் வெறும் கழுத்தைப் பார்க்கும் பொழுதெல்லாம் என் நெஞ்சம் உருகும். என் மன அரிப்பை ஒரு சமயம் என் தாயாரிடம் துணிந்து வெளியிட்டேன்.

என் தாயார் பெட்டியில் அறுந்து பழசாகிக் கிடந்த பழைய சங்கிலி ஒன்றை என்னிடம் கொடுத்து, அதை அழித்துப் புது மாதிரியாகச் செய்யச் சொல்லிக் கொடுத்தாள்.

விதியின் விளையாட்டு இங்கேதான் ஆரம்பமாயிற்று. சங்கிலிகளில் எத்தனையோ விதம் இருக்க என் தங்கை எதற்காக அவல் சங்கிலியின் மீது ஆசைப்பட வேண்டும்!

அவல் சங்கிலி என் தங்கையின் கழுத்தில் ஊசலாடிய பிறகுதான் என்னுடைய மனம் நிம்மதியடைந்தது.

ஒரு நாள் காலை, பொழுது சரியாகக்கூடப் புலரவில்லை. நாராயணசாமி என் வீட்டு வாசல் கதவைப் பிளந்து போகும்படி தட்டினான். நான் படுக்கையை விட்டு அவசரமாக எழுந்து கதவைத் திறந்தேன்.

"டேய், சோம்பேறி! சீக்கிரம் முகத்தைக் கழுவிக் கொண்டு புறப்படு. தர்மபுரிக்குப் போக வேண்டும்" என்று வாசலில் நின்று கொண்டே உத்தரவு போட்டான்.

"தர்மபுரிக்கா? எதற்கு? இன்று வகுப்பு வேறு உண்டே!"—நான் திகைத்து நின்றேன்.

"கழுதை, சொன்னபடி கேள்! வகுப்புக்கு லீவு எழுதிப் போட்டாய்விட்டது. இன்னும் குறுக்குக் கேள்வி கேட்காமல் கிளம்பு" என்று என்னை அதிகாரத்துடன் மிரட்டினான்.

தர்மபுரியில் அவன் மாமா புது வீடு கட்டியிருந்தார். அதன் கிருகப் பிரவேச வைபவத்துக்குத்தான் நாராயணசாமி என்னையும் சேர்த்து இழுத்துக் கொண்டு போனான். அந்த மாமாவின் மகள் சாந்தியைத்தான் நாராயணசாமிக்குக் கல்யாணம் செய்து வைக்கப் போவதாகப் பேச்சுக்கள் பலமாக நடைபெற்றுக் கொண்டிருந்தன.

நாராயணசாமியின் வருங்கால மனைவி—என் அண்ணி, எங்காவது தென்படமாட்டாளா என்று என் கண்கள் துழாவின. ஆனால் அவள் நிழலைக்கூட நான் காண முடியவில்லை.

அதற்குப் பதிலாக நாராயணசாமியின் சின்ன மைத்துனி பாமா என்னிடமே ஒட்டிக்கொண்டிருந்தாள். அவளுக்கும் என் தங்கை லலிதாவின் வயதுதான் இருக்கும்.

கிருகப் பிரவேசம் முடிந்த மறுநாளே நான் நாமக்கல் திரும்பி விட்டேன். ஒரு வார காலம் சென்ற பிறகுதான் நாராயணசாமி ஊருக்குத் திரும்பி வந்தான்.

திடீரென்று அது நடந்தது. ஒரு நாள் மாலை என்னுடைய வீட்டினுள் போலீசார் நாலைந்து பேர் படையெடுத்து வந்தனர்.

"சம்பந்தம் என்பது யார்?" என்று அதிகாரத் தொனியில் கேட்டார் போலீஸ் படைக்குத் தலைமை தாங்கி வந்த 'ஏட்' ஐயா.

"ஏன், நான்தான்! என்ன வேண்டும்?" என்று நான் முன்னுக்கு வந்தேன்.

"நீதானா! உன்னுடைய வீட்டைச் சோதனை போடப் போகிறோம்" என்று சொல்லிக் கொண்டே என் பதிலைக் கூட எதிர்பார்க்காமல் வீட்டினுள் புகுந்து விட்டார்.



நானும் என் தாயாரும் திகைத்து நின்றோம். அப்பொழுதுதான் லலிதாவும் பள்ளிக்கூடம் முடிந்து, "அம்மா! இன்றைக்கு வகுப்பிலே நான்தான் முதல்!" என்று கூவிக்கொண்டே வீட்டினுள் ஓடி வந்தாள்.


ஓடிவந்து கொண்டிருந்த குழந்தையின் கையை முரட்டுத்தனமாக எட்டிப் பிடித்தார் ஏட் கான்ஸ்டேபிள்.

"ஏன், சார்! சின்னக் குழந்தை உங்களை என்ன செய்தது!" என்று கேட்டுக்கொண்டே போலீஸ்காரரை நெருங்கினேன்.

"சின்னக் குழந்தை என்ன செய்யும்! திருட்டு ராஸ்கல்! நீ திருடிக் கொண்டு வந்த சங்கிலியை மாத்திரம் போட்டுக் கொண்டு ஊர்வலம் வரும்!'

"திருட்டுச் சங்கிலியா!" — என் தலை சுழன்றது. "சார், உண்மையாகச் சொல்




தக்ஷிண ரயில்வே & இண்டக்ரல் கோச் பாக்டரி





வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப் படும் ரயில்வே இயந்திர சாதனங்களின்

காட்சிக் கூடம்

பெரம்பூர் காரேஜ் ஒர்க்ஸ் ரயில்வே ஸ்டேஷன் சமீபத்தில்

எல்லா வேலை நாட்களிலும் காலை 10 முதல் 1 மணி வரையிலும் மாலை 2 முதல் 5 மணி வரையிலும் சனிக்கிழமைகளில் 10 முதல் 1 மணி வரையிலும் பொதுமக்களின் பார்வைக்குத் திறந்து வைக்கப் படும். ஞாயிற்றுக்கிழமைகளிலும் மற்ற விடுமுறை நாட்களிலும் காட்சிக் கூடம் மூடப்படும்





பல பிரபல தொழில் பிரமுகர்கள் காட்சிக் கூடத்தைப் பார்வையிட்ட பின் அவர்கள் தெரிவித்த அபிப்பிராயங்களில் சிலவற்றைக் கீழே தருகிறோம்.

★ "சிறு தொழில்களில் ஈடுபட்டிருப்பவர்கள் எவ்விதம் ரயில்வேக்களுக்கு உதவலாம் என்பதை இக்காட்சி தெள்ளத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது."

★ "இந்திய வியாபாரிகள் இதைப் பார்த்து எப்படி இந்தியத் தொழில்களை அபிவிருத்தி செய்யலாம் என்று தெரிந்து கொண்டு அவைகளைக் கடைப்பிடிக்கட்டும்."

★ "நமது தொழில் முன்னேற்றத்துக்காக ஏற்படுத்தப்பட்ட இக்காட்சியைப் பார்த்து பரம திருப்தி அடைந்தேன்."

★ "நன்கு அமைக்கப்பட்ட பொருட்காட்சி."




★ "இக்காட்சிசாலையில் வைக்கப்பட்டுள்ள சில ரக அபூர்வமான சாமான்களை சிறு மூலதனத்துடன் நடத்தப்படும் தொழிற்சாலைகள் உற்பத்தி செய்யக்கூடும்."

★ "தொழிற்துறையிலுள்ள எல்லா பகுதியையும் ஒருங்கே காணுமாறு நன்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது."

★ "எங்களுக்கும் மற்றும் வருங்கால உற்பத்தியில் ஈடுபடக் கூடியவர்களுக்கும் எத்தகைய தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டியிருக்கும் என்பதை உங்கள் காட்சிசாலை மிகத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. வந்தனம்"

நீங்கள் இன்னும் இந்தக் காட்சிக் கூடத்தைப் பார்க்காவிடில் விரைவில் விஜயம் செய்து காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள 1,236 பொருள்களைப் பார்வையிடக் கேட்டுக்கொள்வதோடு, அவைகளில் எந்தப் பொருள்களை நீங்கள் உற்பத்தி செய்து ரெயில்வேக்களுக்கு சப்ளை செய்ய முடியும் என்பதையும் தீர்மானிக்கக் கோருகிறோம். காட்சிப் பொருள்களின் காட்லாக் காட்சிக் கூடத்தில் 0—12—0 விலைக்குக் கிடைக்கும்.

மேலும் விவரம் தெரிந்து கொள்ள விரும்பினால் காட்சிக் கூடத்தின் நிர்வாகிக்கு எழுதிக் கேளுங்கள். போன்: 61653

கண்ட்ரோலர் ஆப் ஸ்டோர்ஸ்,
தக்ஷிண ரயில்வே, சென்னை - 23


உங்களைக்
காப்பாற்றிக்
கொள்ளுங்கள்
பாலுட்ரின்
மலேரியாவைத்
தடுக்கிறது
ICI


கேஷ்ரஞ்சன்
தங்கள்
கூந்தலின்
நன்மையை
விரும்புவோர்
விரும்புவார்கள்

லுகிறேன். இந்த நகை எங்கம்மா நகையை அழித்து நாங்களே செய்ததுதான், சார். வேணுமானல் சங்கிலி செய்து கொடுத்த ஆசாரியைக் கூப்பிட்டுக் கேளுங்கள் !'' என்று நான் பதறிப் போய்க் கூறினேன்.

என் பதற்றம், என் தாயாரின் கதறல் எதுவுமே சட்டத்தின் பலத்தால் மனத்தை இரும்பாக்கிக் கொண்ட அந்த மனிதரை அசைக்கவில்லை.

லலியின் கழுத்தில் கிடந்த சங்கிலியைப் பலவந்தமாகக் கழற்றினர் ஒரு போலீஸ்காரர்.

நான் கைது செய்யப்பட்டேன். கைது செய்யப்பட்ட சில மணி நேரத்திற்குள் என்னைப் போலீசார் தர்மபுரிக்கு அனுப்பி வைத்தார்கள்.



பம்பாய் தமிழ்ச் சங்கப் பெண் அங்கத்தினர்கள் பொங்கல்—திருநாளன்று ''ஆண்டாள்'' என்னும் நாடகத்தை நடித்தனர். திரு டி.வி. ராமானுஜத்தின் குமாரி ஆண்டாளாக நடித்து ரசிகர்களின் பாராட்டுதலைப் பெற்ருள். நாடகத்தில் நடித்தவர்கள், சங்க நிர்வாகிகள் ஆகியவர்களுடன் நாடகத்துக்குத் தலைமை வகித்த திரு டி. கே. ஷண்முகம் அவர்களையும் படத்தில் காணலாம்.

தர்மபுரி போலீஸ் ஸ்டேஷனில் என் வரவை எதிர்பார்த்து நாராயணசாமியின் மாமாவும், சின்ன மைத்துனியும் நின்று கொண்டிருந்தார்கள். ஸ்டேஷனில் இருந்த சப் - இன்ஸ்பெக்டர் குறுக்கு விசாரணையை நடத்தினர்.

என் தங்கையின் சங்கிலி சப்-இன்ஸ்பெக்டர் மேஜையின்மீது கிடந்தது.

''ஏன் மிஸ்டர் பாலசுப்ரமண்யம், இந்தச் சங்கிலிதான் உங்களுடையதா என்று பாருங்கள்'' என்று கூறி மேஜைமீது கிடந்த சங்கிலியை எடுத்து நாராயணசாமியின் மாமாவிடம் கொடுத்தார் சப்-இன்ஸ்பெக்டர்.

''ஆமாம், சார். இதே சங்கிலிதான், இதே தான்'' என்று அழுத்திப் பேசினர்.

நாராயணசாமியின் மைத்துனியிடம் திரும்பி, ''ஏன் பாப்பா! பார்த்துச் சொல்லு. இந்த ஆள்தானே உங்கள் வீட்டுக் கிருகப் பிரவேசத்தன்று உன்னோடு விளையாடிக்கிட்டு இருந்தார் ?'' என்று சப் இன்ஸ்பெக்டர் என்னை நோக்கிக் கையைக் காண்பித்தார்.

குழந்தை ஆமாம் என்று தலையசைத்தது.

'அட கடவுளே ! நான் திருடனா !' என் மனம் வெடித்து விடும்போலிருந்தது.

நான் கைது செய்யப்பட்ட செய்தி கேள்விப்பட்டு நாராயணசாமி தர்மபுரிக்கு ஓடி வந்தான். அவனுக்கும் அவன் மாமாவுக்கும் பெரிய வாக்குவாதம் நடைபெற்றது.

காலம் கடந்து அவன் வந்து என்ன பயன் ! என்மீது வழக்குப் பதிவு செய்தாகி விட்டது. நான் சிறுவனாக இருந்ததால் என்னைப் பாளையங்கோட்டை இளம் குற்றவாளிகள் பள்ளிக்கு அனுப்பி வைத்தனர்.

நான் சிறைக்குச் செல்லுமுன் நாராயணசாமி என் தாயையும், தங்கையையும் அழைத்து வந்து காண்பித்தான். அதுதான் வாழ்க்கையில் அவர்களை நான் சந்திக்கும் கடைசிச் சந்திப்பாக இருக்குமென்று அப்போது நினைக்கவே இல்லை.

நான் படித்திருந்ததனல் இளம் குற்றவாளிகள் பள்ளியில் சற்றுக் கௌரவமாக நடத்தப்பட்டேன். மாணவனுகச் சிறை சென்ற நான் உபாத்தியாயராக உயர்த்தப்பட்டேன்.

ஆனாலும் என் மனம் நாமக்கல்லையே சுற்றி வந்துகொண்டிருந்தது.

தண்டனைக் காலம் என்னுடைய நன்னடத்தை காரணமாகக் குறைக்கப்பட்டது. விடுதலையானவுடன் ஊரை நோக்கி ஓடினேன்.

ஆனல் என் வீடு இருந்த இடத்தில் ஒரு பெரிய மாளிகை எழும்பியிருந்தது. என் குடும்பத்தைப் பற்றி விசாரித்தேன்.

''யாரை ஐயா, கேட்கிறீங்க ! சங்கிலி திருடி ஜெயிலுக்குப் போயிருக்கானே சம்பந்தம், அவன் குடும்பமா ! அவனோட அம்மா, அவன் ஜெயிலுக்குப் போன அடுத்த வருஷத்திலேயே மண்டையைப் போட்டு விட்டாள். பிறகு அந்தச் சின்னக்குழந்தை என்ன ஆச்சோ!'' என்றார் பக்கத்து வீட்டுக்காரர்.

'திருடன். சங்கிலித் திருடன் !' – எங்கு திரும்பினாலும் இதே வார்த்தைகள் தான்!

நாராயணசாமியைப் பார்க்க என் மனம் இடம் கொடுக்கவில்லை.

நாமக்கல்லில் இனி எனக்கு எந்த பந்தமும் இல்லை. மீண்டும் நான் பாளையங்கோட்டைக்குத் திரும்பி விட்டேன்.

ஏழு வருடங்கள் உருண்டு ஓடி விட்டன.

நடந்த காலச் சம்பவங்களை நினைத்தவுடன் என் கண்களில் கண்ணீர் தேங்கியது. ஸ்ரீவைகுண்டம் ஸ்டேஷனில் ரயில் ஒரு குலுங்குக் குலுங்கி நின்றது. நான் அடுத்த பெட்டியில் மாறி உட்கார நினைத்து எழுந்தேன்.

''ஏன் ஸார் ! உங்கள் சொந்த ஊர் எது !'' என்ருன் நாராயணசாமி.

''சொந்த ஊர் திருநெல்வேலி.''

''சேலம் ஜில்லா, நாமக்கல் ஆசாமி எப்படித் திருநெல்வேலிக்காரராக மாற முடியும் !''

''சேலம் ஜில்லாவா ! எனக்கா !''

நாராயணசாமி என்னை அடையாளம் கண்டு கொண்டானு! எப்படிக் கண்டு பிடித்தான்!

என் சந்தேகத்தையும் அவனே தீர்த்து வைத்தான். "மிஸ்டர்! உங்கள் வலது கையில் இருக்கும் வடு, நீங்கள் நாமக்கல் போர்டு ஸ்கூலில் எட்டாவது வகுப்பு படித்துக் கொண்டிருந்த போது ஹாக்கி விளையாட்டில் ஏற்பட்ட காயம்! சரிதானே!"

பெட்டியினுள் இருந்த கூட்டத்தையும் மறந்து, "நாராயணசாமி!" என்று கத்தினேன்.

"சம்பந்தம்!" என்று என்னை அவன் அணைத்துக் கொண்டு பக்கத்தில் உட்கார வைத்தான். வண்டி ஸ்ரீ வைகுண்டம் ஸ்டேஷனை விட்டு நகர ஆரம்பித்தது. நாராயணசாமிதான் முதலில் பேச்சை ஆரம்பித்தான்.

"டேய் சம்பந்தம்! சிறைத்தண்டனை முடித்ததும் எங்கே ஓடிவிட்டாய்! உன்னை நினைத்து லலி கண்கலங்காத நாளே கிடையாது."

"என்ன, லலி உன்னோடுதான் வசிக்கிறாளா!"

"என் வீட்டில் அவளுக்கென்ன வேலை! அவள் புருஷன் வீட்டில் இருக்கிறாள்!"

"என்னை மன்னித்து விடப்பா. நான்தான் லலிதா இருக்குமிடம் தெரியாமல் அலைந்தேன். உன்னைச் சந்திக்க என் நெஞ்சில் துணிவில்லை. எப்படியாயினும் நான் ஒரு திரு..." வார்த்தையை முடிக்காமலேயே முகத்தைத் தொங்க விட்டுக் கொண்டேன்.

"நீங்கள் திருடனு! யார் சொல்ல முடியும்! நீங்கள் நிரபராதி" என்று எங்கள் பேச்சில் குறுக்கிட்டாள் நாராயணசாமியின் மனைவி.

"நான் நிரபராதி என்று நிரூபணமாகி விட்டதா!" என் கண்கள் ஆனந்தக் கண்ணீரைச் சொரிந்தன.

"ஆமாம், சம்பந்தம். அடடே! இவளை உனக்கு அறிமுகம் செய்து வைக்கவில்லையே. இவள்தான் நம் வீட்டு ராணி. தர்மபுரி மாமா மகள் சாந்தி. இவளுடைய தம்பிதான், தான் செய்த குற்றத்துக்குப் பரிகாரமாக லலியைக் கல்யாணம் செய்து கொண்டு, அவள் கழுத்து ஒடிந்து விழுகிறமாதிரி நகை செய்து மாட்டி விட்டு அழகு பார்த்துக் கொண்டிருக்கிறான்" என்று விளக்கம் கொடுத்துக் கொண்டே சிரித்தான் நாராயணசாமி.

"குற்றத்துக்குப் பரிகாரமா! எனக்கு ஒன்றுமே விளங்க வில்லையே!"

"விளையாடியது போதும். சீக்கிரம் விஷயத்தைச் சொல்லுங்கள். அவர் பாவம் துடிக்கிறார்" என்று சிபார்சு செய்தாள் சாந்தி.

"சம்பந்தம்! என் மைத்துனன் பாலகோபால் தான் சங்கிலியைக் கழற்றி எங்காவது தொலைத்து விடுமென்று தன் பையிலேயே கழற்றி வைத்திருக்கிறான். கிருகப்பிரவேசம் முடிந்த மறுநாள் வீட்டில் ஏதோ காரணத்துக்காகச் சண்டை போட்டுக் கொண்டு போனவன், ஆறு வருஷங்களுக்குப் பிறகு பெரிய வியாபாரியாகத் திரும்பி வந்து சேர்ந்தான்" என்றான் நாராயணசாமி.

"ஒரு நாள் தற்செயலாக உன் பேச்சு வரும் பொழுதுதான் அவனுக்குத் தான் செய்த தவறு புரிந்திருக்கிறது. தான் செய்த தவறுக்காக மற்றொருவர் சிறைபுக நேர்ந்தது பற்றி மிக வருந்தினான். அதற்குப் பரிகாரம் தேடத்தான் என் வீட்டிலிருந்த உன் தங்கையை என்னைக் கேட்காமலேயே அவன் அக்காளோடு சேர்ந்து பேசிக் கல்யாணமும் செய்து கொண்டான்!"

நாராயணசாமி என் நெஞ்சில் பால் வார்த்து விட்டான். அப்பாடா! மனத்திலிருந்து எவ்வளவு பெரிய பாரம் கீழே இறங்கி விட்டது.

நான் திரும்பிப் பார்த்த போது சாந்தி, நாராயணசாமியின் காதில் ஏதோ ரகசியம் பேசிக் கொண்டிருந்தாள்.

"என்ன நாராயணசாமி! இருவர் ரகசிய மகாநாடு!" என்று சிரித்தேன்.

"சம்பந்தம், உனக்கு விலங்கு போடச் சொல்லுகிறாள் சாந்தி!"

"விலங்கா!"

"திருடன் என்று போலீஸ் ஸ்டேஷனில் தலையாட்டினுளே, பாமா, அவள் இப்பொழுது கன்னிப் பெண். கல்யாணம் செய்வதானுல் உங்களைத் தேடிக் கண்டு பிடித்துக் கல்யாணம் செய்து கொள்வது. இல்லாவிட்டால் கன்னியாகவே வாழ்க்கை நடத்துவது என்று சபதம் செய்து கொண்டிருக்கிறாள்!" என்றாள் சாந்தி.

"அடடடே! நீ அதிருஷ்டக்காரண்டா. பணக்கார வீட்டு மருமகப்பிள்ளை" என்று கூறிச் சிரித்தான் நாராயணசாமி.

கடற்கரையில் கோயில் கொண்டிருக்கும் முருகக் கடவுளின் தரிசனம் ஏழு வருஷ காலமாகத் தரிசித்ததை விட இன்றுதான் பூரணப் பொலிவோடு என் கண்களுக்குத் தெரிந்தது.

டி.கே.சி.யின் கடிதங்கள்

திருக்குற்றாலம்
16—5—45

கண்ணை மூடிக் கொண்டால் உன்னே தானே இருட்ட வேண்டும்: கதவை அடைத்தால் வீடு இருட்டுகிறதே ஒழிய வீதி இருட்டவா செய்கிறது. இல்லை. ஆகையால் கண்ணாஸ்பத்திரியில் ஒரு மாசமாவது போய் இருக்க வேண்டியதுதான். சிலருக்குக் கண்ணை மூடினுலும் இருட்டு, அதைவிடத் திறந்தால், இருட்டு. அவர்களுக்கு ஓரே ஆஸ்பத்திரிதான் - கீழ்ப்பாக்கம் ஆஸ்பத்திரி.

இங்கே காற்று வீசி வீசி அடிக்கிறது. சாயந்திரம் சிலவேளை மாலையில் மேகம் கவிகிறது. தூற்றல் லேசாய்ப் போடுகிறது - வரப்போகும் ஸீஸனுக்கு அச்சாரம் கொடுத்த மாதிரி. மற்றப்படி மழையில்லை, அருவியும் இல்லைதான். சரப்பசையே இல்லை - சில பள்ளிக்கூடத்து ஆசிரியர்களைப் போல!

டி. கே. சிதம்பரநாதன்



எல்லாவித மரச சாமான்களுக்கும்... உட்பூச்சுக்கும், வெளிப்பூச் சுக்கும்
எவ்வித சீதோஷ்ண ஸ்திதியாலும் பாதிக்கப் படாதது
ஷாலிமார்
ஷாலிமார்
பலவித வேலைகளுக் கேற்ற சிறந்த எனமல்
ஒரு கழுவக்கூடிய, சுவர்களுக் கேற்ற பெயின்டு
ஷாலிமார்
SHALIMAR PAINT, COLOUR & VARNISH CO., LTD.,
Post Box 136, Madras 1





"நான் இந்த ஊரிலுள்ள குப்பைச் சரக்கு கடைச் சரக்கு. நல்லது பொல்லாதது எல்லாம் அறிவேன். ஆனால் இந்த சுப்பம்மாள் மிட்டாய் என்கிறார்களே. அதன் ருசி தெரியவே யில்லை; அது எப்படி யிருக்கிறதோ பார்க்கவே சந்தர்ப்பம் இல்லை" என்றது ஈ. தன் மனைவிக்கு.

"ஆமாம் வீரனே! நானும் எத்தனையோ தடவை பார்த்தேன். எப்போதும் மூடியே வைக்கிறாள். அவள் மகன் விற்கப் போகிறானே அந்தப் பயலும் அப்படியே திறந்து வைக்கவே மாட்டேன் என்கிறான். கிட்டப்போனால் விசிறி எடுத்து வீசி விரட்டுகிறான்!" என்றது பெண் ஈ.

சுப்பம்மாள் ஒரு ஏழை விதவை. புருஷன் வியாபாரம் செய்தான். ஆனால் சம்பாதிப்பதற்கு முன் இறந்து விட்டான். சுப்பம்மாளும் மகனும் எப்படியோ கஷ்ட ஜீவனம் செய்து வந்தார்கள். ஒரு ரூபாய்க்குத் தேங்காயும் வெல்லமும் வாங்கி அதை வறுத்துப் பாகு செய்து மிட்டாய் வில்லைகளாகப் பண்ணுவாள் சுப்பம்மாள். மகன் தெருவில் கொண்டுபோய் விற்று வந்தான்.

இரண்டு ரூபாய்க்கு – ஒரு தட்டில் 128 வில்லைகள், பதினாறு பதினாறாக எட்டு வரிசை இருக்கும் – விற்று விடுவான். ஒரு ரூபாய் லாபம். அதைக் கொண்டு ஜீவனம் செய்வார்கள்.

போட்டியாக ஒருவன் அதே மிட்டாய் செய்ய ஆரம்பித்தான். ஆனால் எல்லாரும் சுப்பம்மா மிட்டாயைத்தான் வாங்குவார்கள். அவள் சுத்தமாகவும் நல்ல ஆசாரமாகவும் செய்வாள் என்பது ஊரார் நம்பிக்கை. குழந்தைகள் அவள் மிட்டாயைத் தான் விரும்புவார்கள். அது வாயில் நன்றாகத் தங்கிக் கரையும்.

* * *

ஊருக்கு ஒரு பெப்பர்மென்ட்டுக் கடை வந்தது. டப்பாக்கள் சீசாக்கள் நிறைய பெப்பர்மென்ட்டுகள். விலையும் குறைவு; எங்கிருந்தோ இந்தப் பண்டங்கள் வரும். கடைக்காரனும் வெகு சாமர்த்தியசாலி. சிரித்துக் கொண்டே பேசுவான்!

சுப்பம்மா மிட்டாயின் விற்பனை வரவரக் குறைந்து போச்சு. ஆறு மாதங்கள் இழுத்துப் பிடித்துப் பிறகு நின்றே போயிற்று.

ஐயோ, பாவம்! சுப்பம்மா தத்தளித்தாள். பையனை அந்தப் பெப்பர்மென்ட்டு கடையில் ஒரு வேலைக்காரனாக அமைத்தாள். கடைக்காரன் | மிரட்டுவான். பயந்து பயந்து அழகாயிருந்த பையனுடைய முகம்கூடக் கோணிப் போயிற்று.

"எனக்குக் கொஞ்சம் இடம் கொடுத்திருந்தால் இப்படி ஆயிருக்குமா?" என்று சொல்லி ஈ, பையன் காதில் உட்கார்ந்தது. அதை ஓட்டக்கூடப் பையனுக்கு இப்போது தோன்றவில்லை. எஜமானனையே பார்த்துக்

கொண்டு நின்று கொண்டிருப்பான். அவன் என்ன சொல்லுவானோ, அதைக் கவனிக்காமல் போனால் அதட்டுவான். அடிக்கவும் அடிப்பான் சில சமயம்.

"ஐயோ பாவம்! இவன் ரொம்ப இளைத்துப் போனான்" என்று சொல்லித் தட்டில் சில்லறையாக வைத்திருந்த பெப்பர்மென்ட்டு பேரில் உட்கார்ந்தது ஈ. ஒரு புழக்கடைக் குப்பையில் உட்கார்ந்து ரொம்ப நேரம் அதை அனுபவித்து விட்டு இப்போதுதான் பெப்பர்மென்ட்டுக் கடைக்கு வந்தது பெண் ஈயும். பெப்பர்மென்ட்டு ருசிக்கவில்லை.

"என்ன சொல்லுகிறாய்?" என்றது பெண் ஈ.

"இந்தப் பையன் கதியைப் பார்த்து, ஐயோ பாவம் என்றேன்" என்று சொல்லிற்று ஆண் ஈ.

"பரிதாபம் தான்! அதற்கு நாம் என்ன செய்ய முடியும்?" என்றது பெண் ஈ.

"இந்த பெப்பர்மென்ட்டு வந்து ஊரைக் கெடுத்தது. உனக்கு இது பிடிக்கிறதா?" என்றது ஆண் ஈ.

"இல்லை! வா போவோம், குப்பை வாரிப் போடும் இடத்துக்கு" என்றது பெண் ஈ.

* * *

சுப்பம்மாவின் தம்பி சென்னைப் பட்டணத்தில் ஒரு சின்ன வேலையிலிருந்தான். அவன் வந்து ஒரு நாள் மருமகனைப் பட்டணத்துக்குத் தன் கூட அழைத்துப் போனான். கடைக்காரரிடம் சொல்லி அனுமதி வாங்கிக் கொண்டு பையனும் போனான். "கடையிலில்லாத நாட்களுக்குச் சம்பளம் இல்லை" என்றார் கடைக்காரர்.

* * *

"அம்மா, சென்னைப் பட்டணத்தில் காப்பிக் கடைக்கு என்னை மாமா அழைத்துப் போனார். அங்கே எல்லாரும் காப்பி எச்சில் பண்ணிச் சாப்பிடுகிறார்கள் அம்மா!" என்றான் பையன்.

"ஐயோ! எல்லாரும் அப்படியே வாயில் வைத்து வாயில் வைத்துக் குடிக்கிறார்களா?" என்றாள் சுப்பம்மா.

"ஒரு பெரிய வாளியில் போட்டு அலசிவிட்டு வைக்கிறார்கள், அம்மா!" என்றான் பையன்.

பிறகு தாயார் கேள்விகள் கேட்டாள்.

"எல்லாம் ஒட்டுக்க போட்டு ஒரே ஜலத்தில் அலம்பி ஒரே துணியால் எல்லாம் துடைத்து வைக்கிறார்கள் அம்மா" என்றான்.

"அநியாயம்! ஊர் நாசமாகப் போகும். இப்படி அநாசாரமா பட்டணத்தில்?" என்றாள் தாயார்.

"அது என்ன சொல்லுகிறாய், போ அம்மா!"

"எல்லாரும் எல்லா ஜாதியாரும் சுருட்டு பிடிக்கிறார்கள்" என்றான் பையன்.

"எல்லாரும் சுருட்டைக் கையில் பிடிக்கிறது. எல்லாவற்றையும் அதே கையில் தீண்டுகிறது" என்றான்.

"அப்பனே! எனக்கு ஒன்றும் சொல்ல வேண்டாம். நீ மறுபடியும் பட்டணம் போக வேண்டாம்!" என்றாள்.

"அம்மா! மாமாவும் சிகரெட்டு பிடிக்கிறார். எச்சில் பண்ணித்தான் காப்பி குடிக்கிறார்" என்றான் பையன்.

சுப்பம்மா காதைப் பொத்திக் கொண்டு, "ஈசுவரி! மகாதேவா!" என்று எழுந்திருந்து போய் விட்டாள்.

இதெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த ஈ "கண்ணே! நாம் பட்டணம் போவோம். அதுதான் நமக்குச் சரியான ஊர்" என்றது பெண் ஈக்கு.

"அதற்கென்ன, ரயிலடிக்குப் போவோம். யார் மூட்டை பேரிலாவது உட்கார்ந்து போய்ச் சேருவோம். டிக்கட்டு கேட்க மாட்டார்கள்!" என்றது பெண் ஈ.




NEW YEAR SALE
FREE
ஒவ்வொரு கைக்கடிகாரத்துக்கும் ஒரு
ரேடியம் பாக்கெட் வாட்ச் இலவசம்.
கீழ்க்கண்ட 17 ஜுவல் கைக்கடிகாரங்கள் மிக நவீன டிசைன்களில் உள்ளன. சரியான நேரத்திற்கு உத்தரவாதம். ஒவ்வொரு கடிகாரத்திற்கும் 3 வருஷ உத்தரவாதம். பாக்கிங் தபால் செலவு ரூ. 2 தனி.
நெ. 51. சைஸ் 9½" ஷாக்ப்ரூப், தங்க நிறத்தில் எழும்பிய எண்கள், ரேடியம் புள்ளிகள், குரோம்ஸ்டீல்பேக் அல்லது ரோல்டு கோல்டு ஸ்டீல் பேக் 17 ஜுவல்ஸ் விலை ரூ. 35/-
நெ. 52. சைஸ் 9½" வாட்டர் ப்ரூப், தங்க நிறத்தில் எழும்பிய எண்கள், ரேடியம் புள்ளிகள், குரோம் ஸ்டீல் பேக் அல்லது ரோல்டு கோல்டு ஸ்டீல்பேக், 17 ஜுவல்ஸ் விலை ரூ. 40/-
DUKE WATCH CO.
P. B. No. 3306
BOMBAY-3
51
52


சிறு குழந்தையின் ஜலதோஷத்தை அதி சீக்கிரமாக நிவர்த்தி செய்கிறது!
இந்த நவீன ஔஷதம்
உங்களுடைய குழந்தையின் ஜலதோஷத்தைத் துரிதமாக நிவர்த்தி செய்யுங்கள்! படுக்கப்போகும் சமயத்தில் விக்ஸ் வேபோரப்பை மார்பின்மேலும் தொண்டையின்மேலும் தடவித் தேயுங்கள். மூச்சு விடுவதை லகுவாக்கும் தன்மையோடும், இருமலை நிறுத்தும் தன்மையோடும், உங்களுடைய குழந்தை இந்த மனோரம்மியமான தைலத்திலிருந்து எழும்பும் ஆவிகளைச் சுவாசிக்கிறது. அதே சமயத்தில் வேபோரப் சருமத்தின் வழியாக உட்சென்று வேலை செய்து மார்பிலுள்ள அடைசலையும் வலியையும் அகற்றுகிறது. இந்த இரு-வித வேலை ஜலதோஷத்தை அநேகமாக ஒரே இரவில் அகற்றுகிறது!
1. மருந்து ஆவிகள் உள்ளே இழுக்கப்படுகின்றன.
2. பற்றைப் போல் மார்புக்கு உஷ்ணம் அளிக்கிறது.
விக்ஸ்
வேபோரப்
புதிய சிறிய சைஸ்! புதிய குறைந்த விலை!
VICKS
'விக்ஸ்வேபோரப்' ஒரு டிரேட் மார்க்.
NAS



தூங்கிக்கொண்டிருந்த ரமணி கண் திறந்து பார்த்த போதுதான் சிற்சபேசன், காமாட்சி அம்மாள், மாலதி மூவரும் மண்டபத்தில் நிற்பது தெரிந்தது. மண்டபத்தில் விற்ற பொம்மைகளை வாங்கி மாலதி கை நிறைய வைத்துக் கொண்டிருந்தாள். சிற்சபேசன், 'இன்னும் கார் வரவில்லையே?' என்று கூறிக் கொண்டிருந்தார்.

சிறிது நேரத்தில் கார் வந்து விட்டது. உடனே அவர்கள் வேகமாகப் போய்க் காரிலே ஏறினார்கள். ஏறும்போது அவர்கள் மண்டபத்திலே மறந்து வைத்து விட்டுப் போன புடவைப் பொட்டணத்தைத் தான் ரமணி எடுத்துக்கொண்டு காரைப் பின் தொடர்ந்து ஓடினான்; வழியில் போலீஸ்காரரிடம் அகப்பட்டுக் கொண்டான்; கடைசியில், சிற்சபேசனால் காப்பாற்றப்பட்டான்.

31. ரமணியின் கடிதம்

ரமணி தனது வரலாறு முழுவதையும் சிற்சபேசனிடமும் காமாட்சி அம்மாளிடமும் கூறி விட்டு, "நான் நாடக சபாவில் பட்டுத் துணியைத் திருடியதாக முதலாளி குற்றம் சாட்டினார். இங்கே, நான் பட்டுப் புடவையைத் திருடியதாகப் போலீஸ்காரர் குற்றம் சாட்டினார். அதனால், 'பட்டு' என்றாலே எனக்கு மிகவும் பயமாகத்தான் இருக்கிறது" என்றான்.

"பயப்படாதே! நாங்கள் இங்கு நாலைந்து நாட்கள் இருப்போம். அது வரை நீயும் இங்கேயே இருக்கலாம்" என்று கூறி அங்கிருந்த உறவினர்களிடமும் ரமணியைப் பற்றிக் கூறினார் சிற்சபேசன். அவர்களும் அவன்மேல் இரக்கப்பட்டார்கள்.

ஒன்றிரண்டு நாட்களிலே அவன் எல்லோருடைய உள்ளத்தையும் கவர்ந்து விட்டான். மாலதியிடத்திலே அவன் மிகவும் அன்பாக இருந்தான். மாலதியும் 'அண்ணா, அண்ணா' என்று அவனை விட்டுப் பிரியாமல் எப்போதும் கூடவே இருந்தாள். ரமணியுடைய அன்பையும், நல்ல குணத்தையும் கண்ட சிற்சபேசனும், காமாட்சி அம்மாளும் மூன்றாவது நாளே ஒரு முடிவுக்கு வந்து விட்டார்கள்.

சிற்சபேசன் காமாட்சி அம்மாளிடம், "இந்த ரமணி எவ்வளவு நல்லவனாயிருக்கிறான்! மாலதியிடத்திலே எவ்வளவு அன்பாயிருக்கிறான்! இவனைப் போல் ஒரு நல்ல பையன் கிடைப்பதே அபூர்வம். ஆகையால், இவனையும் நாம் பர்மாவுக்கு அழைத்துக் கொண்டு போனால் நமக்கும் உதவியாயிருக்கும்; இவனுக்கும் அனாதை என்ற எண்ணமில்லாமல் இருக்கும். நமது ஊர்போலப் பர்மாவிலே இருக்க முடியுமா? உதவி ஒத்தாசைக்கு யாராவது வேண்டும். ரமணி சிறுவனாயிருப்பதால், பர்மா பாஷையைச் சுலபமாகக் கற்றுக் கொள்வான். வெளியிலே தெருவிலே போய் வர உதவியாயிருப்பான். மாலதிக்கும் இவன் இருந்தால் சந்தோஷமாய்ப் பொழுது போகும். ஆகையாலே ரமணிக்கும் ஒரு 'பாஸ் போர்ட்'டுக்கு ஏற்பாடு செய்து விடலாம்" என்றார்.

காமாட்சி அம்மாளுக்கும் அது நல்ல யோசனையாகத் தோன்றியது. "ஆமாம், அதுதான் சரி. அப்படியே செய்யுங்கள். ரமணியுடைய தங்கமான குணமும், மரியாதையான நடத்தையும் எனக்கு ரொம்பப் பிடித்திருக்கின்றன" என்றாள் காமாட்சி அம்மாள். ரமணியிடம் இந்த விஷயத்தைச் சொன்னதும், அவனுக்கு ஒரே ஆனந்தமாயிருந்தது. 'சரி' என்று தலையை ஆட்டினான்.

நாலாம் நாள் அவர்கள் ரமணியை அழைத்துக் கொண்டு திருச்சிக்குப் புறப்பட்டார்கள். அங்கே சிற்சபேசனின் சித்தப்பா இருக்கிறார். அவரைப் பார்த்து

நாட்டிய கலா சிகாமணி

பரத நாட்டியக் கலைக்கு ஊக்கம் அளித்தவர்களில் ஸ்ரீமதி மிருணாளினி ஸாராபாய் அவர்களையும் குறிப்பிட வேண்டும். அவர் தாமே பரத நாட்டியக் கலையைப் பயின்று பல அரங்குகளில் நேர்த்தியாக ஆடி ரஸிகர்களின் பாராட்டைப் பெற்றிருக்கிறார். அத்துடன் வட நாட்டிலும், உலக நாடுகளிலும் சுற்றுப் பிரயாணம் செய்து பரத நாட்டியத்தைப் பல அரங்குகளில் ஆடிக் காண்பித்து பரத கலையின் சிறப்பை உலகம் அறியச் செய்திருக்கிறார். சமீபத்தில் சென்னையில் நடைபெற்ற தென்னிந்திய சங்கீத சபையின் 23-வது மகாநாட்டில் ஸ்ரீமதி மிருணாளினிக்கு "நாட்டிய கலா சிகாமணி" என்ற பட்டம் வழங்கப் பெற்றது.



சென்னையில் ஸ்ரீமதி மிருணாளினி ஸாராபாயின் நாட்டிய நிகழ்ச்சிகள் சமீபத்தில் நடைபெற்றன. அவற்றை ரஸிகர்கள் பெருவாரியாகக் கண்டு களித்தார்கள். அவரது கலைத் தொண்டு சிறப்பதாக!

விட்டு மறுநாள் காலையில் மதுரைக்குத் திரும்பினார்கள். திருச்சியில் ஒரு நாள் தங்கி யிருந்தபோதுதான் ரமணி மதுரநாயகத்துக்கு ஒரு கடிதம் எழுதினான். ஆனால், அதில் அவன் விலாசம் எழுதவில்லை. அந்தக் கடிதத்திலிருந்த தபால் முத்திரையைப் பார்த்துவிட்டுத் தான் ரமணி திருச்சியில் இருப்பதாக மதுரநாயகம் தீர்மானித்து விட்டார்!

மதுரைக்கு வந்த பிறகு, ரமணிக்கு நல்ல நல்ல உடைகளை யெல்லாம் வாங்கிக் கொடுத்தார் சிற்சபேசன். அத்துடன் ரமணிக்கு வேண்டிய கதைப் புத்தகங்களை யெல்லாம் தாராளமாக வாங்கிக் கொள்ளச் சொன்னார். ரமணி கதைப் புத்தகங்களைக் கருத்தோடு படித்துமாலதிக்கு எடுத்துச்சொல்வான். சில சமயம் அவன் கதை சொல்வதை மறைந்திருந்து சிற்சபேசனும் காமாட்சியம்மாளும்கூடக் கேட்டு மிகவும் மகிழ்ச்சி அடைவார்கள். அப்போதெல்லாம் காமாட்சி அம்மாள், "கேட்டீர்களா ரமணி கதை சொல்வதை! மாலதிக்குப் பாட்டியிருந்தால் கதை சொல்லுவாள். அவள்தான் இல்லையே! ஆனாலும் அந்தக் குறை தெரியாதபடி ரமணி எவ்வளவு அன்பாய், அழகாய்க் கதை சொல்கிறான்!" என்பாள்.

"ஆமாம்! மாலதிக்கு ரமணி அண்ணனைப் போல இருக்கிறான் என்றாயே, இப்போது பார்த்தாயா? பாட்டியாகவும் இருக்கிறான்!" என்று சொல்லிச் சிரிப்பார் சிற்சபேசன்.

இதற்கிடையில் ரமணியைப் பர்மாவுக்கு அழைத்துச் செல்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளையும் செய்தார். இன்னும் இரண்டு மூன்று மாதங்களில் பர்மாவுக்குப் புறப்படப் போவதாக ரமணி தெரிந்து கொண்டான். உடனே, மதுரநாயகத்துக்கு ஒரு கடிதம் எழுத வேண்டும் என்று ஆசைப்பட்டான். சிற்சபேசனிடம் ஒரு கார்டு வாங்கி அதில் சுருக்கமாக எழுதினான். பர்மா போவதைப் பற்றி எழுதினால், அவர் தடுத்து விடுவாரோ என்ற பயம்! அதனால் "நான் மதுரையில் சுகமாக இருக்கிறேன். தங்களைப்போலவே சிற்சபேசன் என்பவர் என்னை அன்பாக ஆதரித்து வருகிறார். தங்கள் கைப்பட ஒரு கடிதம் எழுதினால் எனக்கு ஆறுதலாக இருக்கும். அம்மாளுக்கும் சபா முதலாளிக்கும் எனது வணக்கம்" என்று எழுதி, தன் மதுரை விலாசத்தையும் அதில் கொடுத்திருந்தான்.

அந்தக் கடிதத்தைப் பார்த்ததும், மதுரநாயகம் மகிழ்ச்சி அடைவார்; உடனே பதில் போடுவார் என்று ரமணி எதிர்பார்த்தான். ஆனால், ஒரு வாரமாகியும் பதில் வரவில்லை. திரும்பவும் ஒரு கார்டு போட்டான். அதற்கும் பதில் இல்லை. பிறகு இரண்டு மூன்று கார்டுகள் எழுதியும் பதிலே இல்லை. ரமணிக்கு மிகவும் வருத்தமா யிருந்தது. 'சரிதான், அவரும் நம்மைத் திருடன் என்றே நினைத்து விட்டார் போலிருக்கிறது. அதனால்தான் பதில் போடவில்லை. ஐயோ! மதுரநாயகம் கூடவா என்னை அப்படி நினைக்க வேண்டும்!' என்று நினைத்து மனம் கலங்கினான்.

ஆனால், மதுரநாயகமா அப்படி நினைப்பார்? அவன் எழுதிய கடிதங்கள் அவரிடம் போய்ச் சேர்ந்திருந்தால் தானே அவர் பதில் எழுதுவார்? ஆனால், ஒரு கடிதம் கூடப் போய்ச் சேரவில்லையே! ஏன், அவன் சரியான விலாசம் எழுதவில்லையா? சரியாகத்தான் விலாசம் எழுதி யிருந்தான். அப்படி யிருந்தும், அவரது கைக்குக் கிடைக்கவில்லை! (தொடரும்)

மார்கோ சோப்



இரு முக்கிய வேலைகளை செய்கிறது-



சுத்தமாக்குவது சமனமூட்டுவது

மார்கோ சோப் சாஸ்திரீக முறையில் வேப்பெண்ணெயிலிருந்து தயாரிக்கப்படுகிறது. சருமத்தை சுத்தமாக்கி ஆரோக்யம் தரும் அதன் சக்திவாய்ந்த குணங்களைத் தவிர, நுட்பமான, இன்பகரமான வாசனை யூட்டப்பெறுவதால், இந்த சோப்பைத் தேயத்து ஸ்நானம் செய்தவுடன், காலை வேளைக்கே உரிய ஒரு புதுமை யுணர்ச்சி ஏற்படுகிறது.

மார்கோ சோப்



கல்கத்தா கெமிகல்
தயாரிப்பு

தலைமை ஆபீஸ்:
35, பண்டிட்யா ரோடு, கல்கத்தா-29
தென் இந்திய கிளை ஆபீஸ்:
5/149, பிராட்வே, சென்னை - 1

CCX-2 TM



44. கனவு பலித்ததடி!

சோமு

"தன்னம்பிக்கை எவனுக்கு இல்லையோ, அவனுக்குப் பிறரிடத்திலும் நம்பிக்கை இராது. தன் திறமையில் தனக்கு நம்பிக்கை யிருப்பவனுக்குப் பிறரிடத்திலும் நம்பிக்கை இருக்கும். இது தான் நுட்பமான மனத்தத்துவம், கல்யாணி! இது வரை இரத்த வேகத்தினால் என்னுடைய நிலைமை அப்படி யிருந்தது. இது வரை வீண் சந்தேகங்களினால் உன்னுடைய நிலைமையும் அப்படியே தான் இருந்தது. இப்பொழுது நம் இருவருக்குமே தன்னம்பிக்கை ஏற்பட்டு விட்டது. எனவே ஒருவரை ஒருவர் நம்பவும் இனிமேல் நம்மால் முடியும்."

இப்படி ரவீந்திரன் சொன்னபோது, வெளியே கேட்ட கூக்குரல் இன்னும் சமீபத்திலே கேட்டது.

ரவீந்திரன் எழுந்து நின்று கொண்டே சொல்லுவான்: "கல்யாணி! வெளியே கூக்குரல் கேட்கிறது. அகவல் மகனுக்கு ஆவேசம் வந்து ஆடுகிறான் என்று நினைக்கிறேன். நீ உள்ளே, சமையல் அறைக்குள்ளே போய் உட்கார்ந்து கொள், நான் அகவல் மகனை உள்ளே வராமல் பார்த்துக் கொள்கிறேன். இல்லையென்றால் உன்னைப் பார்த்ததும் அவன் இன்னும் உற்சாகம் அதிகரித்து விடிய விடியக் குறி சொல்லிக் கொண்டேயிருந்து விடுவான்!"

இவ்வாறு சொல்லி ரவீந்திரன் கல்யாணியை உள் அறைக்கு அனுப்பிவிட்டுக் குடிசையின் கதவைத் திறந்தும் திறவாமலும் நிறுத்திவிட்டு வந்து உட்கார்ந்தான்.

வெளியே குடிசையின் திண்ணையில் இலஞ்சிச் சாமியார் உட்கார்ந்திருந்ததைப் பார்த்ததும் அகவல் மகன் தன்னுடைய குறியின் "சுருதி"யை இறக்கிக் கொண்டாற் போலத் தோன்றிற்று. ஆவேசம் அடங்கிக் கொஞ்சம் நிதானத்தோடு அவன் பாட ஆரம்பித்தான். முன்னர் ஒருநாள் குறி சொல்லுவதாக ஆவேசம் வந்து பாடினான் அல்லவா, அதே பாட்டின் வரிகளையே பாடினான்; ஆனால் இப்படி நடக்கும் அப்படி நடக்கும் என்று

ஒரு காலத்தில் சொன்னதை இப்படி நடந்தது அப்படி நடந்தது என்று, தான் குறி சொன்னபடி சம்பவங்கள் நடந்ததாகச் சொல்லிக் கொண்டான் :—

ஊரான ஊர்விட்டு
    ஒருத்தன் இங்கே வந்தானும்
பேரான சீமைவிட்டு
    ஒருத்தன் இங்கே வந்தானும்
கட்டான ஆண்பிள்ளையும்
    கண்மணியாம் பெண்பிள்ளையும்
தீட்டான வார்த்தையிலே
    திசைமாறி நின்றிட்டார்
ஆனாலும் இந்தமலை
    அருமையான மலையல்லோ
போனாலும் வந்தாலும்
    புண்ணியந்தான் சேருமல்லோ!
ஆகையினாலே—
சொக்கி குடிதனிலே
    சோதனைகள் நடவாமல்
பக்கம் இருந்திட்டான்
    பாங்கான முருகனுமே!

இந்தப் பாட்டை அவன் பாடிக் கொண்டிருக்கும் போதே இலஞ்சிச் சாமியார் அவனைத் தனியே ஆலமரத்துக்குப் பக்கம் அழைத்துக் கொண்டு சென்று விட்டார் என்று தெரிந்தது. ஏனென்றால், ரவீந்திரன் செவிகளில் அந்தப் பாடல் நலிந்து கேட்க ஆரம்பித்தது. படிப்படியாக ஓசை தேய்ந்து கொஞ்ச நேரத்திற்கு எல்லாம் பாட்டு தூரத்திலே சென்று நலிந்து விட்டது.

கல்யாணி அம்மாளுக்கு மனம் கலகலப்பாக இருந்தது. ஆனாலும் படுக்கையிலே படுத்தால் உறக்கம் வரவில்லை.

'மனத்தினுடைய காரியந்தான் எத்தனை விசித்திரமாக இருக்கிறது. பூரணமாக சோகம் ஏற்பட்டாலும் உறக்கம் வர



வில்லை. சந்தோஷப்படும்படி ஒரு சம்பவம் நடந்தாலும் உறக்கம் வருகிறதில்லை! என்ன வேடிக்கை!' — இவ்வாறு நினைத்தான் கல்யாணி.

நீண்ட நாளைக்கு முன்னால் கல்யாணி ஒரு கனவு கண்டான் அல்லவா? "புள்ளி மானோ, புலியோ" என்று சந்தேகித்தான் அல்லவா? அந்தக் கனவின் பொருள் இப்பொழுது பூரணமாகத் தெரியவில்லையென்றாலும் ஏதேதோ யூகித்துப் பார்த்தான். 'தான் சந்திரிகாவை ஒரு புலி யென்று தப்பாக நினைத்ததும் பிறகு அது புலியில்லை புள்ளி மான்தான் என்று தெளிவடைந்ததுந்தான் அந்தக் கனவின் அர்த்தமாக இருக்கக் கூடுமோ?' என்று எண்ணினான். ஆனாலும் சரியாகத் தெரியவில்லை. 'கனவுகளுக்கெல்லாம் இத்தனை தூரம் பொருள் இருக்குமா? இராது' என்று ஒரு நினைப்பு உடனே எழுந்தது. 'அப்படியானால் இப்பொழுது இந்தக் குறிகாரி ஏதேதோ சொன்னானே? அது மட்டும் எப்படிச் சரியாக இருக்க முடியும்? ஏற்கனவே இப்படி ஒரு குறி சொன்னானா இவன்? பின் எதற்கு இந்தப் பாட்டை இங்கே குடிசை வாசலுக்குவந்து பாடிவிட்டுப் போகிறான்? ஒருவேளை இந்தக் கிழவிதான் சந்திரிகாவைத் தூக்கிப் போன கிழவியாக இருக்குமோ? வரலாறு முழுதும் தெரிந்தவளாக இருக்குமோ?'—இப்படி ஒரு எண்ணம்! அடுத்த விநாடி 'சே! அப்படி இராது! எங்கேயோ பிச்சையெடுத்த கிழவி பயந்து போய் வேறு எங்கேயாவது ஓடி மறைந்திருப்பாள்! அவளுக்கெல்லாம் இத்தனை முக்கியம் கொடுத்து யோசிக்க வேண்டுமா?'—இந்த மாதிரி ஒரு எண்ணம். இப்படியாக இரவு முழுதும் கல்யாணி அம்மான் தன்னுடைய தூக்கத்தைக் கெடுத்துக்கொண்டான்!



அதே இரவில் சந்திரிகாவும் திருச்சியிலே உறக்கமின்றிப் புரண்டு புரண்டு படுத்துக்கொண்டிருந்தாள். அன்று மாலையிலேதான் டாக்டர் சுரேஷ் வந்து அவர்களிடம் ஒரு முக்கியமான அறிவிப்பைச் சொல்லிப் போனார்.

"நாளைக் காலையில் ராமநாதன் இங்கே வருகிறார். நாளை மறுநாள் நாம் அனைவரும் சொக்கிகுடிக்குப் புறப்படுகிறோம். அனைவரும் என்றால், சந்திரிகா, சாவித்திரி அம்மாள், அப்புலிங்கம், அவனுடைய தகப்பனார், தாயார், உஸ்தாத் மீரான், நாகரத்தினம், அவனுடைய குடும்பத்தார், பகோரான், மஜீத், இவர்களோடு ஒருவேளை டட் அவுஸ் குடும்பத்தாரும்! நமக்கென்றே ரயில்வேக்காரனிடம் சொல்லி ஒரு 'சொக்கிகுடி

ஸ்பெஷலே' விடச் சொல்லலாம் போலிருக்கிறது! என்ன, சந்திரிகா, சாவித்திரி அம்மாள்! உங்கள் இருவரையுந்தான் கேட்கிறேன்!"

இவ்வாறு சொன்ன போது, சாவித்திரி வாயெல்லாம் பல்லாகச் சிரித்தாள்.

அது சந்திரிகாவுக்கு அப்படியே கண் முன் வந்து கொண்டிருந்தது.

அன்றொரு இரவில் பம்பாயிலே தான் ஒரு கனவு கண்டாள் அல்லவா? சந்திரனிலே தான் தவழ்ந்தது போலவும், யாரோ தன்னைத் தொடுவதற்கு வந்தது போலவும் இருந்ததே! பிறகு பம்பாயிலிருந்து ரயில் வண்டியில் வரும் போது தான் ஏதோ ஒரு கயிற்றில் நடனம் ஆடுவது போலவும், தன்னுடைய நடனத்துக்கு ரவீந்திரன் புல்லாங்குழல் வாசிப்பது போலவும், பிறகு யாரோ வேறொரு கை அந்தப் புல்லாங்குழலைப் பிடிக்க வருவது போலவும் எல்லாம் கனவிலே தெரிந்ததே! அதெல்லாம் உண்மையாக நடக்கப் போகிறதா?

சந்திரிகா யோசித்தாள்:

'டாக்டர் சுரேஷ் எந்த ஒரு விஷயத்தையும் தீர யோசித்து ஆழ்ந்து ஆராய்ந்து தான் முடிவு செய்கிறார். சந்தேகமில்லை. ஆகையினால் தன் வாழ்க்கையை அவர் எப்படி வகுத்தாலும் அது சரியாகத்தான் இருக்கும். எந்தக் கயிற்று நடனமாடினாலும், கைப்பிடிக்கு உதவுகிற குடை அவர் தான்! தவிரவும் தன்னுடைய குடும்பத்துக்கும் அவருக்கும் உள்ள தொடர்பு இப்பொழுது நன்றாகத் தெரிந்து போய் விட்டது. ஆகையினால் தன் கல்யாணத்தை முடிவு செய்ய அவருக்கு அதிகாரமே இருக்கிறது. ஆனாலும் இவர் ஏன் விஷயங்களை மூடு மந்திரமாக வைக்கிறார்?'

இப்படிப் பல யோசனைகளிலே புரண்டு கொண்டிருந்தாள் சந்திரிகா.

*　　　*　　　*

இரவு நீங்கி சூரியோதயம் ஆன போது பொதிகைமலை பொன்மயமாகக் காட்சி தந்தது. தங்கத்திலே மரகதக் கற்களையும், சிவப்பு, நீலம், கோமேதகம், வைடூரியம், ஆகிய ரத்தினக் கற்களையும் வைத்துப் பதித்தது போல அந்தப் பொன் மலையின் மேனியிலே வர்ண விசித்திரமான மலர்கள் பூத்துக் குலுங்கிக் கொண்டிருந்தன. பர்வத குமாரிக்கு முத்து மாலைகள் அணிவித்தது போல, தூரத்திலிருந்து பார்த்தால் பொட்டுப் பொட்டான அருவிகள் மாலை மாலையாக மின்னிக் கொண்டு தொங்கின! உதய சூரியனுக்குப் பூபாளம் பாடுகிற காலைப் பறவைகளின் ஒலியும், நீரோடைகளின் சலசலப்பும், வனத்துக்குள்ளே கேட்கிற ஒரு 'ஙொய்' என்ற ஓசையும் அந்த வனாந்திரக் காற்றிலே விம்மின.

இந்த ரம்யமான வேளையில்தான் மலைப் பாதையிலே பண்டாரங்களின் கூட்டம், சாரிசாரியாக எறும்புக் கூட்டத்தைப் போலச் சென்று கொண்டிருந்தது.

"என்ன சட்டிப் பரதேசி! திரும்பிக் கூடப் பார்க்காமல் நடக்குதே! அடாடா கட்டையா நடக்குது! கமன ஓடியில்லே அப்படி நடக்குது!" என்று சொல்லிக் கொண்டே சட்டிப் பரதேசியின் நடைக்குத் தானும் ஈடுகட்ட முயன்றது பழனிப் பண்டாரம். பின்னால் வந்த தென்காசிச் சாமி இந்த நடை வேகப் போட்டியிலே தானும் கலந்து கொள்ள எண்ணிப் பேச்சிலே கலந்து கொள்ள வந்தது:

"பழனிப் பண்டாரம், என்ன சொல்லுது அந்தக் கட்டை! கமன ஓடி நடக்குது என்று சொல்லுது! தப்பு! தப்பு! கமன ஓடி நடப்பிக்குது என்று சொல்லட்டும் சாமி! எந்தப் பிழை செய்தாலும் இலக்கணப் பிழை செய்யக் கூடாது சாமி! அதிலும் நம்முடைய சட்டிப் பரதேசி இலக்கண இலக்கியம் படிச்ச பரதேசி யாக்கும்! ஜாக்கிரதை!"

இப்படிப் பேசியதும், முன்னால் வேகமாக நடந்து சென்று கொண்டிருந்த சட்டிப் பரதேசிக்கு உச்சி குளிர்ந்து விட்டது. நடையின் வேகத்தைத் தளர்த்தியது!

"என்ன சொல்லிற்று தென்காசி! இலக்கண இலக்கியமா! இந்தக் கட்டையினுடைய படிப்பெல்லாம் ஒரு படிப்பா சாமி! இலஞ்சிச் சாமிக்கு உறை போடக் காணாதே இந்தக் கட்டை! அடாடா! அதோட படிப்பு யாருக்கு வரும்? அதிலேயும் அது இங்கிலீசிலே பேச ஆரம்பிச்சிட்டு தான்னா ஒரு வார்த்தை புரியுமா இந்தச் சடலங்களுக்கு! பேச்சுன்னா அதுதான் பேச்சு! அடாடா! முருகா! ஷண்முகா! ஞான பண்டிதா!"

இவ்வாறு சொல்லிற்று சட்டி. உடனே தென்காசி அதைத் தொடர்ந்தது.

"இலஞ்சிக் கட்டைதானே! அது உறைச்ச கட்டை சாமி! உறைச்ச கட்டை!"

பழனிப் பண்டாரம் கையைச் சுடக்குப் போட்டுக் கொண்டே சொல்லிற்று: "உறைச்ச கட்டையா! ஹூம் உறைச்ச சந்தனக் கட்டை சாமி! சந்தனக் கட்டை! இந்தக் கட்டையெல்லாம் என்ன கட்டை! வெறும் கட்டை! விறகுக் கட்டை! இன்றோ நாளையோ எரியக் கூடிய கட்டை!"

"என்ன சொல்லுது தென்காசி! இன்னொரு தரம் அப்படிச் சொல்லட்டும்' தெரி


சூப்பர்
இந்தியா
டயர்களையே
கேட்டு
வாங்குங்கள்
"டயர்களில் மிகச் சிறந்தவை"

யும் சேதி! கட்டைகள் எல்லாம் எத்தனை மங்களமான ஒரு காரியத்துக்காகச் சொக்கி குடிக்குப் போகுது! அதை மறந்துட்டு என்ன வார்த்தை சொல்லுது அந்தக் கட்டை! சடலம் எல்லாம் இப்போ நேரே உக்கிராணப் பிறையிலே உள்ள சமையல் அடுப்புக்குப் போகிற மாதிரியாகப் பேசுதே! கமன ஓடி அதிகமாகப் போச்சு போலிருக்கு! அப்படித்தானே?" என்று ஒரு அதட்டல் போட்டது சட்டிப் பரதேசி. தென்காசிச் சாமி இப்பொழுது என்ன பதில் பேசுவது என்று தயங்கியது. தயங்கிக் கொண்டே கீழே பார்த்தது. இன்னொரு கோஷ்டி அதே மலைப் பாதையில் நடந்து வந்து கொண்டிருந்தது தெரிந்தது. அதுவும் ஒரு பண்டாரக் கோஷ்டிதான். ஆனால் வெறும் கோஷ்டியில்லை. ஒவ்வொன்றும் ஒரு அன்னக் காவடியைத் தோளின்மேல் தூக்கிச் சுமந்துகொண்டு வந்தது!

"என்ன சட்டிச் சாமி! இந்த மாதிரிக் கோபப் படலாமா! கீழே திரும்பிப் பார்க்கட்டும்! எத்தனை விறகுக் கட்டைகள் தலைக்கு ஒரு உலக்கைக் கட்டையைத் தூக்கிக் கொண்டு வருகிறது — சமையல் அடுப்புக்கு!"

"ஓ! அந்தக் கட்டைகளைச் சொல்லுதா சாமி! பலே மூருகையான்னேன்! அப்போ சரி சாமி! சரி! கொஞ்சம் இப்படி உட்கார்ந்து மூலிகையைக் கசக்கட்டும்! இருக்கிற மூலிகையைக் கசக்கட்டும்! இருக்கிற சஞ்சீவி முழுதும் இங்கேயே காலியாகி விடட்டும்! சொக்கிகுடி எல்லையிலே போய் விட்டால் பழைய சரக்கே கூடாது! அப்படியே புதுச் சரக்காகத்தான் இந்தக் கட்டைகளுக்கு வேண்டும்! என்ன பழனிப் பண்டாரம்! என்ன சொல்லுது?"

பண்டாரங்கள் அப்படியே பாறையிலே உட்கார்ந்து கஞ்சாப் பிடிக்க ஆரம்பித்தார்கள். பின்னால் வந்த கூட்டமும் காவடிகளைக் கீழே இறக்கி வைத்துவிட்டுக் கோஷ்டியிலே சேர்ந்து கொண்டது!

"ஏஞ்சாமி! இலஞ்சிப் பண்டாரம் இப்போ கமன ஓடியை விட்டுட்டுதாமே! மெய்தானா அது?" என்று கேட்டது புதிதாக வந்து சேர்ந்த இன்னொரு பண்டாரம்.

"யாரு? இட்டிலிப் பண்டாரமா கேக்குது?" என்று நிமிர்ந்து பார்த்தது சட்டி. கண் 'ஜிவு ஜிவு' என்று கனகாம்பரப் பூவைப்போல இருந்தது!

"ஆமா! இட்டிலிதான் கேக்குது! ரொம்பப் பசியாக் கேக்குது சாமி!" என்றது மற்றொரு வேற்றுக் குரல்! அதற்குப் பட்டிப் பரதேசி என்று பெயர்! அதன் வலது கையிலே ஒரு சங்கிலி. அந்தச் சங்கிலியின் பிடி ஒரு வாலறுந்த நாயின் கழுத்தை வளைத்துக் கொண்டு கிடந்தது! அந்த நாயும் அதைப் பிடித்திருந்த சங்கிலியுந்தான் இப்பொழுது பட்டிப் பரதேசியின் பந்த பாசங்கள்! மற்றப்படி உலக பாசம் என்று ஒன்றும் கிடையாது அதற்கு!

"இது யாரு பதில் சொல்லுகிறது! அடடே! பட்டியா! என்ன சமுசாரப் பரதேசி! சௌக்கியமா இருக்குதா?" என்று பட்டியை விசாரித்தது சட்டி! இதற்குள் கோஷ்டி பெரிதாகப் போய் விட்டது. இத்தனை கூட்டத்தில் தன்னுடைய கேள்விக்குப் பதில் கிடைக்காமல் போய்விடுமோ என்று பயந்த இட்டிலி, "இலஞ்சிச் சாமியைப் பற்றிக் கேட்டுது இந்தக் கட்டை!" என்று மேலும் தனது கேள்வியை அழுத்தியது.

"இலஞ்சிச் சாமி இப்போ இருக்கிற நிலைமைக்கு அதைப்பத்தி இந்த அன்னக் காவடிகள் எல்லாம் பேசுகிறதே தப்பு! தெரிஞ்சுதா! பூர்வாசிரமத்திலே அந்தக் கட்டை யாரு தெரியுமா! தெரியுமா! தெரியுமாங்கிறேன்!"

இப்படிச் சொல்லிக் கொண்டே கஞ்சா தீர்ந்துபோன குழலைப் பாறையிலே ஓங்கி ஒரு தட்டுத் தட்டியது சட்டிப் பரதேசி. பட்டிக்கு உடம்பெல்லாம் ஆடியது. அந்த ஆட்டத்தில் இட்டிலியை அப்படியே கடிக்காமல் விழுங்கி விடுவது போல ஒரு பார்வை பார்த்தது பட்டிப் பரதேசி.

பட்டியின் வாய்க்குப் பயந்து போய் அப்படியே, இருந்த இடத்திலேயே பம்மி விட்டது இட்டிலி! தூரத்தில் பயந்து போய் உட்கார்ந்திருந்த வாழைப்பழச் சாமி இட்டிலியையும் பட்டியையும் ஏற இறங்கப் பார்த்துக் கொண்டது!

* * *

மலைக் காட்டில் அங்கங்கே பாறைகளில் தங்கியும் படுத்துறங்கியும், துஷ்டர்களைப் பற்றியோ, விலங்குகளைப் பற்றியோ எவ்வித பயமும் இல்லாமல் இந்தப் பண்டார கோஷ்டிகள் எல்லாம் சொக்கி குடிக்குப் போய்ச் சேர மூன்று நாள் ஆயிற்று. நான்காம் நாள் மாலையில் பரதேசிக் கோஷ்டி சொக்கி குடியின் எல்லைக்கு அருகே வரும்போது அங்கங்கே மரங்கள் வெட்டப் பட்டுப் பாறைப் பிரதேசங்கள் எல்லாம் திட்டுத் திட்டாகக் காட்சி தந்தன. பாறைச் சரிவுகளில் எல்லாம் பெரிய பெரிய உக்கிராண அடுப்புகள் போடப்பட்டு, மலை மலையாக விறகுக் கட்டைகள் குவிக்கப்பட்டுக் கிடந்தன. பூஞ்செடிகளி லெல்லாம் மருந்துக்குக்கூட ஒரு பூவைக் காணோம். எல்லாவற்றையும் பறித்துக் கொண்டு போயிருந்தார்கள். மூங்கிற் கழைகள் நின்ற இடம் எல்லாம் இப்பொழுது கட்டாந் தரையாக இருந்தது! பாக்கு மரங்களில் நாகரிக உலகத்தின் தீவட்டிகளான 'பெட்ரோமாக்ஸ்'

விளக்குகள் தொங்கிக் கொண்டிருந்தன! குடியிருப்பை நெருங்க நெருங்க மரத்துக்கு மரம் தோரணம் கட்டப்பட்டிருந்தது! நெட்டிலிங்கக் குழைகளும், மா இலைகளும் ஓலைக் குருத்துக்களும் எப்படி யெப்படி யெல்லாமோ சேர்த்துப் பின்னப்பட்டுப் பனை நாரிலே தொங்கிக் கொண்டிருந்தன! அங்கங்கே சிலம்பம் ஆடுவதற்குப் போடப் படும் கயிற்று வளைவுகளும் ஆடம்பரமாகக் காட்சி தந்தன. மலைப்பாதையின் இரண்டு புறத்திலும் அதிர் வேட்டுக்களுக்காகக் கூந்தற் பனைகளைச் சீவி விட்டிருந்தார்கள். நடந்து செல்லச் செல்லப் பளிஞர்களின் பாட்டும் கூத்துமாகக் கேட்டுக் கொண்டிருந்தது.

பண்டாரங்கள் இந்த அதிசயங்களையெல்லாம் பார்த்துக் கொண்டே நடந்தார்கள். சொக்கிகுடிக்குள்ளே நுழையும் போது யானைகளின் பிளிறல் ஓசை கேட்டு அந்த "ஆணைப்பட்ட" சட்டிப் பரதேசியுங்கூட நடுநடுங்கிப் போய் ஓசை வந்த திசையைப் பார்த்தார். குட்டி யானைகளும் பெரிய யானைகளுமாக ஒரு வன வளைவுக்குள்ளே நின்று கொண்டிருந்தன.

யானைக் கூட்டங்களுக்கு அருகிலே மான்கள் துள்ளி விளையாடிக் கொண்டிருந்தன. சொக்கி என்ற மந்திரக் கன்னியின் இந்திர ஜாலத்திலே கட்டுப்பட்டு அந்த வனத்தின் விலங்குகள் எல்லாம் வாய் மூடி மௌனமாக நின்றுகொண்டிருந்தன!

சொக்கி கல்யாணத்துக்காகப் புறப்பட்டு வரும் பரதேசிகளின் கோஷ்டிக்கு இதையெல்லாம் பார்த்ததும் ஒரே ஆனந்தம். இனிமேல் ஒரு வாரத்துக்கு முருகானந்தமான சாப்பாடு. வேண்டிய மட்டும் மந்திர மூலிகை! ஏனென்று கேட்பாரில்லாமல் அந்த வனாந்திரத்திலே எங்கே வேண்டுமானாலும் தனிக்காட்டு ராஜாவாகச் சுற்றலாம். என்றாலும் இலஞ்சிச் சாமியாரை நினைத்தால் மட்டும் ஒரு சிறு நடுக்கம். எத்தனைதான் தங்களுடைய கோஷ்டியிலே சேர்ந்தவராக இருந்திருந்தாலும், என்றைக்குமே அவருடைய போக்கு அவர்களிடமிருந்து சற்று விலகியே தான் இருக்கும். 'கமணஓடி' ஒன்று தான் அவரை இவர்களோடு சரிநிகர் சமானமாக ஐக்கியப் படுத்தி வந்தது. இப்பொழுது அந்தப் பழக்கமும் அவரிடம் இல்லை என்று கேள்விப்பட்டதிலிருந்து பண்டாரங்களுக்குக் கொஞ்சம் பதற்றமாகத்தான் இருந்தது. ஆனாலும் கல்யாணச் சந்தடியில் எதற்குத் தான் கட்டுப்பாடு உண்டு? அதிலும் சொக்கப்பன் இந்தச் சந்தர்ப்பத்தில் எத்தனை உற்சாகமாக இருப்பான்! கேட்பதற்கு முன்னால் 'ஸஸ்யாதிகள்' வந்து குவிந்து விடுமே! என்ன கவலை!

இப்படி எண்ணியதும் அன்னக் காவடிகள் குதிபோட்டுக் கொண்டு நடந்தார்கள்.

சூரியன் மேற்குக் குன்றிலே விழுந்து வானமெல்லாம் சிவந்தது. இருள் கவிந்து வருவதற்கு முன்பு நிலவு உதயமாகி விட்டது. "பாலும் தெளிதேனும் பாகும்" கலந்து வானத்திலே தெளித்த மாதிரி, நிலவின் ஒளியானது வானம் எங்கும் இன்பமாகப் பரந்தது. மரங்கள் எல்லாம் வெள்ளி மரங்களாக விளங்கின. பாறைகள் எல்லாம் வெள்ளிப் பாறைகளாக நின்றன. நீரோடைகளில் எல்லாம் வெள்ளி உருகி ஓடிக் கொண்டிருந்தது. யானைகளும், மான்களுங்கூட வெள்ளி முலாம் பூசிக் கொண்டு நின்றன. பண்டாரங்களின் தாடியெல்லாம் வெள்ளிக் கம்பிகளாக மின்னிக் கொண்டிருந்தது. அவர்கள் கையிலே இருந்த பிச்சை ஓடுங்கூட வெள்ளி ஓடாக மின்னியது! இந்த வெள்ளி மயமான சரீரங்கள் எல்லாம் வெள்ளியிலே செய்து நிறுத்தியது போலத் தோன்றிய மாபெரும் ஆலமரத்தை நோக்கி நடந்தார்கள்.

ஆலமரத்தின் அடியிலே ஒரு பெருங் கூட்டம் உட்கார்ந்து கொண்டிருந்தது. அந்தக் கூட்டத்துக்கு நடுநாயகமாக வீற்றிருந்தார் இலஞ்சிச் சாமியார். அவருக்கு அருகிலே சொக்கியும் அவளுடைய சேடிப் பெண்களும் உட்கார்ந்திருந்தார்கள். மற்றொருபுறம் அப்புலிங்கம், அவனுடைய தகப்பனார், ரவீந்திரன், நாகரத்தினம், உஸ்தாத் மீரான், பகேரான் என்று ஒரு பெருங் கோஷ்டி வளைவாக உட்கார்ந்து கொண்டிருந்தது. கந்தப்பன் திரணையிலே உட்கார்ந்து பல்லில்லாத பெரியவர்களுக்கு வெற்றிலை இடித்துக் கொடுத்துக் கொண்டிருந்தான்.

"நண்பர்களே!" என்று பேச ஆரம்பித்தார் இலஞ்சிச் சாமியார்.

"நண்பர்களே! சந்திரிகாவும் கல்யாணி அம்மாளும் குத்துவிளக்கு ஏற்றிக் கொண்டிருக்கிறார்கள். சாவித்திரி அம்மாள் கோலம் போடுகிறார்கள். இன்னும் கொஞ்ச நேரத்தில் அவர்களும் இங்கே வந்து விடுவார்கள். அதுவரை ஒரு சிறிய கோஷ்டிப் பாடல் நடைபெறும். அதன் பிறகு நம்முடைய வனநாயகி ஸ்ரீமதி சொக்கி அவர்கள் 'கந்தப்பனின் இடது கை' என்ற பொருள் பற்றி ஒரு சொற்பொழிவு நிகழ்த்துவார்கள்!"

இவ்வாறு பொதுக் கூட்டங்களிலே தலைவர் நிகழ்த்துகிற முன்னுரையைப் போலப் பேசி நிறுத்தினார் இலஞ்சிச் சாமியார். எல்லாரும் அவருடைய வார்த்தையை அப்படியே ஆமோதிப்பது போலக் கை தட்டினார்கள்.

(அடுத்த இதழில் முடியும்)


Printed & Published by T. Sadasivam at the "Kalki" Press, No. 20, Dr. Guruswamy Mudaliar Road, Kilpauk, Madras - 10. Editor : Mi. Pa. Somasundaram

TH. 1817



உங்கள் கூந்தலில் அமைந்திருக்கும் சுருள்களை எழிலோங்கச் செய்யுங்கள்

யாவரும், சுருண்டு வளைவுடனோடிருக்கும் கூந்தலைக் கண்டு போற்றுகின்றனர். ஏதாவதொரு கெட்டியான எண்ணெயை உபயோகித்து சிக்குப் பிடிக்கும் விதத்தில் கூந்தலை படிய வைக்கக் கூடாது. கூந்தலுக்கான டாம்கோ வாசனைத் தேங்காய் எண்ணெயை உபயோகித்து உங்கள் கூந்தலின் இயற்கையான வளைவுகளை நிலைக்கச் செய்யுங்கள். உயர்ந்த பாணியில் பரிசுத்தப்படுத்திய இந்த லேசான எண்ணெய், மல்லிகை, ரோஜா, லெவண்டர் ஆகிய மூன்று நேர்த்தியான வாசனைகளில் கிடைக்கிறது.



25 வருஷங்களாக இந்தியாவின் மிகவும் விரும்பப்பட்ட கூந்தல் தைலம்.



வாரத்திற்கொருமுறை கூந்தலுக்கு டாம்கோவின் தேங்காய் எண்ணெய் ஷாம்பூவை உபயோகித்து ஸ்நானம் செய்யுங்கள். இதனால் உங்கள் கூந்தல் சுத்தமாயும் இயற்கையான சுருள்களுடனும் இருக்க உதவும்.

டாம்கோ

கூந்தலுக்காக வாசனைத் தேங்காய் எண்ணெயும் ஷாம்பூவும்

டாடா ஆயில் மில்ஸ்

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

